விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 19 வெள்ளிக்கிழமை (01.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 104

## 150 சிங்கள மாணவர்கள் இணைந்து 8 தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல்

### ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் பதற்றம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்தில் சுமார் 150க்கு மேற்பட்ட சிங்கள மாணவர்களால் கடுமையான தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட8 தமிழ் மாணவர்கள் பதுளை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்,

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்தில் 2 ஆம் வருடத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களு க்கும் சிங்கள மாணவர்களுக்கும் இடையில் சமீப காலமாக கருத்து முரண்பாடு இருந்து வந்துள்ளது. அங்குள்ள சிங்கள கலாசார சங்கத்தில் உள்ள மாணவர்கள் தமிழ் மாணவர்களை பல்கலைக் கழகத்தில் உள்ள சிற்றுண்டிசாலைக்குள் வரக் கூடாது எனக் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் இரவு உலகக்கிண்ண போட்டி

23ஆம் பக்கம் பார்க்க....

## மைத்துனர் குத்திக்கொலை; கொலையாளிக்கு மரண தண்டனை

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தனது மைத்துனரை கத்தியால் குத்திக் கொலை செய்த திருநெல்வேலி பனிக்கர் வீதியைச் சேர்ந்த யோகராசா சதீஸ் (வயது 28) என்பவருக்கு மரண தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று தீர்ப்பளித்தார்.

2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் 5 முறை கத்திக்குத்துக்கு இலக்காகிய கந்தசாமி இதயன்

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் தீர்வை பந்தாடியதால் பிரபாகரன் ஆயுதம் ஏந்தினார்

### தவறுகளை பகிர்கிறார் அமைச்சர் டிலான்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல், அரசாங்கங்கள் அதனை பந்தாடியமையாலேயே வடக்கில் ஆயுதப் போராட்டம் தலைதூக்கியதுடன், பிரபாகரன் என்ற இளைஞர் ஆயுதமேந்தினார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இனவாத, பிரதேசவாத, குலவாத செயற்பாடுகளுக்கு இனி ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நாங்கள் கட்சியை விஸ்தரிப்பதற்காக பல்வேறு பகுதிகளிலும் அடிமட்ட கூட்டங்கள் மற்றும் இளைஞர் ம்ாநாடுகளை நடத்தியிருந்தோம்.

23ஆம் பக்கம் பார்க்க....

# புலிகள் எப்போது தலை தூக்குவர்?

## ராஜபக்ஷவினர் எதிர்பார்ப்பதாக அமைச்சர் சுஜீவ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போது மீண்டும் தலைதூக்குவார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே ராஜபக்ஷ குடும்பம் அரசியல் ஆசை கொண்டு வாழ்வதாக சர்வதேச முதலீட்டு அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

24ஆம் பக்கம்

## எறிகணை மீட்பு

(மல்லாவி)

வீடு கட்டுமானப் பணிக்காக தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான நிலத்தினை தோண்டிய போது அதிலிருந்து வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் ஏ9 வீதி மாங்குளம் 222 கிலோமீற்றர் மைல்கல் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக இது தொடர்பில் மாங்குளம் 574-வது படைப்பிரிவு இராணுவத்தினருக்கு அறிவிக்கப்

24ஆம் பக்கம் பார்க்க....

## பொது எதிரணியினர் ஐ.நாவில் போராட்டம்

(கொழும்பு)

ஐ.நா சபை முன்றலில் இலங்கையின் பொது எதிரணியினர் நேற்று போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

நாட்டின் படைவீரர்களை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் மகிந்த சார்புடைய பொது எதி

24ஆம் பக்கம் பார்க்க....

## மண்டைதீவில் ஆட்டோ விபத்து தந்தை பலி; தனயன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதிக்கு குறுக்கே மாடு பாய்ந்ததில் கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்,

அவரின் மகன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்

24ஆம் பக்கம் பார்க்க....

## மன்னாரில் மீண்டும் சோதனை கெடுபிடி

(கொழும்பு)

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிற்கு முன்பாக மீண்டும் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது மன்னாரில் சில பிரதேசங்களில் வீடுகளிலும் சோதனை நடத்திய படையினர், வீதிகளிலும் வாகனங்களையும் வழி மறித்து சோத

23ஆம் பக்கம் பார்க்க....

## ஏப்ரல் -01

**முட்டாள்கள் தினமான இன்று உங்களை யாராவது முட்டாளாக்க முயற்சிப்பார்கள். உசாரடைந்திருங்கள்...!**

## மகிந்தவிற்கு பந்தம் பிடித்தவர்களே நாட்டை குழப்ப முயற்சிக்கின்றனர்

### இடமளிக்க மாட்டோம் என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவிற்காக அன்று பந்தம் பிடித்தவர்கள் இன்றும் அவருக்கு பந்தம் பிடித்துகொண்டு நாட்டை குழப்புகின்றனர். அவர்களிற்கு அஞ்சி நாட்டை குழப்ப நாம் இட்மளிக்க மாட்டோம். மகிந்தவுக்காக மேளமடிக்கும் நபர்களுக்கு நாம் பதில் கூறவேண்டிய அவசியம் இல்லை. பரிவினையுடன் நாட்டில் ஆட்சிசெய்ய நாம் தயாராகவும் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கடந்த காலத்தை நினை

23ஆம் பக்கம் பார்க்க....



## உரிய முறையில் நிதி முகாமைத்துவம்

(கொழும்பு)

ஜனாதிபதியாக ஒரு வருடம்கடமை புரிந்ததில் நிதி ஒழுக்கம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பாக தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் செலவுகள் நூற்றுக்கு அறுபது விகிதம் குறைக்கப்பட்டுள்ளதுடன், வெளி

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மின்சார சபையில் நிர்வாகத்துறை மாற்றப்படும்

### சம்பூர் அனல்மின் செயற்படுத்தப்படும்–அஜித்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை தனியார் மயமாக்கப்படாது. ஆனால் நிர்வாகத்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனத் தெரிவித்த மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா,

சம்பூர் அனல்மின் நிலையம் நாட்டுக்கு அவசியமானது. எனவே எதிர்ப்பவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வோம் என்றும் பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்

24ஆம் பக்கம் பார்க்க....

## அலுவலக கடமைக்கு திரும்பினார் ராஜித

(கொழும்பு)

சத்திர சிகிச்சைக்குள்ளாக்கப் பட்டிருந்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மீண்டும் தனது அலுவலக கடமைகளுக்குத் திரும்பியுள்ளார்.

இருதயத்துக்கு குருதியை எடுத்துச் செல்லும் குழாயொன்றில் ஏற்பட்டிருந்த அடைப்பு காரணமாக

24ஆம் பக்கம் பார்க்க....

## நாமலின் வங்கிக் கணக்குகளை பரீட்சிக்க நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

நாமல் ராஜபக்ஷவுக்கு சொந்தமானது எனக் கூறப்படும் கவர்ஸ் கோப்ரேட் நிறுவனம் மற்றும் என்.ஆர்.கன்சல்டேசன் நிறுவனம் ஆகியவற்றின் வங்கிக் கணக்குகளின அறிக்கையை பரீட்சிக்க, நிதி மோசடி விசாரணைப் பிரிவு பொலிஸாருக்கு அனுமதி வழங்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ், வங்கி முகாமையாளர்களுக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு சொந்தமானது எனக் கூறப்படும் கவர்ஸ் கோப்ரேட் நிறுவனம் ஹெலோ கோப் என்ற நிறுவனத்திற்கு சொந்தமான 125

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்கு அவசர நிலையை படையினர் எதிர்கொள்வர்

## யாழ்.கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் எந்த அவசர நிலையையும் எதிர் கொள்ளும் வகையில் படையினர் தயார் நிலையில் இருப்பதாக படைத்தரப்பின் யாழ். தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் வீடொன்றில் இருந்து தற்கொலை தாக்குதல் அங்கி மற்றும் கிளைமோர்கள் உள்ளிட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தகவல் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளவரிடம் முழுமையான விசாரணைகள் நடத்திய பின்னரே, அவர் இந்த வெடி பொருட்களை மறைத்து வைத்திருந்தமைக்கான நோக்கம் என்ன என்பது பற்றி அறிந்து கொள்ள முடியும்.

வடக்கில் எந்த அவசர நிலையையும் எதிர் கொள்ளும் வகையில், படையினர் மூலோபாய ரீதியாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையில், சாவகச்சேரியில் வெடி பொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முன்னாள் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். (செ-12)


**தேவை**

பிரபல புடவை ஸ்தாபனத்திற்கு (சாறி, சல்வார்) மிக அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.


P.No:-0770230322, 021 2285750

**கிளிநொச்சி.** (சி-4160)


# மரண அறிவித்தல்

கீரிமலையை பிறப்பிடமாகவும் 4-ம் வட்டாரம் கோம்பாவில் புதுக்குடியிருப்பினை வதிவிடமாகவும் கொண்ட

## ஆறுப்பிள்ளை சிவநாதன்



இவர் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லதாங்கி மற்றும் காயத்திரி, விஜயமோகன், பவானந்தன், விக்னேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, டலோஜினி, விஜிதா ஆகியோரின் மாமனாரும் தினகர், செந்தூரன், சேயோன், அபினாஸ் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.04.2016 இன்று வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் இரணைப்பாலை இந்துமயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-4186)

உ
சிவமயம்

# திருக்கேதீச்சர ஆலயத்தின் மகிமையைப் பேணுவோம்



திருக்கேதீச்சர ஆலயத்திற்குரிய பசுக்களும் எருதுகளும் வதை செய்யப்பட்டதாக பத்திரிகைகளிலும் துண்டுப் பிரசுரங்களிலும் விஷமத்தனமான பொய்ப் பிரசாரங்கள் நடாத்தப்படுவதுடன் "நிதிநெருக்கடி காரணமாக ஆலயத்தின் பசுக்கள் விற்பனை" என ஆலய நிர்வாகத்தின் பெயரில் ஒரு பொய்யான, அநாமதேய துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டு இருக்கின்றது.

இவையெல்லாம் ஒரு புனிதத் தலத்தின் மகிமைக்கு மாசுபடுத்தும் செயல்கள். அவை மிகவும் வன்மையாகக் கண்டிக்க வேண்டியவையாகும்.

ஆலயத்தில் ஏதேனும் தவறு நடந்திருந்தது எனக் குற்றச்சாட்டுக் கிடைத்தால் ஆலய நிர்வாகத்தினர் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்பதை அறியத் தருகின்றோம்.

திருப்பணிச்சபை அங்கத்தவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் பொறுப்புடன் செயற்படுகிறது, அவ்வாறு தொடர்ந்தும் செயற்படும் என்பதனை சகலருக்கும் உறுதிபடக் கூறிவைக்க விரும்புகிறோம்.

**மா.தவயோகராஜா**
**தலைவர் - அறங்காவலர் சபை**

**கந்தையா நீலகண்டன்**
**தலைவர் - ஆலயத் திருப்பணிச் சபை**

**திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை**
**31.03.2016** (C-4185)

# வவுனியா பிரஜைகள் குழு புதிய கட்டமைப்பு எதுவுமில்லை

## தலைவர் தேவராஜா அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் புதிய கட்டமைப்பு என்ற செய்தி உண்மைக்கு புறம்பானது என வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் கி.தேவராஜா அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வலம்புரியில் வெளிவந்த செய்தி தொடர்பில் மறுப்புத் தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் கி.தேவராஜா வவுனியா பிரஜைகள் குழுவின் பொதுக்கூட்டம் மிக விரைவில் நடைபெறவுள்ளது.

அந்தக் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கும் வரை எந்தவிதமான கட்டமைப்புகளும் இயங்க முடியாது என்று அறிவித்துள்ளார். (ரு)

## இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
## கல்வியாண்டு 2016/17

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கை நெறிகள் | அனுமதித்தகைமைகள் | மொழி | கற்கை நெறிக் காலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி (Certificate Programme in Social Sciences) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். | தமிழ் / ஆங்கிலம் | 2 வருடம் | 08.03.2016 09.04.2016 |
| இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா (Diploma in Youth Development Work) (DYD) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் அத்துடன்<br>• க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது<br>• இ.தி.ப.கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு கற்கை நெறியில் இரண்டாம் மட்டத்தினை (Level 2) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது<br>• இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட வேறு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இளைஞர் அபிவிருத்தியில் துறைசார் அனுபவமும் இதில் கருத்தில் கொள்ளப்படும். | தமிழ் / ஆங்கிலம் | 2 வருடம் | 08.03.2016 09.04.2016 |
| சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி (BA Degree in Social Sciences) | • 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்<br>• இ.தி.ப.கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு கற்கை நெறியில் இரண்டாம் மட்டத்தினை (Level 2) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது<br>• க.பொ.த உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது<br>• இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவற்றுக்குச் சமமான அல்லது மேற்பட்ட வேறு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | ஆங்கிலம் | 3 வருடம் | 08.03.2016 09.04.2016 |

இக்கற்கைநெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் கற்கை நிலையங்களில் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல 366, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155 ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஓட்டுசுட்டான்வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 071 - 3522367 |
| மன்னார் கற்கை நிலையம் | | 077 - 5625352 |

(சி-4181)

பதிவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

**வருடாந்த பொதுக் கூட்டம் 2016**

காலம் 17-04-2016
நேரம் காலை 10.00மணி
இடம் : யாழ். மத்திய கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடினும் இதனை ஏற்று பொதுக் கூட்டத்திற்கு சமூகம் தரவும்.

குறிப்பு : அங்கத்தவர்கள் தமது முகவரியில் மாற்றம் இருப்பின் கீழ்வரும் முகவரியுடனோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**Y.NISHANTHAN**
**Address : 176, Ramalingam Road,**
**Thirunelvely east, Jaffna.**
**0777110816**

பொதுச் செயலாளர்,
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் (4062)

## இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையில் கடலுக்கடியில் தொலைத்தொடர்பு கேபிள்

### மாத்தறையில் பெருமளவு மக்கள் பார்வையிட திரண்டனர்

இலங்கைக்கும்சிங்கப்பூருக்குமிடையில்சர்வதேச தொலைத்தொடர்பு வலைப் பின்னலை ஏற்படுத்தும் நோக்குடன் இரு நாடுகளுக்கும் இடையில் கடலுக்கடியிலான கேபிள் இணைப்பு வேலைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருகடல் மைல் தொலைவில் மாத்தறை வெல்லமடம் பகுதியில் இருந்து படகுமூலம் கடலுக்கடியிலான கேபிள் இணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பின்னர் இது சிறிலங்கா ரெலிக்கொம்மின் மாத்தறை நிலையத்துடன் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சிங்கப்பூருக்கும் பிரான்ஸுக்குமான கடலுக்கடியிலான கேபிள் இணைப்பு மூலம் இலங்கை உட்பட 18 நாடுகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கேபிள் இணைப்பு தொடர்பான வேலைகள் இந்த வருட இறுதிக்குள் முடிவடைவதுடன் அதன் பின்னர் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் புதிய பல களங்கள் திறக்கப்படும் என தொலைத் தொடர்பு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கேபிள் இணைப்பு நிகழ்வைப் பார்வையிடுவதற்கு வெல்லமடுவில் பெருமளவானோர் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# தேசிய பாதுகாப்புடன் அரசு விளையாடுகிறது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாட்டின் தேசிய பாதுகாப்புடன் அரசு விளையாடுவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.**

கட்சியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் கடந்த காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து யுத்த ஆயுதங்களையும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினர் பயன்படுத்தியதாக கூறப்படுகிறது. ஆனால் அவை அனைத்துமே தற்போது, புதுப்பிக்கப்பட்டவையாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட பொருட்களை பொதி செய்ய கடந்தவார சிங்கள பத்திரியையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதேவேளை, அந்த பொதியில் வெள்ளவத்தை என குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இலங்கையில் வரலாறு காணாத வகையில் ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாகவும், இதற்கு நாட்டில் ஆட்சி அமைக்க தெரியாதவர்கள் ஆட்சியில் இருப்பது தான் காரணம் என அவர் தெரிவித்தார்.

அண்மையில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறியும் சட்டமூலத்தில் நாட்டின் பாதுகாப்பு சார்நத மற்றும் சில ஒப்பந்தங்கள் தொடர்பில் ஊடகங்களும் மக்களும் தகவலை அறிந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கான சரத்துக்களே உள்ளடக்கப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (இ-5)

## தடையின்றி மின்சாரம் வழங்க இரு முடிவுகள்

### அமைச்சர் கயந்த தெரிவிப்பு

அண்மைக் காலமாக துண்டிக்கப்பட்ட மின்சார விநியோகம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சரவையில் இரு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் பிரகாரம், நாடு பூராகவும் ஒரே நேரத்தில் இடம்பெற்ற மின் துண்டிப்பை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மின்வலு மற்றும் வலுசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபட்டிய ஆகியோரது தலைமையில் நியமிக்கப்பட்ட குழு மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவால் நியமிக்கப்பட்ட சி. மாளியத்தை தலைமை யில் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகள் நடைமுறைப் படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் தினங்களில் எதிர்ப்பார்க்கப்படும் மழை வீழ்ச்சி இல்லாத பட்சத்தில் ஏற்படும் மின்தடைக்கு முகம்கொடுக்கும் வகையில் அத்தியாவசியமாக தேவைப்படும் போது, மின்னை தனியார் துறையிடம் இருந்து கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இதன்போது, ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக மேலும் தெரிவித்தார். (இ-5)



## ஐ.தே.கவுடன் இணையேன்

கனவில் கூட ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட தயாரில்லையென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

சுதந்திர கட்சியின் தீர்மானத்திற்கு அமையவே தேசிய அரசாங்கத்தில் இணைந்து செயற்பட்டு வருகிறேன். இது எனது தனிப்பட்ட தீர்மானம் அல்ல கட்சியின் தீர்மானமாகும் எனத் தெரிவித்தார். (இ-5)

## குணரட்னத்திற்கு ஒருவருடம் சிறை

குமார் குணரட்னத்திற்கு ஒரு வருட சிறை தண்டனை விதித்து கேகாலை நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய பிரஜையான குணரட்னம் கடந்த வருடம் இலங்கைக்கு வந்து, கேகாலை அக்குருவெல்ல வில் உள்ள அவரது தாயார் வீட்டில் தங்கியிருந்த போது, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

முன்னிலை சோசலிக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினரான கும்ார் குணரட்னம் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 100 நாட்களுக்கு மேல் விளக்கமறியலில் வைகக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



## இலஞ்சம் பெற்ற அதிகாரிகள் இருவருக்கு நேற்றுப் பிணை

(கொழும்பு)

இலஞ்சம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சுங்க அதிகாரிகள் இருவர் பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

குறித்த அதிகாரிகள் இருவரும் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டுக்கு அமை யவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும அதிகாரிகள் இருவரும் இரண்டு இலட்ச ரூபாய் ரொக்கப் பிணையிலும், 50 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையிலும் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இவர்களது வெளிநாட்டு பயணங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும்,குறித்த அதிகாரிகள் சாட்சிகளை மிரட்டும் பட்சத்தில் இவர்களது கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்படும் எனவும் நீதவான் தெரிவித்துள்ளார். (இ-5)

## தற்கொலை அங்கி குறித்து பீரிஸ் ஏன் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை?

### பிரதமர் ரணில் கேள்வி

சாவகச்சேரியில் வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு பயனபடுத்தப்படும் அங்கி மற்றும் ஆயுதங்கள் குறித்து ஜீ.எல். பீரிஸ் ஏற்கனவே அறிந்திருந்தால், முன்னதாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருக்கலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த தற்கொலை அங்கி உட்பட ஆயுதங்கள் கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்திற்கு கொண்டு வரப்படவிருந்ததாக ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார்.

இந்த தகவல்களை அறிந்திருந்தும் ஏன் அவர் அதனை பொலிஸாருக்கு தெரியப்படுத்தவில்லை எனவும் பிரதமர் கேள்வி எழுப்பியுள்ளார்.

திறைசேரியின் புதிய கட்டடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

ஜீ.எல். பீரிஸ் எனது நண்பராக இருந்தாலும் தற்போது அவர் நெப்போலியனின் பாத்திரத்தில் நடித்து வருகிறார்.

யுத்த காலத்தில் கைப்பற்றப்பட்ட தங்கத்திற்கு என்ன ஆனது என்பது குறித்தும் அவர் பேச வேண்டும்.

வடக்கில் வீடொன்றில் இருந்து மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் ஆயுதங்கள் குறித்து எனக்கும், ஜனாதிபதிக்கும் தெளிவுப் படுத்தப்பட்டது. இரசாயன பகுப்பாய்வாளரும் இது குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

யுத்தங்கள் நடைபெற்ற நாடுகளில் இப்படியான பொருட்களை யுத்தத்திற்கு பின்னர் கண்டுபிடிக்க முடியும். எவ்வாறாயினும் இது குறித்து விசாரணை நடத்தி உண்மையை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-5)



மூதறிஞர் சா.ஜே.வி.செல்வநாயகத்தின் 118 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி முற்றவெளியில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நினைவுதின நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு தந்தை செல்வா நிதியத்தின் தலைவ ரும், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயருமான எஸ்.ஜெபநேசன் அவர்கள், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டு மாலை அணிவித்தனர். பின்னர் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலர் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று தந்தை செல்வா நிதியத்தின் தலைவர் எஸ்.ஜெபநேசன் அஞ்சலி உரையாற்றினார்.

இந்நினைவு நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி, தமிழரசு கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகம், தமிழரசு கட்சியின் யாழ்.மாவட்ட தலைவர் செ.கனகசபை உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:- உ.சாளின்)

## இருபது-20 உலகக்கிண்ணம் - 2016

# சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழையும் மே.தீவுகள்

சிம்மன்ஸின் அதிரடி ஆட்டத்தால் இந்திய அணியை வீழ்த்தி இருபது-20 உலகக்கிண்ண இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது மேற்கிந்திய அணி

இந்திய அணி மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது உலகக்கிண்ண அரை இறுதி போட்டி நேற்று நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ள தீர்மானித்தது

இந்தியாவின் சார்பில் ரோகித் சர்மா மற்றும் ரகானே தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

இருவரும் மேற்கிந்திய பந்துவீச்சாளர்களின் பந்துகளை சமார்த்தியமாக ஆடினார்.

இந்நிலையில் 3 சிக்ஸர், 3 பவுண்டரிகள் உட்பட 43 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரோகித் ஆட்டமிழந்தார். பின்னர் ரகானேவுடன் ஹோலி இணைந்தார்.

முதலில் நிதானமாக ஆடிய ஹோலி பின்னர் தனது அதிரடியை காட்டினார். ரகானே அவருக்கு நல்ல ஒத்துழைப்பு தந்தார்.

இந்நிலையில் 2 பவுண்டரி உட்பட 40 ஓட்டங்கள் எடுத்த ரகானே சிக்ஸர் அடிக்க ஆசைப்பட்டு தனது விக்கெட்டை இழந்தார்.

இதையடுத்து தோனி களமிறங்கினார். மறுமுனையில் அரைசதத்தை நிறைவு செய்த ஹோலி மேற்கிந்திய பந்து வீச்சாளர்களின் பந்தை நாலாப்பக்கமும் விரட்டினார்.

இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது. இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு இந்தியா 192 ஓட்டங்களை குவித்தது.

193 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய மேற்கிந்திய அணிக்கு தொடக்கத்திலேயே பேரதிர்ச்சி காத்திருந்தது.

இந்திய பந்துவீச்சாளர்களை துவம்சம் செய்வார் என எதிர்பார்க்கப்பட்ட கிறிஸ் கெய்ல 6 பந்துகளை மட்டுமே சந்தித்திருந்த நிலையில் பும்ரா பந்துவீச்சில் 5 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து அந்த அணியினருக்கு அதிர்ச்சி அளித்தார்.

இதனையடுத்து சார்லசுடன் ஜோடி சேர்ந்த சாமுவேல்ஸ் 7 பந்துகளில் 8 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் நெஹ்ரா பந்து வீச்சில் ரஹானேவிடம் தனது விக்கெட்டினை பறிகொடுத்தார்.

ஒருபக்கம் விக்கெட்டுகளை தொடர்ந்து பறிகொடுத்தாலும் நிதானத்தை இழக்காமல் தொடக்க வீரராக களமிறங்கிய சார்லஸ் தனது பாணியில் ஓட்டங்களை குவித்துக் கொண்டிருந்தார்.


13 ஓவர்கள் கடந்திருந்த நிலையில் விராட் ஹோலி பந்து வீச வந்தார். தனது முதல் பந்திலேயே 52 ஓட்டங்கள் குவித்திருந்த சார்லஸ் விக்கெட்டினை பறித்தார்.

இதனையடுத்து 36 பந்துகளில் 50 ஓட்டங்கள் குவித்து களத்தில் இருந்த சிம்மன்சுடன் றஸல் இணைந்தார்.

நிதானமாக ஆடிய மேற்கிந்திய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்திய அணியை தோற்கடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் சிமன்ஸ் 82 ஓட்டத்தினையும் ரஸல் 43 ஓட்டத்தினையும் பெற்றனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சிமன்ஸ் தெரிவானார். (க)



## உலகக்கிண்ணத்தை தவறவிட்டதால் தோனி, கோஹ்லியை பலாத்காரம் செய்வேன்

### மொடல் நடிகை மிரட்டல்



இருபது-20 உலகக்கிண்ணத்தை தவறவிட்டதால் ரெய்னா, டோனி, ஹோலி ஆகியோரை பலாத்காரம் செய்வேன் என்று மொடல் அழகி ஒருவர் மிரட்டியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இருபது-20 உலகக்கிண்ணத்தை தொடர்ந்து பல மொடல் அழகிகள் விளம்பரம் தேட பல வழிகளில் முயற்சித்து வருகின்றனர்.

இந்தியா அவுஸ்திரேலியாவை வீழ்த்திய பிறகு மொடல் அழகி பூணம் பாண்டே டுவிட்டரில் தனது கவர்ச்சி புகைப்படங்களை பதிவேற்றி அதை ஹோலிக்கும், இந்திய வீரர்களுக்கும் பரிசளிப்பதாக கூறினார்.

இதேபோன்று தற்போது புதிய பாணியில் களமிறங்கியுள்ளார் மும்பையை சேர்ந்த மொடல அழகியும், அப்ரிடியின் முன்னாள் காதலியுமான அர்ஷி கான்.

இவர் முன்னதாக பாகிஸ்தான் இருபது-20 அணியின் தலைவரான அப்ரிடியுடன் உடலுறவு வைத்துக் கொண்டதாகவும், தனது கர்ப்பத்திற்கும் அவரே காரணம் என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில் தற்போது இந்திய அணி இருபது-20 உலகக்கிண்ணத்தை தவற விட்டதால் ரெய்னா, தோனி, ஹோலி ஆகியோரை பலாத்காரம் செய்வேன் என்று டுவிட்டரில் கூறி சில ஊடகங்களின் டுவிட் ஹேண்டிலை ரக் செய்துள்ளார்.

இவரின் இந்த டுவிட் சலசலப்பை ஏற்படுத்தினாலும், தவான், ரோஹித் மட்டும் என்ன பாவம் செய்தார்கள் என்று கிண்டலாக ரசிகர்கள் கருத்தும் தெரிவித்து வருகின்றனர்.(க)

## இங்கிலாந்து அணியில் ஜெயவர்த்தன இணைவு



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ஜெயவர்த்தன இங்கிலாந்தின் கிளப் அணியான சோமர்செட்டில் விளையாட முடிவு செய்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு ஜெயவர்த்தன பிற நாடுகளில் நடக்கும் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வருகிறார்.

ஐ.பி.எல், பிக் பாஷ், நோத்வெஸ்ட் தொடரில் விளையாடிய ஜெயவர்த்தன தற்போது இங்கிலாந்தின் கவுண்டி அணியான சோமர்செட்டில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கெனவே அந்த அணியில் வெளிநாட்டு வீரர்களான கிறிஸ் ரோஜர்ஸ் (அவுஸ்திரேலியா), கிறிஸ் கெய்ல் (மேற்கிந்திய தீவுகள்) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுடன் இணைந்து அதிரடி காட்ட தயாராகி வருகிறார் ஜெயவர்த்தன. (க)

## மகளிர் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் மே.தீவுகள்



மகளிர் உலக கோப்பை இருபது-20 2-வது அரையிறுதியில் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு நுழைந்துள்ளது.

முதலில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதனை தொடர்ந்து களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணியினர் 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 143 ஓட்டங்கள் எடுத்தனர்.

இதனையடுத்து 144 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய நியூசிலாந்து மகளிர் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.

ஏற்கெனவே அவுஸ்திரேலியா அணி முதல் அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான போட்டி நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை கொல்கத்தா மைதானத்தில் நடைபெற உள்ளது. (க)



யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலையின் அதிபர் ந.விஜயசுந்தரம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் பொறியியலாளருமான யோ. தயாபரனும், சிறப்பு விருந்தினர்களாக ஹற்றன் நஷனல் வங்கியின் திருநெல்வேலி கிளையின் அதிகாரி த.ஜெகதீஸ்வரன், திருநெல்வேலி ஏசியன் ரெக்ரைல்ஸ் உரிமையாளர் சி.அன்ரன் ஜெயக்குமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க உபதலைவர் கு.மோகன், பரமேஸ்வரா வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியை திருமதி தங்கம்மா தெய்வேந்திரம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின்)

# கொழும்பில் 2 1/2 பவுண் சங்கிலியை அறுத்த திருடனை துணிகரமாக துரத்திப் பிடித்த யாழ்ப்பாணப் பெண்

கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் யாழ்ப்பாணப் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஆட்டோ ஒன்றில் தப்பிக்க முயன்ற நபரை பிறிதொரு ஆட்டோ ஒன்றில் பின்தொடர்ந்த பிரஸ்தாப பெண் சமிக்ஞை மின் விளக்கு தரிப்பிடத்தில் இருந்து உரிய சமிக்ஞை பச்சை விளக்கு ஒளிர்வதற்கு முன்னதாகவே ஆட்டோவிலிருந்து இறங்கி தப்பிச் செல்ல முயன்றவேளை பிரஸ்தாபப் பெண் **திருடன் திருடன்** என்று சத்தமிட உஷாரடைந்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் பிரஸ்தாப நபரை மடக்கிப் பிடித்ததுடன் பறிகொடுத்த தங்கச் சங்கிலியையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,கடந்த மாதம் 10 ஆம் திகதி கொட்டாஞ்சேனைப் பகுதியில் உறவினரின் வீட்டுக்குச் சென்ற பிரஸ்தாப குடும்பப்பெண் அருகிலுள்ள கடை ஒன்றிற்குச் சென்ற வேளை ஆட்டோ ஒன்றில் வந்த நபர் சங்கிலியை அறுத்துக் கொண்டு வேகமாக ஆட்டோவில் தப்பிக்க முயன்றுள்ளார்.

உடனடியாக பிறிதொரு ஆட்டோ சாரதியின் உதவியுடன் வைத்த கண் வாங்காமல் குறித்த ஆட்டோவைப் பின்தொடர்ந்த பெண் சமிக்ஞை விளக்குப் பகுதியில் ஆட்டோ தரித்து நின்றதை அவதானித்ததுடன் ஆட்டோவின் இலக்கத்தையும் குறித்துக் கொண்டுள்ளார். ஆட்டோவில் பிரஸ்தாபப்பெண் பின்தொடர்வதை தெரிந்து கொண்ட நபர் பச்சைநிற சமிக்ஞை விளக்கு ஒளிர்வதற்கு முன்னதாகவே ஆட்டோவிலிருந்த இறங்கி வீதியைக் கடக்க முயன்றுள்ளார்.

இந்நிலையில் பிரஸ்தாபப்பெண் **திருடன் திருடன்** என்று கூக்குரலிடவே உஷாரடைந்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் பிரஸ்தாப நபரை மடக்கிப் பிடித்ததுடன் அவரது சேட் பொக்கற்றிலிருந்து இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியையும் மீட்டுள்ளனர்.

சங்கிலியை உடனடியாக பெண்ணிடம் கையளிக்க மறுத்த பொலிஸார் அதனை நீதிமன்ற நடவடிக்கையினூடாக கடந்த திங்களன்று பிரஸ்தாப பெண்ணிடம் கையளித்தனர்.

குறித்த நபர் ஏற்கனவே பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

# 2016; சீனாவுடனான பாதுகாப்பு உறவுகள் மேலும் வலுவடையும்

## இலங்கை அரசு நம்பிக்கை

(கொழும்பு)

சீனாவுடனான பாதுகாப்பு உறவுகள் இந்த ஆண்டில் மேலும் வலுப்படுத்தப்படும் என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.சீன செய்தி நிறுவனமான சின்ஹுவாவிடம் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் புலிகளுக்கு எதிரான போரை இலங்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சீனா உதவி செய்தது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது. சீனாவுடன், மிகவும் வலுவான உறவை நாங்கள் எதிர்பார்க்கி றோம்.

ஏற்கனவே இராணுவத்தினருக்கு சீனா சில பயிற்சிநெறிகளை வழங்கி வருகிறது. இந்தத் துறையில், எமது உறவுகளை மேலும் விரிவாக்கலாம் என்று நம்புகிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)



# தமிழ்மக்களை மீண்டும் துன்புறுத்துவதற்காக அரசு ஆடும் நாடகமே வெடி பொருட்கள் மீட்பு

## வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**சாவகச்சேரியில் தற்கொலை அங்கி மற்றும் வெடி பொருட்கள் மீட்கப்பட்டதில் அரசாங்கத்திற்கு சதி செய்பவர்கள் சம்பந்தப்பட்டமை மாத்திரமல்ல, புலிகள் மீண்டும் மீண்டெழுகின்றனர் என்ற கதையை கட்டி எமது மக்களை மீண்டும் துன்புறுத்த அரசு ஆடும் நாடகமாக தான் நாங்கள் கருதுகின் றோம் என வடக்கு மாகாண சபையின் உறுப்பின ரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தற்கொலை் தாக்குதலுக்கு பயன் படுத்தப்படும் தற்கொலை அங்கி மற்றும் கிளைமோர் குண்டுகள் மற்றும் அவற்றை வெடிக்க வைக் கும் பற்றரிகள் என்பன சாவகச் சேரியில் நேற்று முன்தினம் பொலி ஸாரால் மீட்கப்பட்டுள்ளன. பல வருடங்களின் பின்னர் தற்கொலை அங்கி மீட்கப்பட்டமையால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நில வியுள்ளதோடு, பாதுகாப்பு கெடுபி டிகளும் அதிகரிக்கப்பட்டு காணப் பட்டன.

குறித்த நபரது வீட்டில் கஞ்சா இருப்பதாக கிடைக்கப்பட்ட தகவ லையடுத்து அதனை கைப்பற்ற சென்ற போதே இவ் வெடி பொரு ட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் கூறுகின்றனர். இதன்படி தற்கொலை அங்கி பட்டி ஒன்றும் , கிளைமோர் குண்டுகள் 4, துப்பா க்கி ரவைகள் 100 அடங்கிய இர ண்டு பெட்டிகள் மற்றும் வெடிபொ ருட்கள் 12கிலோவும் சிம்காட் 5உம், கிளைமோரை வெடிக்க வைக்க இரண்டு பற்றரிகள் போன்ற பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சிவாஜிலிங்கத் திடம் கேட்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். தமிழ் மக்கள் மீது இந்த சம்பவத்தை, பழியை போட்டு இனவெறித் தன மாக தமிழ் மக்களை துன்புறுத்தும் நாடகமாகவே இதனை பார்க்க முடியும்.

இந்த வெடிபொருட்கள் மீட்கப் பட்ட உடன் சில இனவாதிகள் வடக்கில் மீண்டும் புலிகள் உரு வாகின்றனர். புலிகளுக்கு ஆட் சேர்ப்பு நடக்கின்றது என்றெல்லாம் கூறுகின்றனர். ஆகையால் இது ஒரு திட்டமிட்ட தமிழ் மக்கள் மீது பழியை சுமத்தி மீண்டும் அவர் களை பாதுகாப்பு கெடுபிடிகளுக்குள் தள்ளும் செயலாகவே நாங்கள் இதனைபார்க்கின்றோம்என்றார் அவர்.

இதேவேளை குறித்த சம்பவத் தில் கைதான குடும்பஸ்தர் பயங் கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கொழும்புக்கு நேற்றைய தினம் கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் குறித்த சம்பவம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என கூறப்பட்ட போதிலும் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)




## யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று அடையாள உண்ணாவிரதம்



யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் நேற்றையதினம் ஒருநாள் அடையாள வேலை நிறுத் தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

பல்கலைக்கழக ஊழியர் சங்க ங்களின் கோரிக்கைகளுக்கு உயர் கல்வி அமைச்சில் இருந்தோ பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடமிருந்தோ இது வரை சாதகமான பதில் கிடைக்காத தனை கண்டித்து நாடளாவிய ரீதி யில் சகல பல்கலைக் கழகங் களினதும் போதனைசாரா ஊழியர் சங்கங்கள் நேற்றையதினம் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி மாதாந்த இழப்பீட்டுப் படி மற்றும் பிற விடயங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடியிருந்தனர்.

ஆனால் அரசாங்கமானது சம் பள அதிகரிப்பின் போது கடைப் பிடிக்கும் நெறிமுறைகள், கொள் கைகள் என்பவற்றுக்கு மாறாக கல்விசார் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை மட்டும் அதி கரித்துள்ளமையினால் இவ் விட யம் தொடர்பாக அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வருவ தென இரு பகுதியினரும் இணக் கம் தெரிவித்திருந்த நிலையில் இதுவரை குறித்த பிரச்சினையை தீர்க்கும் முகமாக அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்ற காரணத் தினால் நேற்றையதினம் அடை யாள உண்ணாவிரதத்தினை மேற் கொண்டுள்ளனர். (இ-9)

## க.பொ.த. (சா/த) பெறுபேறுகள்-2015

வேலாயுதம் மகா வித்தியாலயம்

செ.கிருஷாந்- 5ஏ3பி, தி.செந் தூரன்- 5ஏ2பிசி, த.வேல்கஜா- 3ஏ2பி3சிஎஸ், இ.சஜிந்தன்- 3ஏ 4சிஎஸ், த.விமல்ராஜ்- 3ஏபி2சி எஸ், இ.பபிஷன்-2ஏ5பிசி, இ. துவா ரகன்- 2ஏ3பிசி3எஸ், அ.அகிலன்- 2ஏ2பி2சிஎஸ், த.கீர்த்திகன்- 2ஏ3பி3எஸ்.

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

எஸ்.விஜயசங்கரி - 6ஏ2பி எஸ், கே.சானுஜா-5ஏபி3சி ,ரி. வைஸ் ணவி- 4ஏ 3பி சி,எஸ்.யனுசா-4ஏ 4பிஎஸ், பி.துஸ்யந்தன்-4ஏ2பிசி எஸ், எம்.மதுசாலினி-4ஏ5சி, சி. சிறிகரன்-3ஏ3பிசி எஸ், சி. தட்சா யினி-3ஏபி3சி2எஸ், ஏ. கோபினா- 2ஏ4பி2சி,சி.நிரோசன்-2ஏ 2பி 2சி2எஸ்,எல்.றஜீவ்-2ஏபிசி 2எஸ், ஆர்.சர்மிலன்-2ஏ2பி3சி2எஸ், எஸ்.றஜீபன்- ஏ2பி3சிஎஸ் ,கே. காவேரி-ஏ5பி2சி எஸ், எஸ். டர்சா யினி-ஏ2பி3சி3எஸ்,எஸ். நிருஸா- ஏ3பி3சிஎஸ்,எஸ்.தக்சிகா-ஏ2பி 2சி3எஸ்,எஸ்.நிதுர்ஸா-ஏபி3சி3 எஸ்,பி.நிந்துஸா-ஏ2பிசி3எஸ்

## ஆன்மீக வலுவூட்டல் பயிற்சி அங்குரார்ப்பண நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி, வீணாகான குரு பீட குருகுல மாணவர் ஆன்மீக வலு வூட்டல் பயிற்சி அங்குரார்ப்பண மும் யோகா செயல்முறை விளக்க மும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிமுதல் 5 மணிவரை சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியா லயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் முதன்மை விரு ந்தினராகவும் முன்னாள் வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் கௌரவ விருந்தின ராகவும் கலந்து கொள்ள வுள்ளனர். (இ)

## ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் இந்துக் கல் லூரி ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும் நாளை மறுதினம் ஞாயி ற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி நூற்றாண்டு மண்டபத்தில் கல்லூரி முதல்வர் அ.அருணந் திசிவம் தலைமையில் நடை பெற வுள்ளது.இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சி. நந்தகுமாரன், சிறப்பு விருந்தினராக லண்டன் கட்டடப் பொறியியலாளர் வைகோபால் சங்கரப்பிள்ளையும் கௌரவ விருந்தினராக உரும்பி ராய் இந்துக் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியை மங்களேஸ்வரி சிவசி தம்பரலிங்கமும் கலந்து சிறப்பிப்ப துடன் இந்நிகழ்வில் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.செல்வ மனோகரன் ஸ்தாபகர் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (இ-136)

## நவக்கிரி நிலாவரை கிணற்றடிப் பகுதியில் பொலிஸார் கடமையில் ஈடுபட வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை



சுற்றுலாத்தளமாக மாறிவரும் நவக்கிரி நிலாவரை கிணற்றடி பகுதியில் பகல் நேரத்தில் பொலி ஸார் இருவரை கடமைக்கு அமர் த்த வேண்டும் என அப் பகுதி மக் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புராதன இடமாக கருதப்படும் இவ் இடத்தில் அமைந்துள்ள கிண ற்றினை பார்ப்பதற்கு நாளாந்தம் பல ஆயிரம் தென்னிலங்கை சுற் றுலா பயணிகள் வருகை தருகின் றனர்.

இதனால் அப்பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆர ம்பத்தில் இவ்விடத்தில் இராணுவக் காவலரன் ஒன்று இருந்தது. பின் னர் அது அகற்றப்பட்டது. சுன்னாகம் செல்லும் வாகனங்கள் மற்றும் யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பிரதான பாதைகளில் ஒன்றான இராசவீதி யும் இவ்விடத்தில் சந்திக்கின்றது. வாகனப் போக்குவரத்து அதிக ரித்து ள்ள நிலையில் அங்கு வரும் சுற்று லாப் பயணிகள் தேவையற்ற விபத்து க்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

வீதியினைக் கடப்பதற்கு பாது காப்பு மஞ்சள் கடவையும் இப் பகுதியில் இட ப்படவில்லை. எனவே இப் பகுதிக்கு காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணி வரை பொலிஸ் உத்தியோ கத்தர்கள் இருவரை கடமைக்கு அமர்த்த வேண்டும் என வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற் சவம் நாளை (02.04.2016) சனிக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள் ளது. (இ)

## விளையாட்டு விழா

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளை யாட்டு விழா, நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

இதில் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலை வராகவும், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில் நந்தனன் பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண விளையாட்டுதிணை க்கள பணிப்பாளர் இ.குருபரன் சிற ப்பு விருந்தினராகவும் கலந்து கொள் ளவுள்ளனர். (இ-5)

# ஆசிரியர்களின் பண்டிகைக்கால முற்பணம் இன்றையதினம் வழங்குவதற்கு ஏற்பாடு

## கல்வியமைச்சின் பிரதம காசாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான பண்டிக்கைக் கால முற்பணக் கொடுப்பனவு காலதாமதமாகியுள்ளதாக் குற்றஞ்சாட்டப்படுகிறது. எனினும் கல்வியமைச்சு இதனை நிராகரித்துள்ளது.

இவ்வாண்டுக்கான பண்டிகைக் கால முற்பணக் கொடுப்பனவுகளைத் தாம் பெறவில்லை என தேசிய பாடசாலைகளைச் சேர்ந்த 10 ஆயிரம் ஆசிரியர்கள் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவிக்கையில்,

பண்டிகைக் கால முற்பணக் கொடுப்பனவில் பாரபட்சம் காட்டப்படுகிறது.

குறிப்பாக மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் முற்பணக் கொடுப்பனவைப் பெறவில்லை. முற்பணக் கொடுப்பனவை வழங்குவதற்கு வலயக் கல்வி அலுவலகங்களே பொறுப்பாகவுள்ளன. கல்வியமைச்சினால் நிதி ஒதுக்கப்படாமையினால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் ஏப்ரல் முதல் வாரத்தில் இக் கொடுப்பனவுகளைப் பெறக் கூடியதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது தொடர்பில் கல்வியமைச்சின் பிரதம காசாளர் திருமதி எச்.சி.பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

ஆசிரியர்கள் எவருக்கும் பண்டிகைக்கால முற்பணக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. பண்டிகை தினத்திற்கு இரு வாரங்களுக்கு முன்னதாக கொடுப்பனவு வழங்கப்படுவதே வழமையானது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஏப்ரல் முதலாம் திகதியன்று இக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பண்டிக்கைக்கால முற்பணக் கொடுப்பனவைப் பெற்றவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்களின் அடிப்படையில் முன்கூட்டியே அதனைப் பெற்றுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (3)

# அமைச்சரவைப் பத்திரங்களில் குளறுபடி-பிரதமர் சுட்டிக்காட்டு

அமைச்சரவைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படும் பெரும்பாலான அமைச்சரவைப் பத்திரங்கள் குளறுபடி தன்மையைக் கொண்டவை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக இனி வரும் காலங்களில் அமைச்சரவைப் பத்தி ரங்களை தயாரிப்பது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு அனைத்து அமைச்சுக்களின செயலாளர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த விடயத்தில் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குமாறு அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகர் பாஸ்கரலிங்கத்திடம் பிரதமர் ரணில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டமொன்றின் போது ஒரு அமைச்சின் அமைச் சரவைப் பத்திரத்தில் அதற்குச் சமாந்தரமான பெயர்கொண்ட வேறொரு அமைச்சின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பெரும்பாலான அமைச்சரவைப் பத்திர ங்களில் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஏராளம் பிழைகள் காணப்படுவது அண்மைக் காலமாக அவதானிக் கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீவிர கவனம் செலுத்தியிருந்த நிலையில் தற்போது அரசாங்கத்தின பொருளா தார ஆலோசகர் பாஸ்கரலிங்கத்தின் தலையீட்டை இந்த விடயத்தில் வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-5)


## யாழ்ப்பாண நினைவுகள் தரும் யாழ். இந்துவின் மைந்தனை வாழ்த்துகிறோம்



### வேதநாயகன் தபேந்திரன்

யாழ்.இந்துக் கல்லூரி அன்னைக்கு புகழ் சேர்த்து யாழ்ப்பாண வாழ்வியலை அழகாக கட்டுரை வடிவில் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1,2,3 என நூல்களை வெளியிட்டு வரும் எம் இனிய நண்பன் வேதநாயகம் தபேந்திரனை வாழ்த்துகின்றோம்.

யாழ். நாச்சிமார் கோவிலடி அருகாமை உள்ள ஹம்சியா மஹால்- ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் 03.04.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.34 மணிக்கு எமது கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் மருத்துவர். வை.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பங்கேற்க இந்துவின் மைந்தர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.இந்துவின் மாணவ நண்பர்கள்

(சி-4180)



## மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்

### பாடசாலை ஆசிரியர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல் -2016

தலைவர், அமைச்சு பெறுகைகள் குழு (MPC)' மாகாண கல்வி அமைச்சு வடமாகாணம் பாடசாலை ஆசிரியர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்.

Bid No. NP/ 03/03/ PSDG/ S.F/2016

| தொ. இல | பொருள் விபரம் | தேவையான தளபாடங்களின் எண்ணிக்கை | கேள்வி பிணைமுறி வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| 01 | ஆசிரியர் மேசை | 1200 | 100,000.00 |
| 02 | ஆசிரியர் கதிரை | 1200 | |

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்காட்டப்பட்ட முகவரியில் (தொ.பே.இல. :021 205 4095) எமது அமைச்சில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2. இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் வியாபாரப் பதிவுச் சான்றிதழ், கேள்விப் பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதம் என்பவற்றினை சமர்ப்பித்து ஒவ்வொரு விலைக்கேள்வி பத்திரத்திற்கும் ரூபா 1, 000 மீளளிக்கப்பட முடியாத கேள்வி வைப்புப் பணத்தினை காசாக செலுத்தி அலுவலக நாட்களில் 04.04.2016 ஆம் திகதி தொடக்கம் 25.04.2016 ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் (மு.ப.09.00 தொடக்கம் பி.ப.3.00 வரை) எமது அமைச்சில் பெற்றுக் கொள்ளலாம்.

3. விலைக்கேள்வி பத்திரங்கள் 26.04.2016 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக இவ் அமைச்சில் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்வி பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கான நேரம் முடிவடைந்த உடனேயே விலைக் கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

திரு.இ.இரவீந்திரன்,
தலைவர்-பெறுகைக்குழு
மாகாண கல்வி அமைச்சு,
வடமாகாணம்
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-4175)


# இராசி பலன்

01.04.2016
(பங்குனி 19, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு
நவமி பின்னிரவு 4.06மணிவரை
பூராடம் முற்பகல் 10.10மணிவரை
சுபநேரம் 6.11-7.41 மணிவரை
இராகுகாலம் 10.41-12.11 மணிவரை
முட்டாள் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி | புத | | |
| சுக், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவாதிரை மாலை 4.02இற்கு மகர-சந் | | |
| | | | குரு ராகு |
| சந் | சனி, செவ் | | |

**மேடம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்,உடல்நலன் சிராகி உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்களில் மாலை நேரம் முன்னேற்றம் ஏற்படும், சிரித்து பேசும் நண்பர்களால் சிக்கல்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், நடைபெறவிருந்த காரியமொன்று மாலை நேரம் தாமதமாகலாம்.

**கடகம்:** உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள் , வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்,மருத்துவச் செலவுகள் குறைந்து நிம்மதி தரும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,ரோக பயமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்,சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** நல்ல காரியத்துக்கு பிள்ளையார் சுழி போடும் நாள்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,போசன சுகமுண்டு, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மகரம்:** இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**கும்பம்:** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம்,அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடி கைகூடும்,எதிர்பார்த்த தன வரவுகள் வந்து சேரலாம்.

**மீனம்:** முத்தான வாய்ப்புகள் இல்லம் தேடி வந்து சேரும் நாள், சேமிப்பை அதிகரிக்க முற் படுவீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.






தந்தை செல்வாவின் 118 ஆவது ஜனன தின நிகழ்வு நேற்றுக் காலை மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு முன்பாக மன்னார் மாவட்டத் தந்தை செல்வா அறங்காவலர் அமைப்பின் தலைவர் பி.ஏ.அந்தோனி மார்க் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மன்னார் பிரஜை கள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளார், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ,வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோர் அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். குறித்த நிகழ்வில் மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் இ.குமரேஸ், மூத்த ஊடகவியலாளர் மக்கள் காதர், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன் போது சிறப்பு உரைகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: உ.சாளின்)

# காணாமற் போனோர் தொடர்பான விசாரணையில் நான்கு பேரின் விபரங்கள் கண்டறியப்பட்டுள்ளன

## மக்ஸ்வெல் பரணகம வவுனியாவில் தெரிவிப்பு

(குருமன்காடு)

**காணாமற் போனோர் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் சாட்சியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் அடிப்படையில் தற்போது நான்கு பேர் கண்டறியப்பட்டுள்ளனர் . அது தொடர்பில் விரைவில் வெளிப்படுத்துவோம் என காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.**

வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற காணாமற் போனோர் தொடரபான சாட்சியமளிப்பின் இருநாள் அமர்வுகள் நேற்று முன் தினம் நிறைவு பெற்றன.

இதன் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போதே இவ்வாறு தெரிவித தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

காணாமல் போனோர் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள், சாட்சியங்கள் என்பவற்றின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. தற்போது நான்கு பேர் கண்டறியப்பட்டுள்ளனர். அது தொடர்பில் விரைவில் வெளிப்படுத்துவோம். மாலைதீவு சிறைச்சாலையிலும் காணாமற் போனதாக கூறப்பட்ட இரண்டு, மூன்று பேர் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வெலிஓயாப்பகுதியில் காணாமல் போனதாக எம்மிடம் கூறப்பட்ட நபரொருவர் வேறு ஒரு பெண்ணுடன் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வெளிநாடு சென்றமை அறியப்பட்டுள்ளது. ஏனையவர்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் போனோர் முழுமையாக கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் சாதகமான பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் மேற் கொள்ளப்பட்ட சாட்சியப் பதிவுகளில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்திற்கு எதிராக அதிகமான முறைப்பாடுகள் காணப்பட்ட அதேவேளை, வன்னியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகம் பதிவாகியுள்ளன. இது தவிர காணாமல் போனோர் தொடர்பில் புளொட், ஈபிஆர்எல்எப், ஈபிடிபி போன்றவர்களும் பதில் சொல்ல வேண்டியவர்களாகவுள்ளனர்.

தற்போது வன்னியில் ஆறு நாட்கள் மேற்கொண்ட அமர்வுகளில் 1049 பேர் சாட்சியமளித்ததுடன், 306 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

அந்த வகையில் புதிதாக விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்துள்ளது. இது மக்கள் எமது காணாமற் போனோர் ஆணைக் குழு மேல் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

இது தவிர, ஒருவர் தொடர்பாக அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பல பகுதிகளில் இருந்தும் விண்ணப்பித்துள்ளமையால் காணாமல்போனோர் தொடர்பான மொத்த எண்ணிக்கையை உடனடியாக வெளியிட முடியவில்லை எனவும் அவர்தெரிவித்தார் (2-3-250)

## கிளிநொச்சியில் வாகனங்கள் விபத்து கப்ரக வாகனம் தப்பிச் சென்றது



(மல்லாவி)

கிளிநொச்சி திரேசம்மா ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இவ்விபத்து நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பகுதியிலிருந்து பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த காருடன், கப்ரக வாகனம் மோதியுள்ளது.

குறித்த விபத்தின் போது கார் பலத்த சேதங்களுக்கு உள்ளான நிலையில் வீதியின் நடுவில் நிறுத்தப்பட்டது. இதேவேளை விபத்துடன் தொடர்புடைய கப்ரக வாகனம் தப்பிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

காரில் பயணித்த சிறுவன் உட்பட இருவர் படுகாயம் அடைந்துள்ள நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர். (2-3-15-254)




## 23 வருடங்கள் இராணுவம் நிலை கொண்டிருந்த வவுனியா நெற்களஞ்சியசாலை விடுவிப்பு

### இரவோடு இரவாக இராணுவம் வெளியேறியது

வவுனியாவில் கடந்த 23 வருடங்களாக நெற்களஞ்சியசாலையில் நிலை கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் இரவோடு இரவாக வெளியேறியுள்ளனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான குறித்த கட்டடத் தொகுதி வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ளது. இது நெற்களஞ்சியசாலை, அலுவலக கட்டடத் தொகுதி என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

யுத்த காலப்பகுதியில் வவுனியாவில் நிலை கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினரால் குறித்த கட்டடம் சுவீகரிக்கப்பட்டு இக் கட்டடத் தொகுதி கடந்த 23 வருடங்களாக இராணுவத்தினர் வசம் இருந்தது.

இதனால் நெல்லை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவது தொடர்பில் வவுனியாவில் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டதுடன், அதனை விடுவிக்குமாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டும் வந்தது. இந்நிலையில் நேற்று முன் தினம் இரவு அங்கு நிலை



கொண்டிருந்த விசேட அதிரடிப் படையினர் அங்கிருந்து முழுமை யாக வெளியேறியுள்ளனர்.

இதனால்இக்கட்டடத்தொகுதி விடுவிக்கப்பட் டுள்ளதுடன், அங்கு நிலை கொண் டிருந்த அதிரடிப்படையினர் தற்போது வவுனியா, மடுக் கந்தைப் பகுதியில் புதிய முகாமினை அமைத்து அங்குநிலை கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (2-3-250)

## கிளி.யில் விபத்து இருவர் படுகாயம்

கிளிநொச்சி வலய கல்வி பணிமனைக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.


இவ்விபத்து சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம் பெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து, வவுனியா நோக்கி பயணித்த கார் ஒன்று, அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. குறி த்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் களே படுகாயமடைந்த நிலையில்



கிளிநொச்சி வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கார் செலுத்தியவர் மது போதையில் இருந்ததுடன், காரினுள் போதைப் பொருளும், அதற்கு பயன்படுத்திய பொருட்களும் காணப்பட்டன. விபத்து தொடர்பான விசா ரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-3-15)



தந்தை செல்வாவின் 118 அவது ஜனனதினம் நேற்றுக்காலை வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள அன்னாரது தூபிக்கு முன்பாக வவுனியா மாவட்ட தந்தை செல்வா நினைவு அவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், உட்பட வவுனியா மாவட்ட தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு அமைய வீடுகள் வேண்டும் இல்லாவிடின் வீதியில் இறங்கிப் போராட வேண்டி வரும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சூளுரை

(குருமன்காடு)

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்கு அத்தியாவசிய தேவையான வீட்டை எமது சூழலுக்கு ஏற்ப எமது பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு அமைய கட்டிக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். இல்லாவிடின் இந்த அரசாங்கத்திற்கு எதிராகவும் மக்களுடன் வீதியில் இறங்கி போராட நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கவுள்ள 65ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் குறித்து அவர் கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது 21 இலட்சம் பெறுமதியான 65 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவதற்கு வெளிநாட்டுக்கடன் உதவியுடன் அரசாங்கம் முன்வந்திருக்கின்றது.

அத்திட்டத்திலும் பயனாளிகளைத் தெரிவு செய்யும் படிவத்தில் கேட்கப்படுகின்ற கேள்விகளையும் உற்றுநோக்கும்போது கடந்த அரசாங்கத்தின் அணுகுமுறை இந்த நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லப்படுகின்ற தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுக்கொண்டுள்ள தற்போதைய அரசாங்கத்திலும் தொடர்கின்றதா? என்ற சந்தேகம் மிகவும் வலுவாக எமது மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்தில் கட்டப்படும் வீடுகளின் தரம் ஒருபுறம் குழப்பத்தை ஏற்படுத்துகையில், பயனாளிகள் தெரிவு எமது மக்களை மேலும் குழப்பியுள்ளது.

அதேநேரம் தற்போதும் இடம்பெயர்ந்த முகாமில் இருக்கின்றீர்களா என்றவொரு வினா கேட்கப்பட்டுள்ளதே தவிர பொது மக்களின் இழப்பீடு தொடர்பாக எவ்விதமான தரவுகளையும் பெறுவதற்கு மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் இவ்வாறானதொரு கேள்வியால் முகாமில் இல்லாத இழப்பைச் சந்தித்தவர்கள் இத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படாத நிலையும் உள்ளது.

போரில் பல்வேறு உள்ளக இடப்பெயர்வுகளைச் சந்தித்து வயிற்றைக்கட்டி வாயைக் கட்டி எதிர்காலத்திற்காகச் சேமித்திருந்த அனைத்தையும் இழந்து ஒதுங்குவதற்கு கொட்டில்கூட இல்லாத நிலையில் எமது மக்கள் கடந்த ஏழு ஆண்டுகளாக மிகவும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

உறவினர்களையும் தமது அன்பிற்குரியவர்களையும் கணவரையும் மனைவியையும் பிள்ளைகளையும் தாய் தந்தையரையும் இழந்து இருந்த சொத்துக்களையும் இழந்து தவிக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உரிய நிவாரணத்தை அவர்களின் இருப்பிடம் தேடிச்சென்று வழங்க வேண்டியது பொறுப்பு மிக்க அரசாங்கத்தின் கடமை.

ஆனால் குளறுபடிகள் நிறைந்த விண்ணப்பத்தை எங்கு பெற்றுக்கொள்வது என்று தெரிவிக்காமல், யாரிடம் கையளிப்பது என்பதை அறிவிக்காமல் எமது மக்களை மீண்டும் மீண்டும் கையேந்தும் நிலைக்குத் தள்ளுவதுதான் நல்லாட்சியா?.

அதுவொருபுறமிருக்கையில்பொதுமக்களை தமது சொந்தக்காணிகளில் மீளவும் குடியேற்றி அதிலேயே அவர்களுக்கான நிரந்தர வீடுகள் வழங்கப்படவேண்டும்.

தற்போது ஒரு வீட்டுக்கு செலவிடப்படும் 21இலட்சத்தில் நிரந்தமான கல்வீடுகள் இரண்டு கட்டமுடியும். அது பரம்பரை ரீதியாகவும் மக்களுக்கு பயன் தரவல்லது. அவ்வாறான செயற்பாட்டை தவிர்க்கும் இந்த அரசாங்கம் எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போகிறது?

வன்னி மாவட்டத்திற்கு மட்டும் ஏறக்குறைய 40 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றது. நல்லிணக்கத்தையும் நிரந்தர சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் குடும்பத்துடன் வாழ்வதற்கான வீட்டினை நேர்மையாக வழங்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

பொது மக்களின் இழப்பீடு குறித்த உண்மையான தொகை தெரிந்துவிட்டால் தாம் சர்வதேச ரீதியில் மீண்டும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்ற அச்சத்தில் பயனாளிகளைக் குறைத்துக் காட்டுவது எந்தவிதத்திலும் நன்மை பயக்காது.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்கு அத்தியாவசிய தேவையான வீட்டை எமது சூழலுக்கேற்ப, எமது பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு அமைய கட்டிக்கொடுப்பதற்கு முன்வரவேண்டும்.

அல்லாவிடில் இந்த அரசாங்கத்திற்கு எதிராகவும் மக்களுடன் வீதியில் இறங்கி போராடநேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-3-250-302)




# உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு வவுனியாவில் வார இறுதி சந்தை

## முதல் கட்டமாக ஏப்ரல் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்

வவுனியா மாவட்டத்தின் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைவாய்ப்பை ஏற்படுத்த வார இறுதிச்சந்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடனான மாதாந்த கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபை செயலாளர், பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்டத்திலுள்ள பெண்கள் சுய உதவிக்குழுக்கள், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள அமைப்புகள், கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் கீழுள்ள நிறுவனங்கள், சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்கள், குடிசைக் கைத்தொழிலாளர்கள் ஆகியோர் எதிர்நோக்கும் சந்தைவாய்ப்பு பிரச்சினைகளை தீர்க்கும் முகமாகவே இவ்வாறான வாரஇறுதி சந்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக தமிழ், சிங்களப் புது வருடத்தை முன்னிட்டு சித்திரை மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்த சந்தை ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து வாராந்தம் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் இவ்வாறான வாரஇறுதி சந்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெறுவதற்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(2-3-250)

# 5 ஆயிரம் இளைஞர்களை இணைத்து வேலைத்திட்டம்



தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒழுங்கு செய்த யொன்புறய -2016 நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் சிகிரியா விமானப்படைத்தளத்தில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ள நிகழ்வில் இளைஞர், யுவதிகளுக்கான கலைத்துறை, விளையாட்டுத்துறை மற்றும் சமூக சிந்தனைகளுடனான செயற்பாடுகளில் ஈடுபடல் உள்ளிட்ட சகலதுறையிலும் அவர்களை வளர்த்தெடுக்கும் முகமாகவும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளக்கூடிய தொழில்தருநர்கள் தொழிலுக்காக இளைஞர் யுவதிகளை வேலைவாய்ப்புக்களுக்கு இணைத்தல் உள்ளிட்ட பல்வேறு விசேட அம்சங்களுடன் இந்த நிகழ்வு இடம் பெறுகிறது வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் உள்ளிட்ட 5 ஆயிரம் இளைஞர்களை இணைத்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2-3-281)

# SLEAS, SLAS போட்டித் தேர்வுகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டிக் குறிப்புக்கள்

# பாடசாலை நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கை பகுதி -1

(நேற்றைய தொடர்ச்சி...)

**கல்வி நிர்வாகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி நிர்வாகம் தொடர்பான விடயங்களில் ஓரளவு அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும் உ+ ம்**

◆ தர உள்ளீடு -NBU CRAM

◆ தரவட்டம் (**Quality Circle**)

முழுத்தர முகாமைத்துவம் (**Total Quality Management**)

◆ பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்/ பாடசாலைகளை உயர்த்தும் வேலைத் திட்டம் (**Programme on School Improvement-PSI**)

◆ பண்பு சார் விருத்தியும் அளவு சார் விருத்தியும்

◆ தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்டம்.

◆ பாடசாலை மட்டத் திட்டமிடல்

◆ புதிய பாடங்களின் அறிமுகம் உ-ம் : தொழில் நுட்ப பாடம், ஊடகத் துறை

◆ இசுறு பாடசாலை

◆ 1000 பாடசாலைத் திட்டம்

◆ கருத்திட்டம் (**Thematic Approach**)

◆ ESDFP

◆ Secondary Education Modernization Project SEMP

◆ Education Knowledge Society Project( EKSP)

◆ கல்வி நிர்வாக முறையிலான அம்சங்கள்

◆ உற்பத்தித் திறன் தொடர்பான 5 S முகாமைத்துவம்-கெய்சன் முறை

◆ தலைமைத்துவப் பண்புகள்

◆ முகாமைத்துவ ஒழுங்கமைப்பு

அலுவலகக் கட்டமைப்பு (Structure)

◆ கல்வித்துறையில் ஏற்படுத்தப்பட்டு வரும் மாற்றங்கள்

◆ தொடர்பாடல் திறன்கள் (Communication Skills)

◆ பிரச்சினை தீர்த்தல் தொடர்பான நுட்பங்கள் (Problem solving)

◆ கல்வி முகாமைத்துவ தகவல் முறை (Education Management Information System- EMIS)

◆ பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (School Based Teacher Development)

◆ தேசிய கல்வி ஆணைக்குழு. (National Education commission)

◆ வினைத்திறனும் விளைதிறனும் ( Effectiveness and Efficiency)

◆ கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான அறிவு

◆ ஆசிரியர் தொடர்பான விடயங்கள் :- உ-ம்: விடுப்புக்கள், ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு

◆ கல்வித் தொழில் நுட்பம்.

◆ குறிக்கோளுடனான முகாமைத்துவம் (MBO) Management By Object

◆ முகாமைத்துவக் கொள்கைகள் -

-மக்ஸ் வேபர், (Max Weber -1922)

- கென்றி பயோல், (Henri Fayol -1930)

- பிரடெறிக் ரெயிலர்,

◆ நிதி முகாமைத்துவம்

**கல்வி நிர்வாகம் :**

கற்றல், கற்பித்தலை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு முகாமைத்துவ அலகே கல்வி நிர்வாகமாகும். இத்துறையானது உளவியல், சமூகவியல், அரசியல், விஞ்ஞானம், பொருளியல், நிர்வாகவியல் ஆகிய துறைகளில் இருந்து கட்டியெழுப்பப்படுகின்றது.

எல்.லிக் என்பவர் கல்வி நிர்வாக முறைகளில் பின்வரும் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுகின்றார். இது சுருக்கமாக PODSCoRB என அழைக்கப்படுகின்றது.

◆ திட்டமிடல் - planning

◆ ஒழுங்கமைத்தல் (நிறுவுதல்) - Organising

◆ ஆளணியிடல்- staffing

◆ நெறிப்படுதல்- directing

◆ இயைபுபடுத்தல்- coordination

◆ அறிக்கையிடல் - reporting

◆ வரவு செலவுகளைத் தட்டமிடல் - budget planning

உற்பத்தித்திறன் தொடரபான 5 S முகாமைத்துவம் -கெய்சன் முறை

◆ செய்ரி - தேவையற்றவற்றை அகற்றி விடுதல்

◆ செய்தோன் - ஒரு பொருளை அதே இடத்தில் வைத்தல்

◆ செய்சோ - துப்புரவாக வைத்திருத்தல்

◆ செய்கெற்சு - தரப்படுத்தி வைத்திருத்தல்

◆ சித்சுகே - பயிற்சி

**5S I நடைமுறைப்படுத்துவதால் அடையக் கூடிய பயன்கள்:**

◆ உற்பத்தித்திறன் அதிகமாகும் - Productivity

◆ தரம்உயரும்- Quality

◆ செலவீனம் குறையும் - Low cost

◆ பொருட்கள் சேவைகள் பெற்றுக் கொடுப்பதற்கான காலம் குறையும் - Delivery

◆ பாதுகாப்பு அதிகரிக்கும் - Safety

◆ மன உறுதி அதிகமாகும் - Morale

◆ தேடுவதற்கான நேரம் குறையும்

◆ நிறுவனம் தொடர்பாக நல்ல அபிப்பிராயம்உருவாகும்

**பல்தரக் கற்பித்தல்:**

ஒன்றுக்கு மேற்பட்ட தரங்களை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வயதுக் குழு மாணவர்களைக் கொண்ட தொகுதியொன்றை ஒரே ஆசிரியர் கையாளவேண்டிய கற்பித்தல் / கற்றல் நிலை பல்தரக் கற்பித்தல் எனப்படும்.

**பல்மட்டக் கற்பித்தல்:**

ஒரே வகுப்பில் வெவ்வேறு தரங்களில் உள்ள மாணவர்களைத் தனித்தனிக் குழுக்களாக்கி அவர்களுடைய தனியாள் ஆற்றல்களை வளர்க்கக்கூடிய கற்பித்தல்

**தலைமைத்துவம்:**

தலைமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவு செய்வதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் ஒரு தெளிவான குறிக்கோள், நெறிப்படுத்துகை மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்குவதனூடாக மக்களை வழிப்படுத்துதலாகும்.

**சிறந்த தலைமைத்துவப் பண்புகள்:**

1.சிறந்த நேர முகாமைத்துவமுடையவராக இருத்தல்

2.பொறுப்பேற்றல்

3.வகைகூறுபவராக இருத்தல் .

4.சிறந்த தொடர்பாடலினூடாக நல்லுறவை வளர்த்தல்.

5.பக்கச் சார்பற்றவராக இருத்தல்.

6.விமர்சனங்களை ஏற்கும் பண்பு

7.பிரச்சினை தீர்த்தலில் சரியான தீர்மானம் எடுத்தல்.

8.முரண்பாட்டுக்கான தீர்வுகளை விரைவாகச் செயற்படுத்துதல்

9.விட்டுக்கொடுக்கும் தன்மை, (நெகிழ்வுத்தன்மை),

10.மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தல்.

11.மற்றவர்களை ஊக்குவிப்பவராக இருத்தல்.

12.நேர்மையும் நம்பகத்தன்மையும் கொண்டவராக இருத்தல்.

13.பொருத்தமானவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து, கண்காணித்தல்.

14.சகல விடயங்களிலும் முன்மாதிரியானவராக இருத்தல்.

15.அர்ப்பணிப்புடையராக இருத்தல்

**நேரத்தை விழுங்குபவை:**

1.ஒழுங்குபடுத்தப்படாத கூட்டம்

2.திட்டமற்ற வேலைப் பகிர்வு

3.தீர்மானமின்மையும், தாமதமும்

4.குறிப்பிட்ட பணிகளில் அதிக ஈடுபாடு காட்டுதல்

5.சுய அபிவிருத்தியின்மை

6.தொலைபேசி உரையாடல

7.சுய கட்டுப்பாடின்மை

8.விருந்தினர்களின் தலையீடுகள்

9.முரண்பாட்டு முகாமைத்துவம்

**தீர்மானம் எடுத்தல் படிமுறைகள்:**

பிரச்சினைகளை இனங்காணல், பிரச்சினைகளுக்கான காரணத்தை ஆராய்தல், மாற்று வழிகளைக் கையாளுதல், பொருத்தமான வழிகளைத் தேர்ந்தெடுத்தல், எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல்

**சிறுவர் நேயப் பாடசாலை என்பது,**

◆ மகிழ்ச்சியானதும்ஆரோக்கியமானதுமான பிள்ளைகள் உள்ள

◆ அன்பாகவும், ஆர்வத்துடனும் பிள்ளைகளைக் கவனித்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் உள்ள

◆ பெற்றோரிடமும் அயல் சமூகத்திடமும் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் பெறுகின்ற

◆ ஆண்-பெண் பிள்ளைகள் அனைவரையும் அவர்கள் அடையவேண்டிய உச்ச நிலைக்கு இட்டுச் செல்கின்ற

◆ பாதுகாப்பான மகிழ்ச்சிகரமான சூழலைக் கொணட ஒரு இடமாகும்

**கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (EMIS)**

◆ கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையானது, கல்வி முகாமைத்துவத்திற்குத் தேவையான தரவுகளையும் தகவல்களையும் உருவாக்கும் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட சேவை அலகாகும்.

◆ இது வழமையாக கல்வி அமைச்சின் கொள்கைகளுக்கு அமைவாக பொறுப்புடைய ஒரு நிறுவனமாகச் செயற்படும்

◆ EMIS இன் முக்கியமான செயற்பாடுகளாக, கல்வி தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், கணனிமயப் படுத்தல், பயன்படுத்தல் மற்றும் பரவலாக்குதல் மூலம் கல்வியின் பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் வழங்குதல்

◆ அதன் வழமையான செயற்பாடுகளாக; கையினாலோ அல்லது கணனிமயப்படுத்தப்படுவதனூடாகவோ தகவல் தொழில் நுட்ப முறைமையினூடாகவோ இடம் பெறுகின்றன.

**பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (School Based Teacher Development)**

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியானது பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களுக்கும் பாடசாலை வளவினுள் பாடசாலையால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள், அல்லது வேறோர் பயிற்சி நிறுவனத்தில் பாடசாலை நேரத்தின் பின்னர் அல்லது விடுமுறை நாட்களில் ஒழுங்கு செய்யப்பட்டனவாகக் காணப்படும். எவ்வாறாயினும் முன்னெடுக்கப்படவுள்ள பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியானது பாடசாலையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஆசிரியர்கள் "நமக்குள் ம்ாற்றத்தை ஏற்படுத்துவதுடன் ஏனையோரையும் மாற்றுவோம்" என்ற கல்வித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

**பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக்குப் பயன்படும் உத்திகள்:**

◆ ஆசிரியர் கூட்டங்களில் ஆசிரியர் வாண்மை விருத்தி பற்றிய தலைப்புக்களை முன்வைத்து கலந்துரையாடல்.

◆ ஆசிரியர்களைக்கொண்ட பாடக்குழுக்களையும் பாட இணைப்பாளர்களையும் நியமித்து வாரத்திற்கு ஒரு தடவை கூடி பாடத்திட்டமிடல் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடல்.

◆ வெளியில் இருந்து வளவாளர்களை அழைத்துக் கலந்துரையாடல்களையும் செயலமர்வுகளையும் நடத்துதல்.

◆ இணையத் தளங்கள் மூலம் விடயங்களைப் பெறுவதற்கு வசதிகளை வழங்கி ஏனைய ஆசிரியர்களுடன் அத்தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல்.

◆ முன்மாதிரிப்பாட அவதானிப்புக்களுக்கு இடமளித்தல்.

◆ செயல்மூல ஆய்வு நடத்தி விளைவுகளைப் பகிர்ந்து கொள்ளல்.

◆ புதிய ஆசிரியர்களுக்கு மூத்தோர் வழிப்படுத்தல் முறையின் கீழ் பயிற்சி அளித்தல்.

◆ சுயமதிப்பீடு, சகபாடிகள் (Pear Group) மதிப்பீடு முறைகளை அறிமுகம் செய்தல்..

**பாடசாலை மேம்பாட்டுத் திட்டம்:**

மத்திய அமைச்சின் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை ஒவ்வொரு பாடசாலைக்கும் கையளித்தல் மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலையைக் கொண்டு நடத்துவதற்கு பொறுப்புக்களையும் அதிகாரத்தையும் அதன் பயனாளிகளிடம் ஒப்படைத்தல்.

**பாடசாலையின் பயனாளிகள்:**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், சமூக நிறுவனங்கள். (முற்றும்)

ந.அனந்தராஜ்
B.A.(Hons.) M.A
Dip-In-Edu., Dip-In- Journalism


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# மெய்ஞானத்தினூடான விஞ்ஞானம்

இந்துமதம் பிரதானமாக ஆறு சமயங்களை உள்ளடக்கியது ஆகும். சிவன், விஷ்ணு, சக்தி, விநாயகர், ஆறுமுகன், சூரியன் ஆகிய கடவுளரை முதன்மையாகக் கொண்டு இயங்கும் சமயங்களே அவை ஆகும். இந்துமத மக்கள் காலங்காலமாய் பலசம் பிரதாயங்களை பேணி வருகின்றனர். அவை இறைபக்தியை முதன்மையாகக் கொண்டிருப்பினும விஞ்ஞான தத்துவங்களும் அவற்றில் பின்னிப்பிணைந்துள்ளன. இந்துமதத்தை அர்த்தமுள்ளதாக்கிய பெருமை கண்ணதாசனுக்கே உரியது. அவரது துணையுடனும் கண்டுகேட்டு அறிந்தவற்றின் துணையுடனும் எழுதப்பட்ட சிறுதொகுப்பே இது. இந்து என்னும் பரந்த சமுத்திரத்தின் சிலதுளிகளே இவை.

பிள்ளைகளுக்கு தோடு, மூக்குத்தி குத்துகின்றனர். எதற்காக? அழுகுக்காக என்று ஒரு காரணம் கூறலாம். விஞ்ஞானம் என்ன கூறுகிறது தெரியுமா? உடலில் சேரும் தேவையற்ற வாயுக்கள் இத்துளைகளினூடாக வெளிவிடப்படுகின்றனவாம்.

உடலிலுள்ள அனைத்து நரம்புகளும் இமைகளுக்கிடைப்பட்ட நடுப்புள்ளியில் சந்திக்கின்றன. இந்து மதத்தவர் அவ்விடத்தில் திலகம் சூடுகின்றனர். திலகத்தின் தன்மை காரணமாக நரம்புகள் உயிர்ப்படைகின்றன. உடலும் உற்சாகமடைகின்றது. இது அறியவில்லை போலும் நவீன மங்கையர் ஸ்டிக்கர்பொட்டுக்கு இசைவாக்கமடைந்து விட்டனர். திருமணத்தின் போது மணமகளுக்கு மெட்டி அணிவிக்கப்படுகிறது. காலின்பெருவிரலுக்கு அடுத்த விரலில் மெட்டி அணிவதே வழக்கமாகும். நடக்கும் போது மெட்டியின் உராய்வால் குறித்த விரலின் நரம்புகள் தூண்டப்படுகின்றன. அந்நரம்புகளோடு தொடர்புடைய கருப்பை இதன் மூலம் வலுவடைகிறது.



இதனால்தான் திருமணத்தின் போது மெட்டி அணிவிக்கப்படுகிறது. இந்து ஆலயங்களில் செருப்புடன் செல்லக்கூடாது. ஆலயம் புனிதமானது தெய்வீகமானது. எனவே செருப்புடன் நுழையக்கூடாது என்பது காரணம் இதைவிட வெற்றுக்கால்களுடன் நடக்கும் போது நிலத்தின் தொடுகையால் கால்நரம்புகள் தூண்டப்படுகின்றன. செருப்பு அணியும் போது இதுதடைப்படுகிறது. நரம்புகளின் தூண்டலால் உடல் உற்சாகமடைகிறது. புனிதமான தினங்களில் வீட்டிலும் அயலிலும் சாணத் தண்ணீர், மஞ்சள் நீர்தெளிக்கின்றனர். ஆவை சூழலில் உள்ள கிருமிகளை உறிஞ்சுகின்றன. அதேபோல் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் திருநீறும் உடலில் உள்ள கிருமிகளை உறிஞ்சுகிறது. பூர்வ, அபரக்கிரியைகளின் போது மாவிலை, தோரணம் கட்டப்படுகின்றது. ஆவை சூழலிலுள்ள தேவையற்ற துணிக்கை, மனித உடலில் இருந்து வெளிவரும் வாயுக்கள், துணிக்கைகளை உறிஞ்சுகிறது. இதனால் சூழல் தூய்மை அடைகிறது. அர்ச்சகர்கள் சர்க்கரை பொங்கல், நெய், பால் என கொழுப்பும் இனிப்பும் நிறைந்த உணவுகளை நாளும் உண்கிறார்கள். எனினும் அவர்களை நோய் குறைந்த அளவிலேயே தாக்குகிறது. என்ன காரணம்? காற்று நுழையாத வண்ணம் அமைக்கப்பட்ட மூலஸ்தானத்தில் தினமும் இறைவனுக்கு பூசை செய்கின்றனர். அவ்வேளை வியர்வை மூலம் மேலதிக உப்பு, சர்க்கரை என்பன வெளியேற்றப்படுகிறது. அவர்களும் நோய்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். உலகில் எத்தனையோ வகையான தாவரங்கள் உள்ளன. எனினும் துளசி இலை, வேப்பிலை என்பன இந்து ஆலயங்களில் முதன்மை பெறுகின்றன. அவை சர்வரோக நிவாரணியாக தொழிற்படுவதே இதற்கு காரணம். இந்துக்களின் வீடுகளில் துளசி மாடம் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கு விளக்கேற்றி வழிபடுகிறோம். துளசி இலையின் மணத்தினை சுவாசிக்கும் போது அது உடலை தூய்மைப்படுத்துகிறது.

முற்கால ஆலயங்கள் பலவும் மலையில் அமைந்துள்ளன. மலை ஏறிச்செல்லும் போது உடற்பயிற்சி ஆகிறது. வியர்வையின் மூலம் தேவையற்ற கழிவுகள் அகற்றப்படுகின்றன. ஆனால் தற்போது காலச்சுருக்கத்தையும் பணப்பெருக்கத்தையும் காரணமாக்கி பலரும் வாகனமேறி இறைவனை வழிபடுகின்றனர். இந்துக்கள் மேற்கொள்ளும தலயாத்திரைக்கு சரித்திரத்தில் மிக முக்கிய இடம் உண்டு. தலயாத்திரை கால்நடையாகவே மேற்கொள்ளப்படுகிறது. ஆனாலும் நடந்து செல்வோரையும் வாகனத்தில் செல்வோரையும் இறைவன் ஏற்கிறான். ஆனால் நீண்டஆயுள் நடந்து செல்வோருக்கே கிடைக்கிறது. நடப்பதன் மூலம் கிடைக்கும் உடற்பயிற்சியே அவர்களின் சிறஞ்ஜீவத்திற்கு காரண மாகிறது. ஆலயங்களில் காவடி, கரகம் என்பன ஆடப்படுகிறது. அங்கப்பிரதட்சணம் செய்யப்படுகின்றன. இவை இறைவனை நேர்ந்து செய்யப்படுகின்றன. எனினும் நடனம் ஆடும் போது கிடைக்கும் உடல்பலம்




அத்தனை சுகமும் இவற்றை செய்யும் போது கிடைக்கின்றன. தயிரும் கீரையும் அதிகம் உட்கொள்ள வேண்டிய உணவுகள் ஆகும். எனினும் இவற்றை இரவில் உண்டால் சனீஸ்வரன் பிடிப்பான் என்று கூறுவர். ஏன அவ்வாறு கூறுகின்றனர்? இவைபுளிப்புநிறைந்த உணவுகள். இவைஜீரணமாக கிட்டத்தட்ட பதினெட்டு மணித்தியாலம் எடுக்கும். இரவில் இவற்றை உட்கொள்வதால் காலைக் கடனை காலம் மாறிச் செய்ய நேரிடும். அதனாலேயே அவ்வாறு கூறுகின்றனர். படுக்கும் போது கூட கிழக்கு மேற்காக படுக்க வேண்டுமென பெரியார் கூறுவார். இறந்தவர்களை மட்டுமே வடக்குதெற்காக படுக்கவைக்க வேண்டும் என்பார். எமன் தெற்கு திசையில் வாசம் செய்வதாலேயே இறந்தோரை அவ்வாறு படுக்கவைக்க வேண்டும் என்பது சமயம் சார்ந்த காரணம். எனினும் வடக்கு தெற்காக காந்தப்புலவீச்சு தாக்கம் இரத்த ஓட்டத்தில் தாக்கத்தை உண்டாக்குகிறது என்பதே விஞ்ஞானம் சார் காரணம். தூர இடங்கள், வயல், தோட்டம் போன்றவற்றிற்கு உணவு எடுத்து செல்கையில் உணவோடு கரித்துண்டு எடுத்து செல்லும் வழக்கம் தொன்றுதொட்டு முதல் உண்டு. கரி கையேடு இருந்தால் பேய் பிசாசு கிட்டவும் அண்டாது என்று கூறுவார். எனினும் நச்சுகளை உறிஞ்சும் திறன் கரிக்கே உண்டு. எனவே அது உணவு பழுதடைதலை தடுக்கிறது. பண்டிகை காலத்தில் மருத்துவக்குணம் மிக்க மருத்துநீர் வைத்து நீராடுகின்றனர். இதனால் உடல் நோய்கள் நீங்கப்பெறுகிறது. கோசலம், கோமயம், ஆலிலை, அரசிலை, அறுகு என்பன மூலிகைகுணம் மிக்கவை. இவை எல்லாம் ஒன்றாய் இணையும் போதுஆங்கில மருத்துவ மாத்திரைகளையே மிஞ்சிவிடுகின்றன. சுற்றிவரும் பூமியில் சுற்றி சுற்றிப்பாடு என்பது போல இந்துக்களின் நடைமுறைகளை சுழற்றிப் பார்த்தாலும் சரி, புரட்டிப்பார்த்தாலும் சரி, விஞ்ஞான தத்துவங்கள் பொசிந்துள்ளன. எத்தனையோ நூற்றாண்டுகளின் முன் இந்துக்கள் இவ்வாறு பயனுள்ள பலவிடயங்களை கண்டுபிடித்து விட்டனர். ஆனால் நவீனகாலத்தில் இந்துக்கள் இவற்றில் இருந்து விலகிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு செய்வதை விடுத்து இந்துக்கள் தமது நடை முறைகளை ஒழுங்காகப் பின்பற் றினால் வைத்தி யரும் தேவை யில்லை. வாழ்வு நீள வழிசொல்லும் நூல் களும் தேவையில்லை.

ஸ்ரீ.ஜஸ்மிகா
தரம் 11 .யா/உடுப்பிட்டி
மகளிர் கல்லூரி

## வாரத்திற்கு ஒரு புதிர்! 157

யுனானி மருத்துவத்தின் தந்தை எனப்படுபவர் யார்?

புதிர் 157 இற்கான விடைகளை 11.04.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கு.குணாளன்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 156 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.ராஜகோபால்
கந்தசுவாமி கோவிலடி,
மாவடி, வட்டுக்கோட்டை


**புதிர் 156 க்கான கேள்வியும் விடையும்:**

இறுதியாக நடைபெற்ற ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வில் உலக காலநிலை மாற்றம் தொடர்பில் கருத்துரைத்தவர். சிறந்த நடிகருக்கான விருது பெற்றவர் மற்றும் சூழலியலாளருமான நடிகர் யார்? Leonardo Dicaprio

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 157

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# கொல்கத்தாவில் கட்டுமானப் பணியின் போது மேம்பாலம் நேற்று திடீரென இடிந்து விழுந்தது



## 10 பேர் உயிரிழப்பு

(கொல்கத்தா)

**இந்தியாவின் மேற்கு வங்காள மாநில தலைநகர் கொல்கத்தாவில் மேம்பாலம் நேற்று திடீரென இடிந்து விழுந்ததில் 10 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.**

மத்திய கொல்கத்தாவில் போக்குவரத்து அதிகம் உள்ள கிரிஷ் பார்க் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. நேற்று பிற்பகல் ஊழியர்கள் வேலை செய்துகொண்டிருந்தபோது, பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இடிபாடுகளில் பல தொழிலாளர்கள் சிக்கியுள்ளனர்.

இதுபற்றி தகவல் அறிந்த பொலிஸாரும் மீட்புக்குழுவினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்தில் 10 பேர் இறந்திருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. 100க்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என விபத்தை நேரில் பார்த்த ஒருவர் நிருபர்களிடம் கூறியுள்ளார். (இ-5)

## கருணாநிதி ரெடியாகி விட்டார் குளு குளு வானில் ஒரு ட்ரிப்!



தமிழக சட்டசபை தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், திமுக தலைவர் கருணாநிதி, பிரசாரத்திற்காக தயார் செய்யப்பட்ட வானில் ஆய்வுப்பணி மேற்கொண்ட புகைப் படங்கள் வெளியாகியுள்ளன.

பிரசாரத்திற்காக தயார் செய்யப்பட்டுள்ள வானில் பல்வேறு வசதிகள் உள்ளன.

வை-பை', ஹோம் தியேட்டர், எல்.இ.டி. டி.வி. சாய்தள மெத்தை, டைனிங் டேபிள் உட்பட 'குளு குளு' சொகுசு வசதிகளுடன் 7 பேர் அமரக் கூடியதாகவுள்ளது.

தயார் செய்யப்பட்டுள்ள அந்த வான், தனக்கு மிகவும் வசதியாக உள்ளதா என்பதை தெரிந்துகொள்வதற்காக, கோபாலபுரத்தில் உள்ள தனது இல்லத்தில் இருந்து பாலவாக்கம் வரை நேற்று முன்தினம் மாலை ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, கருணாநிதியுடன் ஸ்டாலின், துரைமுருகன் ஆகியோர் இருந்தனர். (இ-5)

## கருணாநிதி அணிவித்த மோதிரத்தை கழற்ற மறுத்த வைகோ

திமுக தலைவர் கருணாநிதி அணிவித்த மோதிரம் குறித்த ருசிகர தகவலை தேமுதிக மக்கள் நலக் கூட்டணி பிரசார மேடையில் வைகோ பேசியுள்ளார்.

நெல்லையில் நடைபெற்ற தேமுதிக மக்கள் நலக் கூட்டணி தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய வைகோ, தாம் அரசியலுக்கு வந்த புதிதில் கிராமத்து மக்கள் தமக்கு ஒரு மோதிரம் பரிசளித்ததாகவும்,

அந்த மோதிரத்தை நீண்ட நாட்களாக கைகளில் அணிந்து வந்ததாகவும் தெரிவித்தார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி கையில் எப்போதும் அண்ணா அணிவித்த மோதிரம் இருக்கும் என பேசிய வைகோ,

அந்த மோதிரத்தை போல தமக்கும் கருணாநிதி ஒரு மோதிரம் பரிசளித்ததாக கூறினார், மேலும் எக்காரணம் கொண்டும் அதை கழற்றக்கூடாது என்று தொடர்ந்து அணிந்து வந்ததாக தெரிவித்தார்.

மிசா போராட்டத்தின் போது அந்த மோதிரத்தின் மீது தாம் கொண்ட மதிப்பை எவ்வளவு எடுத்துக் கூறியும் வலுக்கட்டாயமாக சிறை அதிகாரிகள் கழற்றி விட்டார்கள் என்றார்.

அதில் இருந்து இதுவரை தாம் எந்த மோதிரமும் அணிவதில்லை எனறும், வேறு நகைகளும் போட்டதில்லை எனவும் வைகோ தெரிவிததுள்ளார்.

முன்னதாக, சட்டமன்ற தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு மோதிரம் சின்னம் ஒதுக்கபட்டுள்ளது. மோதிரம் சின்னத்தை பிரபலப்படுத்தும் வகையில் திருமாவளவனுக்கு வைகோ 2 பவுண் மோதிரத்தை பரிசாக அணிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

### பாரதச் செய்தி

## 13 இலட்சம் ரூபாய் இலஞ்சமாக வழங்கினேன்

### ஜெயலலிதாவுக்கு கடிதம் அனுப்பிய பிரமுகர்

அதிமுக பிரமுகர் ஒருவர் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இலஞ்சம் வாங்கிய விபரத்தை எழுதி ஜெயலலிதாவுக்கு அனுப்பிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை அதிமுக மாவட்ட செயலாளராக இருக்கும் முக்கூர் சுப்ரமணியம் பகுதி நேர ஆசிரியர் பணி மற்றும் கிராம உதவியாளர் பணி வாங்கித் தருவதாகக் கூறி இலஞ்சம் வாங்கியதை, ராஜன் என்ற அதிமுக உறுப்பினர் எழுதி அதிமுக பொதுச் செயலாளருக்கு அனுப்பியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றிய கழகச் செயலாளராக இருக்கும் ராஜன் தனது 13 இலட்சம் ரூபாய் வசூலித்து முக்கூர் சுப்ரமணியனிடம் கொடுத்ததாக தெரிவித்துள்ளார்.

ஆனால் 3 ஆண்டுகள் ஆகியும பணி கிடைக்காத நிலையில் பணம் கொடுத்தவர்கள் தங்கள் குடும்பத்தினரை அவதூறாகப் பேசுவதாகவும் அதன்பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## சொத்துக் குவிப்பதை நிறுத்தாத முதல்வர் ஜெ.

### சுப்பிரமணியம் சுவாமி வாதம்

"தமிழக முதல்வர் ஜெயலலிதா, சொத்து குவிப்பதை தொடர்கிறார்," என, உயர் நீதிமன்றில், பா.ஜ.க, மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி வாதிட்டார்.

சொத்து குவிப்பு வழக்கில், தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட நான்கு பேரை, கர்நாடக உச்ச நீதிமன்றம் விடுதலை செய்ததை எதிர்த்து, கர்நாடக அரசும், தி.மு.க., பொதுச் செயலர் அன்பழகனும, உயர் நீதிமன்றில் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்குகள், நீதிபதி பினாகி சந்திர கோஷ், நீதிபதி அமிதவ் ராய் அடங்கிய அமர்வு முன் விசாரணையில் உள்ளன.

நேற்று முன்தினம், இந்த வழக்கில், புகார்தாரரான, பா.ஜ.க, மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி வாதிட்டார்.

அப்போது, அவர் கூறியதாவது, உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் ஊழலில் ஈடுபடுவது, நம் ஜனநாயக நடைமுறையை புற்றுநோயாக பாதித்து விடும். இது, தேசத்தின் பாதுகாப்பு, பொருளாதாரத்தை அச்சுறுத்தும். அதனால், உயர்ந்த பதவியில் இருக்கும் பொது ஊழியர்கள் மீதான ஊழல் வழக்குகளில் கருணை காட்டக்கூடாது. ஜெயலலிதா சொத்து சேர்ப்பது தொடர்ந்து கொணடிருக்கிறது. 2011 மே மாதம் நடந்த சட்டசபை தேர்தலில், அவர் தாக்கல் செய்த வேட்பு மனுவில், 51.40 கோடி சொத்துக்கள் இருப்பதாகக் கூறியுள்ளார். சொத்து வழக்கில் தண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பதவியை இழந்த அவர், விடுதலை செய்த பின், 2015 ஜூனில் ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிட் டார். அப்போது, 117.13 கோடி ரூபாய் சொத்துக்கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அவரது சொத்து கணக்கை கணககிட்டுள்ள முறை தன்னிச்சையானது. அதனால், பெங்களூர் தனி நீதிமன்றம் விதித்த தண்டனையை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் வாதிட்டார். வழக்கு விசாரணை, இன்றும் தொடர்கிறது என மேலும் தெரிவித்தார். (இ-5)

## இந்திய இராணுவ வீரர்களுக்கு குண்டு துளைக்காத ஆடைகள்



இந்திய இராணுவ வீரர்களின் பாதுகாப்பிற்காக குண்டு துளைக்காத ஆடைகள் வழங்க இராணுவம் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய இராணுவ வீரர்களுக்கு விரைவில் குண்டு துளைக்காத ஆடைகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரபல நிறுவனமான டாடா நிறுவனத்திடம் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


முதற்கட்டமாக சுமார் 50 ஆயிரம் குண்டு துளைக்காத ஆடைகளை தயாரித்து வழங்க சுமார் 140 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இந்த ஆடைகள் வரும் ஒகஸ்ட் மாதம் முதல் விநியோகிப்படும் என்றும் எதிர் வரும் 2017 ஆம் ஆண்டு ஜனவரிக்குள் அனைவருககும் குண்டு துளைக்காத ஆடைகள் வழங்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. தீவிரவாதிகளுடன் போராடும் இராணுவ வீரர்கள அவர்களின் துப்பாக்கி சூட்டிற்கு உயிரிழக்க நேரிடுகிறது. இதனை தவிர்ப்பதற்காக இராணுவ வீரர்களுக்கு குண்டு துளைககாத ஆடை வழங்க வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பயங்கரவாதத்துக்கு எதிராக இந்தியா-பெல்ஜியம் ஒப்பந்தம்

## பிரதமர் மோடி வலியுறுத்தல்

(பெல்ஜியம்)

**பயங்கரவாதம் எனும் பொதுவான சவாலை எதிர்கொள்வதற்கு, பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தம் மற்றும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தையை இந்தியாவும், பெல்ஜியமும் மீண்டும் தொடங்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.**



பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸ்"க்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சென்ற பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டுப் பிரதமர் சார்லஸ் மிச்செலுடன் பயங்கரவாதம் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது மோடி தெரிவிக்கையில்,

பெல்ஜியத்துக்கு கடந்த வாரம் துக்ககரமாக அமைந்தது (பயங்கரவாதத் தாக்குதலை குறிப்பிட்டார்). இந்த நேரத்தில், பெல்ஜியம் பிரதமருக்கு ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 8 நாட்களாக பெல்ஜியம் மக்கள் அனுபவித்து வரும் துயரம், ஆழ்ந்த வருத்தத்தை உங்களுடன் சேர்ந்து நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம். பயங்கரவாத வன்முறையை கணக்கிலடங்கா அளவுக்கு அனுபவித்தவர்கள் என்ற முறையில், உங்களது வலியை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். இக்கட்டான நேரத்தில், ஒட்டுமொத்த இந்திய மக்களும் பெல்ஜியம் மக்களுக்கு ஆதரவாகவும், உறுதுணையாகவும் இருப்பார்கள்.

பயங்கரவாதம் என்ற பொதுவான சவாலை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளில் ஒன்றாக, பரஸ்பரம் சட்ட உதவி ஒப்பந்தத்தை செய்து கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தையை இருநாடுகளும் மீண்டும் தொடங்க வேண்டும். குற்றவாளிகளை ஒப்படைத்தல் தொடர்பான ஒப்பந்தம், சிறைக்கைதிகளை பரஸ்பரம் பரிமாற வகை செய்யும் ஒப்பந்தம் ஆகியவை தொடர்பாக நடைபெறும் பேச்சுவார்த்தையை விரைந்து முடிக்க வேண்டும்.

ரயில்வேக்கள், துறைமுகங்களை நவீனப்படுத்த வேண்டும் என்பது இந்தியாவின் இலட்சியமாகும். 100இற்கும் மேற்பட்ட பொலிவுறு நகரங்களை உருவாக்கவும் இந்தியா திட்டமிட்டுள்ளது. இவை அனைத்தும், பெல்ஜியம் நாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தங்களது முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஒரு வாய்ப்பாகும். இந்தத் துறையில் இணைந்து செயற்பட்டால், இருநாடுகளிடையேயான வர்த்தக, பொருளாதார தொடர்புகள் புதிய உச்சத்தை அடையும்.

பெல்ஜியம் பிரதமருக்கு அழைப்பு: இந்தியாவின் பொருளாதார நிலை, அரசியல் நிலை ஆகியவற்றை காண்பதற்கு, இந்தியாவுக்கு பெல்ஜியம் வர்த்தகக் குழுவுடன் பிரதமர் சார்லஸ் மிச்செல் வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளேன். பெல்ஜியம்-இந்தியா இடையேயான நட்பு வரலாற்று ரீதியிலானதாகும். முதல் உலகப் போரில் பெல்ஜியத்துக்கு ஆதரவாக 1.30 இலட்சம் இந்திய வீரர்கள் போரிட்டனர். அதில், 9,000 வீரர்கள் தங்களது உயிரைத் தியாகம் செய்தனர் என பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார். (இ-5)

## 5 மாதங்களில் ஆக்கிரமிப்புப் படையினரின் தாக்குதலில் சிக்கி 206பாலஸ்தீனர்கள் பலி

(ஜெருசலேம்)

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 206 பாலஸ்தீனர்கள் பலியாகி உள்ளதாகவும், 16,512 பாலஸ்தீனர்கள் காயம் அடைந்துள்ளதாகவும் பாலஸ்தீன செம்பிறைச்சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை குறித்த காலப் பகுதியில் 33 இஸ்ரேலியர்களும் பலியாகி உள்ளதாக புள்ளி விபரம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. (இ-5)



### சீனாவில் ஊழல் குற்றச்சாட்டு

## முன்னாள் துணை ஆளுநருக்கு 12ஆண்டுகள் சிறைத் தண்டனை

சீனாவில் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் துணை ஆளுநருக்கு 12 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சீனாவில் ஜனாதிபதி க்சி ஜின்பிங் உத்தரவின்பேரில் முந்தைய ஆட்சிக் காலத்தில் இலஞ்ச, ஊழலில் ஈடுபுட்டோர் மீது வழக்குத் தொடரப்பட்டு கடுமையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. அந்தவகையில்,

சீனாவின் தெற்கு மாகாணங்களில் ஒன்றான ஹைனான் மாகாணத்தின் துணை ஆளுநராக கடந்த 2014ஆம் ஆண்டு பதவிவகித்த ஜி வென்லின் என்பவர் சுமார் 32 இலட்சம் அமெரிக்க டொலர் அளவுக்கு அரசுப் பணத்தை கையாடல் செய்துவிட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. சீனாவின் முனனாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆதரவுடன் இந்த முறைகேட்டில் அவர் ஈடுபட்டதாகவும் செய்திகள் வெளியாகின. இந்த ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக நடைபெற்றுவந்த விசாரணையில் ஜி வென்லின் மீதான குற்றச்சாட்டுகள் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டன. இதனையடுத்து, அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (இ-5)

## செவ்வாய்க் கிரகத்தில் விஸ்தரிக்கத்தக்க வீடு

### நாசா நடவடிக்கை

செவ்வாய்க் கிரகத்தில் விஸ்தரிக்கத்தக்க வீடு ஒன்றை சோதனை முயற்சியாக உருவாக்க நாசா திட்டமிட்டு வருகிறது.

செவ்வாய்க்கிரகம் குறித்தும் அங்கு காணப்படும் பல்வேறு உருவங்கள் குறித்தும் அண்மைக் காலமாக பல்வேறு தகவல்கள் வெளி வந்த வண்ணம் உள்ளன.

இதன் ஒரு பகுதியாக அமெரிக்க விண்வெளி நிர்வாகமான நாசா புது முயற்சி ஒன்றை சோதித்து பார்க்க திட்டமிட்டுள்ளது.

எதிர்காலத்தில் மிதவை வீடுகளே செவ்வாய்க் கிரகத்தில் சாத்தியம் என கருதும் நாசா, சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துடன் இணைக்கும் வகையில் விஸ்தரிக்கத்தக்க வீடு ஒன்றை சோதனை செய்ய உள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் இந்த முயற்சிக்கான பணிகளை ஆரம்பிக்கவுள்ள நாசா, சர்வதேச விண்வெளி ஆய்வகத்துடன் இணைக்கப்படும் முதல் சோதனை வீடு இதுவெனவும் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க் கிரகம்நோக்கியுள்ள பயணம் மிகவும் சிக்கலானது மற்றும் சவாலானது என தெரிவித்திருக்கும் நாசா, அதற்கான தீர்வை நோக்கி நகர்வதில் தொடர்ந்து முயன்று வருவதாகவும் தெரிவித்துள்ளது.

விஸ்தரிக்கத்தக்க வீடு அல்லது அறை குறித்த முயற்சியில் அறிவியல் ஆய்வாளர்கள் வெற்றி பெற்றால் அது சர்வதேச விண்வெளி ஆய்வகத்தில் பணிபுரியும் வண்வெளி வீரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றனர்.

செவ்வாய்க் கிரகத்தில் விண்வெளி வீரர்கள் அனுப்பப்படுவதற்கு முன்னர் அந்த வீரர்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் பல்வேறு கட்டங்களாக அனுப்பி வைக்கவும் நாசா முடிவு செய்துள்ளது. (இ-5)

## ரஷ்ய குண்டுவெடிப்பில் பொலிஸ் அதிகாரி பலி!

ரஷ்ய நாட்டின் தாகெஸ்தான் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இரண்டு கார்கள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன. இந்த சம்பவத்தில் ஒரு பொலிஸ் அதிகாரி உடல் சிதறி உயிரிழந்தார். 2 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றது.

ஆனால் இதுதொடர்பாக செய்தி வெளியிட்ட அந்த அமைப்பின் ஆதரவு பெற்ற 'அமக்' செய்தி நிறுவனம். இந்த தாக்குதலில் 10 பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டதாக கூறியுள்ளது. (இ-5)

## முன்னாள் அமைச்சர் உட்பட ஏழு பேர் விபத்தில் மரணம்!

தந்தையின் இறுதிச்சடங்கில் பங்கேற்கச் சென்ற கனடா நாட்டு போக்குவரத்து துறை முன்னாள் அமைச்சர் ஜீன் லாப்பியர்(வயது59) விமான விபத்தில் உயிரிழந்தார்.

கிழக்கு கியூபெக் நகரை நோக்கி சென்ற அந்த தனியார் விமானம் நேற்று மோசமான வானிலை காரணமாக மகதலேன் தீவில் தரையிறங்கியபோது ஏற்பட்ட இந்த விபத்தில் ஜீன் லாப்பியரின் மனைவி, இரு சகோதரர்கள், சகோதரி, விமானி உட்பட ஏழுபேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

கனடாவின் முன்னாள் பிரதமர் பால் மார்ட்டின் ஆட்சிக் காலத்தில் 2004-2006 ஆண்டுகளுக்கிடையில் அந்நாட்டின் போக்குவரத்துத்துறை அமைச்சராக பொறுப்பு வகித்த ஜீன் லாப்பியர், அந்த பதவிக்கு முன்பும், பின்னரும் வானொலி நிகழ்ச்சி தொகுப்பாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பங்களாதேஷ் முன்னாள் பிரதமரை கைது செய்யுமாறு மன்று உத்தரவு

பங்களாதேஷ் முன்னாள் பிரதமரும், தற்போதைய பிரதான எதிர்க்கடசியின் தலைவியுமான காலிதா ஸியாவை கைது செய்யுமாறு அந்நாட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தர விட்டுள்ளது.

கடந்த வருடம் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போது நடத்தப்பட்ட தீக்குண்டுத் தாக்குதல்களில் அவர் வகித்த வகிபாகம் குறித்தே அவரைக் கைது செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



டாக்கா மெட்றோபொலிட்டன் நீதிமன்றத்தின் நீதிபதி, காலிதா ஸியாவுக்கு எதிராக பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு மேற்படி பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## விபத்துச் சம்பவம் குறித்து

# அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடம் 7 மணித்தியாலங்கள் விசாரணை

(கொழும்பு)

கடந்த மாதம் இராஜகிரியவில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் வாகனம் இளைஞர்கள் இருவரை மோதி காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க சுமார் 7 மணித்தியாலங்கள் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

இது தொடர்பான விபரங்களை வெலிக்கட பொலிஸார் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் தெரிவித் துள்ளனர்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க வின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டதுடன் மேற்படி விபத்து தொடர்பான, நேரில் கண்ட சாட்சிகள் உட்பட 37 பேர் விசாரணைக்குட்படுத் தப்பட்டதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர். கடந்த திங்கட்கிழமை அமைச்சரிடம் இந்த வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

மேற்படி விபத்துச் சம்பவத்தின் போது அமைச்சர் வாகனத்தில் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே அமைச்சரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

காயப்பட்ட இரண்டு இளைஞர்களில் ஒருவர் உயிருக்குப் போராடி வருவதுடன் சிங்கப்பூரில் சிகிச்சை அளிக்க அமைச்சர் உதவ வேண்டும் என இளைஞனின் தந்தை கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (3)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 31.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.59 | 146.78 |
| பவுண்ட் | பிரிட்டன் | 204.13 | 211.66 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 160.63 | 167.26 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 146.87 | 153.16 |
| டொலர் | கனடா | 109.21 | 113.90 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 108.25 | 113.48 |
| டொலர் | சிங்கப்பூர் | 105.32 | 109.48 |
| ரூபா | இந்தியா | 2.1680 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6774 |
| குவைத் | டினார் | 476.4901 |
| ஓமான் | ரியால் | 373.7614 |
| கட்டார் | ரியால் | 39.5248 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3667 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1789 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 70 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 | 80-120 | 100 | 120 | 80 |
| தக்காளி | 40 | 50 | 25 | 30 | 40 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 35 | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 60 | 50 | 100 | 40 |
| கரட் | 100 | 80 | 70 | 80-200 | 80 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 50 | 80 | 30 | 50 | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 35 | 50 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 | 50-80 | 70 | 100 | 50 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 65 | 80 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 150 | 110 | 120 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 80 | 60 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 100 | 50 | 80 | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 40 | 100 | 30 | 60 | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 60 | 80 | 70 | 100 | 70 |
| கறிமிளகாய் | 140 | 100 | 50 | 120 | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 375 | 400 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 100 | 200 | 100 | 120 | 120 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 35 | 60 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 20 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 160 | 150 | 120 | 160 | 300 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-45 | 50 | 40 | 30-45 | 40 |
| இராசவள்ளி | 160 | 200 | 110 | 140 | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 220 | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 40 | 25 | 40 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சிங்களத் தீவிரவாதிகளால் சந்திரிகாவின் கணவர் கொலை 144

...அப்படி எங்களைக் கொழும்புக்கு கொண்டு செல்ல முயற்சித்தால் எங்களை நாங்களே அழித்துக் கொள்வோம்.

மேற்கண்டவாறு கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

### அதிர்ச்சி அலைகள்

17 விடுதலைப்புலிகள் தற்கொலை செய்து கொண்ட செய்தி இலங்கையில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. விடுதலைப்புலிகள் மத்தியிலும் தமிழர்கள் உள்ளத்திலும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

தற்கொலை செய்து கொண்டவர்களில் ஒருவரான குமரப்பாவுக்கு ஒரு மாதத்துக்கு முன்தான் திருமணம் நடந்தது.

இறந்தவர்களில் மற்றொருவராகிய ரகு விடுதலைப்புலி தலைவர் பிரபாகரனுக்கு மெய்க் காவலாக இருந்தவர்.

விடுதலைப்புலிகள் தற்கொலை செய்து கொண்டது குறித்து இந்தியா தனது வருத்தத்தை தெரிவித்தது.

17 விடுதலைப்புலிகளையும் விடுதலை செய்யும் படி இலங்கையிடம் வற்புறுத்தி வந்தோம். இந்த நிலையில் அவர்கள் தற்கொலை செய்து கொண்டது வேதனை அளிக்கிறது என்று வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### இராணுவ முகாம்கள் மீது தாக்குதல்

விடுதலைப்புலிகள் தற்கொலை செய்து கொண்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை, தொண்டமனாறு ஆகிய இடங்களில் உள்ள இலங்கை இராணுவ முகாம்களை விடுதலைப்புலிகள் தாக்கினார்கள். இதில் இலங்கை இராணுவத்தினர் 2 பேர் இறந்தனர்.

மேலும் தாங்கள் கைது செய்து வைத்திருந்த 8 சிங்கள சிப்பாய்களையும் 4 பொலிஸ்காரர்களையும் விடுதலைப் புலிகள் கொன்றனர்.

இலங்கையின் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின். மருமகனும் பிற்காலத்தில் இலங்கையின் ஜனாதிபதியான சந்திரிகாவின் கணவருமான விஜயகுமார ரணதுங்கா (வயது43) சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் தமிழர்களிடம் அனுதாபம் கொண்டிருந்ததால் சிங்களத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

### காதல் திருமணம்

சந்திரிகா 1978 ஆம் ஆண்டில் அன்றைய பிரபல சிங்கள நடிகர் விஜயகுமார ரணதுங்காவை காதலித்து மணந்தார்.

விஜயகுமார ரணதுங்கா அரசியலில் ஈடுபாடு கொண்டவர். 1977 இல் மாமியாரின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். பிறகு கருத்து வேற்றுமை ஏற்பட்டுத் தனிக்கட்சி சார்பில் (லங்கா மகாஜன கட்சி) தொடங்கினார்.

### தமிழர்களிடம் அனுதாபம்

இலங்கையில் உரிமைக்காகப் போராட்டம் நடத்தி வந்த தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டிருந்தார். இலங்கையில் இனக் கலவரம் மூண்ட பிறகு 1986 ஒக்டோபர் 21 ஆம் திகதி மனைவி சந்திரிகாவுடன் யாழ்ப்பாணத்துக்குச் சென்றார். அப்போது யாழ்ப்பாணம் முழுவதும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இருந்தாலும் துணிச்சலுடன் யாழ்ப்பாணத்தில் சுற்றுப் பயணம் செய்தார். அதுமட்டுமல்ல விடுதலைப்புலிகளின் தளபதி கிட்டுவைச் சந்தித்துப் பேசினார்.

இந்தப் பேச்சின் முடிவில் விடுதலைப்புலிகளிடம் போர்க் கைதிகளாக பிடிக்கப்பட்டிருந்த சில சிங்கள சிப்பாய்களை நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிட்டு விடுதலை செய்தார்.

### சதித்திட்டம்

ராஜீவ்காந்தி- ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை சிங்கள வெறியர்கள் எதிர்த்தனர். ஒரு சில சிங்களத் தலைவர்கள் மட்டுமே ஆதரித்தனர். அப்படி ஆதரித்தவர்களில் விஜயகுமார ரணதுங்காவும் ஒருவர்.

இலங்கைப் பிரச்சினையில் விஜயகுமார ரணதுங்கா தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசி வந்ததால் அவர் மீது சிங்கள வெறியர்கள் கோபம் கொண்டிருந்தனர். அவரைத் தீர்த்துக்கட்டவும் சதித்திட்டம் தீட்டினர்.

### சுட்டுக்கொலை


கொழும்பில் இருந்து 3 மைல் தூரத்தில் உள்ள பொலங்கொடவில் ரண துங்கா வசித்து வந்தார். 16.02.1988 காலை அவர் வீட்டு வராண்டாவில் தன் கட்சி பிரமுகர்களுடன் பேசிக் கொண்டு இருந்தார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 மர்ம மனிதர்கள் ரணதுங்காவை இயந்திர துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார்கள்.

குண்டுகள் ரணதுங்கா உடலின் மேல் பகுதியில் பல இடங்களிலும் துளைத்து விட்டன.

9 குண்டுகள் உடலில் பாய்ந்தன. அடையாளம் தெரியாதபடி அவரது முகம் சிதைந்துவிட்டது.

ரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள்.

டாக்டர்கள் உடலைப் பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்து விட்டார் என்று தெரிவித்தனர்.




கணவருடன் சந்திரிகா.

(தொடரும்)

# புனர்வாழ்வு அளிக்கப்படாதவர்களால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

## கோத்தபாய ராஜபக்ஷ எச்சரிக்கை



(கொழும்பு)

சாவகச்சேரியில் இருந்து மீட்கப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொளளப்பட வேண்டும் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதிலும் இராணுவத்தினரிடம் சரணடையாத பலர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இவ்வாறானவர்கள் நாட்டிற்கு பாரதூரமான அச்சுறுத்தலாக மாறக் கூடும் என கோத்தபாய ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# ஒரு கி.மீற்றர் நீளமான நடைபாதை இரவோடு இரவாக அகற்றப்பட்டது

## வத்தளை பொலிஸாருக்கு எதிராக குற்றச்சாட்டு

வத்தளைப் பகுதியில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்திற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த நடைபாதை இரவோடு இரவாக காணி அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் ஏற்பாட்டில் அகற்றப்பட்டமை தொடர்பாக கம்பஹா மாநகர சபை உறுப்பினர் சிசிறி ஜயக்கொடி குற்றம் சாட்டியுள்ளார் என கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்று செய்திவெளியிட்டுள்ளது.

8 ஏக்கரில் அமைக்கப்படவுள்ள மேற்படி வீட்டுத் திட்டத்திற்காக சுமார் 40 பேர் கொண்ட குழு ஒன்று நள்ளிரவு வேளை மேற்படி நடைபாதைக் கற்களை அகற்றியுள்ளது.

வத்தளைப்பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிக்கு இது தொடர்பில் ஏற்கனவே தெரிந்திருந்தது.

மேற்படி பிரதேச மக்கள் இது தொடர்பில் வாக்குமூலம் கொடுப்பதற்கு அச்சப்படுகின்றனர்.

குற்றச் செயலாளர் மற்றும் கொலைகள் அங்கு தொடர்ந்து இடம்பெறுவதால் அவர்கள் அச்சமடைகின்றனர்.

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் பிரகாரம் மேற்படி செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படின் 20 வருடங்கள் வரை சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

பொலிஸார் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய நேரிடும். ஒரு கிலோ மீற்றர் நீளமான இந்த நடைபாதை தமக்கு மீண்டும் வேண்டும் என்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(3)

# விரைவில் அமைச்சரவையில் மாற்றங்கள்?

(கொழும்பு)

அமைச்சரவையில் விரைவில் மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவை கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்திற்கு முனபதாக அல்லது அதற்கு பின்னர் இந்த அமைச்சரவை மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

தற்போது மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சராக பதவி வகிக்கும் எம்.எல்.எம். ஹிஸ்புல்லாவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியொன்று வழங்கப்படவுள்ளது.அத்துடன், பதுளை மாவட்ட ஐ.ம.சு. முன்னணி எம்.பியும் முன்னாள் சீனி தொழிற்றுறை அமைச்சருமான லக்ஷ்மன் செனவிரத்னவுககு பிரதியமைச்சர் பதவியொன்றும் வழங்கப்படவுள்ளதாகவும் அறியவருகிறது.

இதேவேளை வேறு முக்கிய அமைச்சுப் பதவிகளிலும் மாற்றங்கள் ஏற்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பிக்களான மனுஷ நாணயக்கார, கீதா குமாரசிங்க மற்றும் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்களில்பேசப்பட்டது. ஆனால் இதுவரையில்அவர்களுக்கு எந்தவிதமான அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவில்லை.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பி. லக்ஷ்மன் செனவிரத்ன பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த போதும் அரசு சபைக்கு முன்வைத்த பிரேரணைகளுக்கு ஆதரவு வழங்கியதோடு தனது உரைகளில் அரசின் நடவடிக்கைகளை ஆதரித்து பேசினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அனுமதிப் பத்திரங்களின்றி யானைகளை வைத்திருந்த நபர்களுக்கு எதிராக வழக்கு

அனுமதிப் பத்திரங்களின்றி யானைகளை வைத்திருந்த நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க சிரேஷ்ட சட்டத்தரணி திலீப பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வனவிலங்கு திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் யானைகள் தொடர்பான புத்தகத்தில் மாற்றம் செய்யப்பட்டது குறித்த வழக்கு கொழும்பு நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு பிரதான நீதவான் கிஹான்பிலபிட்டிய முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அனுமதிப்பத்திரங்களின்றி சட்டவிரோதமான முறையில் யானைகளை வைத்திருந்த நபர்களுக்கு எதிராக அந்தந்த நீதமன்ற வலயங்களில் வழக்குத் தொடர தீர்மானித்துள்ளதாக சட்டத்தரணி திலீப பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவிற்கு அமைய சட்டவிரோதமாக வளர்க்கப்பட்டு வந்த 40 யானைகளில் 38 யானைகளை வனவலங்கு திணைக்கள அதிகாரிகள் தமது பொறுப்பின் கீழ் எடுத்துள்ளனர்.

ஏனைய யானைகளை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.இந்த வழக்கு மே மாதம்18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் யானைகளை அன்பளிப்பாக வழங்கியமை தொடர்பில்முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விற்கு எதிராகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆட்சிக் காலத்தில் உரிய ஆவணங்கள் இன்றி மகிந்த ராஜபக்ஷவினால் சட்டவிரோதமாக யானைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### தொழிற் சிரத்தை

நாம் ஒவ்வொருவருமே நமக்குரிய முழு நேரத் தொழிலை அக்கறையோடும் ஈடுபாட்டுடனும் செய்து வருகிறோமோ என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

காரணம் பெரும்பாலானவர்கள் தங்களுக்கு இருக்கும் பொறுப்புக்களைப் பற்றியும் கடமையைப் பற்றியும் எண்ணிச் சலித்துக் கொள்கிறார்களே தவிர நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

என்னவோ எப்படியோ போய்க் கொண்டிருக்கிறது என்று முகத்தைச் சுழித்துக் கொள்வார்கள்.

மாணவராகட்டும் குடும்பத் தலைவியாகட்டும் ஊழியராகட்டும் நிறுவன முதலாளியாக இருக்கட்டும் அனைவருக்குமே மேற்கூறிய கேள்வி பொருந்தும்.

பழகிப்போன எதுவும் புளித்துப் போனது போல்தோன்றும். சுவாரஸ்யமாய் இல்லாதது போன்ற பிரம்மை ஏற்படும்.

இந்த உணர்வுகளை மிகைப்படுத்திக் கொண்டு விட்டால்–அது உள்ள நிலைமைக்கும் சரிவை ஏற்படுத்தி விபரீதவிளைவுகளை ஏற்படுத்தி விடும். கடனே எனக் கடிகார முள்ளைப் போன்றும் செக்கு மாடு போன்றும் செயற்படுவதில் எவ்வித பயனும் இல்லை.

இவரால் எப்படி முடிந்தது என வியக்கும் ஒவ்வொரு நபரிடமும் உண்மையைக் கேட்டுப் பார்த்தால் இது விளங்கும்.

முன்னேறியவர்களைக் கேட்டுப் பார்த்தாலும் இந்த உண்மை விளங்கும்.

இத்தகைய இருபிரிவினரும் தங்கள் குறிக்கோள், இலட்சியம், ஆர்வம், ஈடுபாடு எல்லாமே தங்கள் கடமை பற்றியும் பொறுப்புப் பற்றியும் இருந்தது என்று சொல்வார்கள்.

தொடர்ந்து செய்யும் பணியில் ஈடுபாடு காட்டாதவர்கள் எந்த வகையிலும் முன்னேற முடியாததோடு இருக்கும் தகுதியையும் காப்பாற்றிக் கொள்ளத் தவறிவிடுகிறார்கள்.

ஒருவர் தன் தொழிலைக் கேவலமாக எண்ணி வெறுத்து ஒதுக்குவதை விடப் பேதைமையான செயல் வேறில்லை.

காரணம் அதன் மூலம் அவர் அதைவிடக் கேவலமான தொழிலைத் தான் செய்ய நேரிடும்.மாறாக தான் செய்யும் தொழில் புதுமை செய்ய வேண்டும் என்ற விழைவு, நற் பெயர் வாங்க வேண்டும் என்கிற எண்ணம், தொழிலை மதிக்கும் உணர்வு, பொறுப்பை உணரும் தன்மை ஆகியவற்றை அவர் ஏற்படுத்திக் கொண்டால்–

தான் கேவலமாக எண்ணும் உணர்விலிருந்து விடுபடுவதோடு–விரும்பும் நல்ல நிலைமையையும் இலட்சியங்களையும் எட்டிப் பிடிக்க முடியும்.

ஈடுபாடுதான் மனிதனை உயர்த்தும். ஆர்வம் தான் மனிதனை வளர்க்கும். சிரத்தை தான் அவனை மேம்படுத்தும்.மேலும் புதிய உண்மைகளைப் புரிய வைக்கும்!

லேனா தமிழ்வாணன்




# சிறுவர் அரங்கம்

1398

# குட்டிப் பையன்!

...“அருகில் உள்ள வயல் வெளியின் பக்கத்திலுள்ள பள்ளத்தாக்கினைக் கடந்தால் ஆறு வரும்,” என்றது.

அவ்வழியே நடந்த மைக்கேல் ஆற்றினை அடைந்தான். மரக்கிண்ணத்தைப் படகு போல் வைத்தான். அதில் ஏறி அமர்ந்து கொண்டான். ஆற்றில் தண்ணீர் வேகமாக ஓடியது. அதில் மரக்கிண்ணத்திலான படகு வேகமாகச் சென்றது.

வழியில் மீன் ஒன்று பாய்ந்து வந்தது. அது அவனைத் தின்பதற்கு வாயைத் திறந்து பாய்ந்தது. மைக்கேல் தனது துடுப்பினால் அடித்து விரட்டினான்.

அதன்பின், அலைகளின் போக்கில் படகினை வேகமாகச் செலுத்தினான். அப்போது கடுமையான காற்றும், மழையும் அடித்தது. அதனையும் சாமர்த்தியமாக சமாளித்து பயணித்தான். கடினமான நீண்ட பயணத்திற்குப்பின் அவன் தலைநகரை அடைந்தான்.

அங்கு மக்கள் நடமாட்டம் நிறைந்த சாலையில் அவன் பெருமையுடன் நடந்து சென்றான். இறுதியில் மிகப் பெரிய அரண்மனையை அடைந்தான். அதுதான், பணி செய்ய வேண்டிய இடமென அவன் முடிவு செய்து கொண்டான்.

அங்கு சென்று கதவைத் தட்டினான். வீரன் ஒருவன் கதவைத் திறந்தான். அவன் சுற்றும் தேடினான். யாரும் தென்படவில்லை.

“யாரங்கே? யார் கதவைத் தட்டியது?” என்று அவ்வீரன் கோபத்துடன் பார்த்தான். “நான் தான் ஒரு அங்குலச் சிறுவன். உங்கள் காலடி அருகே பாருங்கள்,” என்றான் மைக்கேல்.

அவ்வீரன் ஆச்சரியத்துடன் அவனை அரண்மனைக்குள் அனுமதித்தான். அரசர் அவனை அருகில் அழைத்து விசாரித்தார்.


அதற்கு மைக்கேல், “மன்னவா நான் உங்களிடம் ஒரு உதவி வேண்டி வந்துள்ளேன். நான் தங்களின் இந்த அரண்மனையில் பணியாற்ற வேண்டும். தாங்கள் அதற்கு வாய்ப்பளித்து உதவ வேண்டும்,” என்று பணிவுடன் வேண்டினான்.

“எனது அரண்மனையில் எல்லா வேலைகளுக்கும் ஆட்கள் இருக்கின்றனர். ஆனால், உனது புத்திசாலித்தனமும், சுறுசுறுப்பும் எனக்குப் பிடித்திருக்கிறது. எனவே, எனது மகளுக்கு எழுதவும், படிக்கவும் கற்றுக் கொடுக்கும் பணியினைத் தருகிறேன். அவளுக்கு மகிழ்வுடன் கற்றுக்கொடுக்கும் பணியினைச் செய்,” என்று கூறினார் மன்னர்.

மன்னனின் மகள் பெரும் அழகியாக இருந்தாள். அவளும் மைக்கேலை அன்புடன் நேசித்தாள். அவனது கற்பிக்கும் திறனைக் கண்டு வியப்படைந்தாள்.

ஒருநாள்-

மன்னனின் மகள் கோவிலுக்குப் புறப்பட்டாள். அப்போது மைக்கேல் அவளுடன் சென்றான். கோவிலுக்குச் சென்று திரும்பும் வழியில் ஒரு கொடூரமான அரக்கன் மன்னன் மகளை கடத்திக் கொண்டு தனது இருப்பிடம் செல்ல முயன்றான்.



அப்போது மைக்கேல், “ஏய்... கொடிய அரக்கனே... அவளைத் தொடாதே! தொட்டால் உன்னைக் கொன்று விடுவேன்,” என்று மிரட்டினான்.

அதனைக் கேட்ட அரக்கன் கோபமாகச் சிரித்தான். அது அப்பகுதியே அதிர்வது போலிருந்தது.

“ஒரு அங்குலச் சிறுவனே! என்னை நீ என்ன செய்ய முடியும்? முதலில் உன்னைத் தின்று விடுகிறேன் பார்,” என்றவாறே அவனைப் பிடித்து வாயில் போட்டுக் கொண்டான்.

உடனே அரக்கன் திணறினான். உள்ளே சென்ற மைக்கேல் தனது கையிலிருந்த ஊசியால் தொண்டையில் குத்தினான். அதன் வலி தாங்க முடியாமல் அரக்கன் கத்தினான். வாயைத் திறந்து வாந்தி எடுத்தான்.

அப்போது ரத்தத்துடன் கலந்து மைக்கேல் வெளியில் வந்தான். ஊசி குத்தியதால் ரத்தம் பீறிட்டது. வலி தாங்க முடியாமல் அரக்கன் மலையை நோக்கி ஓடினான்.

உடனே மன்னனின் மகள் நன்றியுடன் மைக்கேலை பார்த்தாள்.

“என்னை அரக்கனிடமிருந்து காப்பாற்றியதற்கு நன்றி,” என்று கூறினாள்.

அப்போது அவர்களிருவரும் அரக்கன் விட்டுச் சென்ற மந்திர சுத்தியல் ஒன்றினைக் கண்டனர். அதனைக் கண்ட மன்னன் மகள், “இது ஒரு மந்திர சுத்தியல். இதனைத் தரையில் அடித்து நாம் வேண்டுவதைக் கேட்டால், அப்படியே நடக்கும். உனக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டாள்.

“எனக்கு உயரம் வேண்டும். என்னை உயரமானவனாக மாற்ற முடியுமா? அதற்கு உதவி செய்யுங்கள்,” என்று வேண்டினான் மைக் கேல்.

மன்னன் மகளும் மந்திர சுத்தியலைத் தரையில் தட்டி வேண்டினாள். (முற்றும்)

04.2016
01

## இன்றைய நாளின்



## முன்னைய பதிவுகள்

- 1793 - ஜப்பானில் உன்சென் எரிமலை வெடித்ததை அடுத்து நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 53,ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1826 - சாமுவேல் மோரி உள் எரி பொறிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1867 - சிங்கப்பூர் பிரித்தானிய குடியேற்ற நாடாகியது.
- 1891 - சிக்காக்கோவில் றிக்லி நிறுவனம் (Wrigley Company) ஆரம்பிக்கப்பட்டது.
- 1924 - அடொல்ஃப் ஹிட்லர் ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். ஆனாலும் அவர் 9 மாதங்களில் விடுதலை பெற்றார்.
- 1935 - இந்திய ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
- 1937 - ஜேர்மனின் ஏடென் பிரித்தானிய குடியேற்ற நாடாகியது.
- 1939 -ஸ்பானிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜப்பானின் ஒக்கிநாவா தீவுகளில் இறங்கின.
- 1946 - மலாய் கூட்டமைப்பு உருவானது.
- 1948 - பரோ தீவுகள் டென்மார்க்கில் இருந்து தன்னாட்சி பெற்றது.
- 1949 - சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் -சீனத் தேசியக் கட்சியுடன் பெய்ஜிங்கில் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன.
- 1957 - இந்தியாவில் நயா பைசா நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1973 - புலிகளைக் காப்பதற்கான செயற்றிட்டம் இந்தியாவின் ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவில் தொடங்கப்பட்டது.
- 1976 - ஆப்பிள் கணினி ஸ்டீவ் ஜொப்ஸ், Steve Wozniak ஆகியோரால் தொடங்கப்பட்டது.
- 1979 - ஈரான் 98% மக்கள் ஆதரவுடன் ஓர் இஸ்லாமியக் குடியரசாகியது.
- 1981 - சோவியத் ஒன்றியத்தில் பகலொளி சேமிப்பு நேரம் முதற்தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1997 - ஹேல்-பொப் வால்வெள்ளி பூமியின் சுற்றுப் பாதை வீச்சைக் கடந்தது.
- 2001 - யூகொஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சுலோபதான் மிலோசெவிச் போர்க் குற்றங்களுக்காக காவற்றுறையினரிடம் சரணடைந்தார்.
- 2001 - நெதர்லாந்து சமப்பால் திருமணத்தை சட்ட பூர்வமாக்கிய முதலாவது நாடானது.
- 2004 - கூகிள் 1000 மெகாபைட் கொள்ளளவுள்ள ஜிமெயில் என்ற இலவச மின்னஞ்சல் சேவையை அறிமுகப்படுத்தியது.

**பிறப்புகள்**

- 1815 - ஒட்டோ ஃபொன் பிஸ்மார்க், ஜேர்மனிய அரசியலாளர் (இ. 1898)
- 1865 - ரிச்சார்ட் சிக்மோண்டி, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1929)
- 1875 - எட்கார் வாலஸ், ஆங்கில எழுத்தாளர் (இ. 1932)
- 1878 - சி. கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1958)
- 1919 - ஜோசப் மறி, நோபல் பரிசு பெற்றவர்
- 1929 - டி. கே. கோவிந்த ராவ் கர்நாடக இசைக் கலைஞர் (இ. 2011)
- 1933 - குளோட் கொஹென்- டனூட்ஜி, நோபல் பரிசு பெற்றவர்
- 1940 - வங்காரி மாதாய், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்

**இறப்புகள்**

- 1960 - துங்கு அப்துல் ரகுமான், மலேசியாவின் மன்னர் (பி. 1895)
- 1968 - லேவ் லண்டாவு, நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1908)
- 1976 - மக்ஸ் ஏர்ண்ஸ்ட், ஜேர்மனிய ஓவியர் (பி. 1891)
- 2007 - தி. வே. கோபாலையர், தமிழறிஞர் (பி. 1926)

**சிறப்பு நாள்**

முட்டாள்கள் தினம்

## முட்டாள்கள் தினம்



April fool....

இன்று ஏப்ரல் 1- உலகம் முழுக்க முட்டாள் களின் தினமாகக் கொணடாடப்படுகிறது.

இந்நாள் பெரியளவிலாகக் கொண்டாடப்படு வதில்லை என்றாலும், நண்பர்கள், குடும்பத்தினர் என தெரிந்த நபர்களிடம் வேடிக்கை செய்வதும் அவர்களை முட்டாளாக்கி மகிழ்வதிலும் பெரும்பாலான மக்கள் ஈடுபடுகிறார்கள்.

இன்று காலையிலேயே உங்களை ஏதாவது சொல்லி ஏமாற்றப் பார்ப்பார்கள். சிலர் சொல்லும் தகவல்கள் 100 சதவீதம் அப்படியே உண்மை தான் என்று நம்பும்படி இருக்கும். எனவே நம்பி ஏமாந்து விடாதீர்கள். கொஞ்சம் உஷாராக இருங்கள். ஆனால், சில நேரங்களில் ஏப்ரல் 1 அன்று காமெடி என்ற பெயரில் சிலர் செய்வது மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

பிரான்ஸ் பேரரசர் நெப்போலியன் போனபார்ட், ஆஸ்திரியாவைச் சேர்ந்த மேரி லூயிஸை 1810 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி அதாவது இன்றைய தினம் திருமணம் செய்துகொண்டார். இந்நாள் முட்டாள் தினம் என்பதால் மணமகளை எல்லோரும் கேலி செய்தனராம். ‘நெப்போலியன் உண்மையாகத் திருமணம் செய்யவில்லை. உன்னை முட்டாளாக்கவே திருமணம் செய்திருக்கிறார்’ என்று எள்ளி நகையாடியதாகக் கூறப்படுகிறது.

வரலாற்றில் பல நல்ல விடயங்களின் தொடக்க நாளாக இருந்தும் இதே ஏப்ரல் 1 தான் என்பதை மறக்கக்கூடாது. காரணம் 1935 ஏப்ரல் 1 ஆம் தகதி இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கப்பட்டது. 2004 இல் கூகுளின் மெயில் சேவை தொடங்கப்பட்டது என நல்ல விடயங்களின் தொடக்கம் நாள் ஏப்ரல்-1 தான் என்பது நினைவிருக்கலாம். இன்னொன்று வசந்த காலத்தின் வருகையை அறிவிக்கும் நாளும இதுவே.

# வெடிபொருட்கள் மீட்பு தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்



## இராணுவம் தலையிடாது என்கிறார் பாதுகாப்பு செயலர்

(கொழும்பு)

சாவகச்சேரியில் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான விசாரணைகளை நடத்த அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் என்று இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர்.

"தனியானதொரு சம்பவத்தை வைத்துக் கொண்டு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்என்று அரசாங்கத்தினால் முடிவுக்கு வர முடியாது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், கடந்த ஆறு ஆண்டுகளாக, படையினரும் பொலிஸாரும் புலிகளின் ஆயுதங்களை மீட்டு வருகின்றனர்.

இந்த ஆயுதங்கள் தொடர்பாக பொலிஸ் விசாரணைகளை மேற்கொள்ளும், சாவகச்சேரி விவகாரத்தை இராணுவம் கையாளாது. விசாரணைகளை பொலிஸ்துறையே கையாளும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மின்சாரசபை முகாமைத்துவத்தை கடுமையாக எச்சரித்தார் ரணில்



இலங்கை மின்சாரசபையின் முகாமைத்துவத்தினரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுமையாக எச்சரித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மின்சார தடைக்கான காரணங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இதற்கான அறிக்கையை ஜேர்மனின் மஸ்சினென் பாப்றிக் ரெய்ன்ஹு*சென் என்ற நிறுவனம் தயாரித்திருந்தது.

பியகம மற்றும் கொட்டுகொட ஆகிய மின்சார உப நிலையங்களில் ஏற்பட்ட வெடிப்புக்களை அடுத்தே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதேவேளை மின்சார சபையின் உயரதிகாரிகள், இலகுவான வழியில் தப்பிக்க முயற்சிக்காமல் தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார். (இ-5)

## கூட்டு எதிர்க்கட்சியின் ஜெனீவா முறைப்பாட்டுக்கு இரண்டு வாரத்தில் பதில்

கூட்டு எதிர்க்கட்சியினர் ஜெனீவாவில் செய்த முறைப்பாட்டுக்கு இரண்டு வாரங்களில் பதிலளிக்கப்படவுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி எதிர்நோக்கியுள்ள நிலைமை தொடர்பில் அனைத்து நாடாளுமன்ற சங்கத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமது உரிமைகள் முடக்கப்படுவதாக கூட்டு எதிர்க்கட்சியினர் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாடு தொடர்பில் இரண்டு வாரங்களில் பதிலளிப்பதாக அனைத்து நாடாளுமன்ற சங்கத்தின் பொதுச் செயலாளர் மாஜன் சுன்கொங் தெரிவித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கூட்டு எதிர்க்கட்சியின் 51 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் தமது உரிமைகள் முடக்கப்பட்டு வருவதாக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, ஜெனீவாவில் அமைந்துள்ள அனைத்து நாடாளுமன்ற சங்கத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 679

றொகான்



சிவகுமார்



கொடிகாமம்



ரகுதரன்




வின்ஜக்ஷன்




சந்துரு



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இரத்தக் களரிக்கும் நம்பிக்கைக்கும் இடையில் சிக்கியுள்ள தமிழர்கள்



இன்னமும், போரின் நினைவுகளை மறக்க முடியாது தமிழ் மக்கள் துன்பப்படுகின்றனர். தெருக்களில் கடமைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் கடந்த காலத்தை மேலும் நினைவூட்டுகின்றனர். புதிய அரசாங்கம் இராணுவத்தினரின் பிரசன்னத்தைக் குறைத்துள்ள போதிலும், இராணுவமயமாக்கல் என்பது இன்னமும் பெரியதொரு விவகாரமாகவே உள்ளது.

**இவ்வாறு Quartz India ஊடகத்தில், Tomasz Augustyniak எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்திய பாரதி.**

வெள்ளிக்கிழமைகளில், யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு பேரங்காடி (shopping mall) முன்புறமாக வாகனங்கள் நீண்ட வரிசையில் தரித்து நிற்பதைக் காணலாம். காற்றில் அற்புதமான வாசனை கலந்திருக்கும். குர்தாக்கள் அணிந்திருக்கும் தாய்மார்கள் தமது அழகிய பிள்ளைகளுடன் நிற்பதைக் காணலாம். இளைஞர்கள் தமது உந்துருளிகளில் இருப்பார்கள். இவர்களில் சிலர் இளம் பெண்களை நோட்டம் விட்டவாறு நிற்பதையும் இங்கு காணலாம்.

இங்கு சமீபத்திய இந்திய வெற்றிப்படங்கள் திரையிடப்படுகின்றன. பீட்சா, கோழிப் பொரியல், கேக் போன்ற உணவுப் பொருட்கள், குளிர்களி போன்றன விற்கப்படுகின்றன.

இந்த அங்காடியை நோக்கிப் பெருமளவான மக்கள் செல்வதால், யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களின் உரிமையாளர்கள் தமது விற்பனையை அதிகரிப்பதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கிலுள்ள யாழ்ப்பாணமானது, 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவுறும் வரை விடுதலைப் புலிகளின் கோட்டைகளில் ஒன்றாக விளங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மூன்று பத்தாண்டு கால யுத்தத்தின் போது 80 ஆயிரம் தொடக்கம் 1 இலட்சம் வரையான உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன், 2009 இல் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியின் ஐந்து மடங்கான 200 பில்லியன் டொலர் பொருளாதார இழப்பும் ஏற்பட்டது.

வடக்கு மாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாணமானது யுத்த காலத்தில் கண்ணிவெடிகளாலும் துப்பாக்கி ரவைகளின் பாதிப்புக்களைச் சந்தித்திருந்தது. இந்த நகரானது கடந்த சில ஆண்டுகளாக தன்னை மீளவும் புனரமைத்துக் கொள்வதில் பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகிறது.

வெளிநாடுகளிலிருந்து உறவினர்களால் அனுப்பப்படும் நிதி, தமது சேமிப்பு நிதி போன்றவற்றின் மூலம் யாழ்ப்பாணத்து தமிழர்கள் செழுமைமிக்கவர்களாகவும் வன்னி மற்றும் தென்னிலங்கையிலிருந்த தமது உறவினர்களை விட செழிப்பானவர்களாகவும் இருந்தனர். அண்மைய ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திலுள்ள பல இந்துக் கோயில்கள் மீளவும் புனரமைக்கப்படுகின்றன. இங்கு பல ஆடம்பர விடுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. நிதி வழங்கும் நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளை பல இடங்களில் காணமுடியும்.

அரசாங்க நிதியுடன் யாழ்ப்பாண நகர தொடருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளதுடன் 2014 தொடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரையான தொடருந்துப் போக்குவரத்து மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு சுற்றுலாத்துறையானது வளர்ச்சி பெற்று வருகிறது. யாழ்ப்பாண நகரின் கலாசார நிறுவகங்கள் விரிவுபடுத்தப்படுகின்றன. வீடுகள் கட்டப்படுகின்றன. புதிய வாகனங்களை மக்கள் கொள்வனவு செய்துள்ளனர்.

பொதுவாக, மக்கள் தமது நிதியை ஆடம்பர வாழ்விற்காகச் செலவழிக்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு குடும்பத்திற்கான மாதாந்த செலவீனமானது 2009 இல் சராசரி 158 டொலர்களாகவும், 2013 இல் இது 246 டொலர்களாகவும் அதிகரித்துள்ளது. வடக்கு மாகாணத்தின் சராசரி குடும்பச் செலவீனமானது இதன் இரண்டு மடங்காகும். இவற்றை வைத்துப் பார்க்கும் போது 2009 இலிருந்து யாழ்ப்பாணத்து வாழ் மக்களின் பொருளாதாரமானது வீழ்ச்சியுற்றுள்ளது என்பதை அறியலாம்.

பூகோளமயமாக்கலானது யாழ்ப்பாணத்தில் மேலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. இது பெரும்பாலும் இந்தியாவின் ஊடாகவே ஏற்பட்டுள்ளது. கொழும்பை விட இந்தியாவின் டில்லி மற்றும் சென்னையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை யாழ்ப்பாணத்து மக்கள் அறிந்து கொள்கின்ற வீதம் அதிகமாகும். இவர்களது குடும்பத்தவர்கள் பல நூற்றாண்டுகளாக இலங்கையல் வாழ்ந்து வந்துள்ள போதிலும், இந்தியர்கள் தமது சகோதரர்கள் என இந்த மக்கள் அதிகம் எண்ணுகின்றனர். இவர்கள் இந்திய தொலைக்காட்சி சேவைகளைப் பார்வையிடுவதுடன், தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இசையை ரசிக்கின்றனர். த்தாங்கள் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்காகவா அல்லது இலங்கை துடுப்பாட்ட வீரர்களுக்காகவா கரகோசம் செய்வது என்பதைக் கூட இந்த மக்கள் சிலவேளைகளில் மறந்து விடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் நடுத்தர நகரத்து மக்கள் மேற்குலக துரித உணவுகளையும் இந்திய பொப் கலாசாரத்தையும் நாடிச் செல்கின்றனர். இங்கு ஆடம்பர சாதனங்கள் பயன்படுத்தப்படுவதானது புதிய குறியீடுகளாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணமானது தற்போதும் பழமையைப் பின்பற்றுகின்ற ஒன்றாக உள்ளபோதிலும் உலகில் சுற்றுலா செய்யக்கூடிய மிகச் சிறந்த இடங்களில் இதுவும் ஒன்றாகக் காணப்படுகிறது. தற்போது யாழ்ப்பாணத்தின் உள்நாட்டு மக்கள் அதிகளவில் நுகர்வோர்களாக மாறிவருகின்றனர்.

'யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் முறைமையானது தற்போது மாற்றமடைந்துள்ளது. அதே போன்று இவர்களது பணச் செலவழிப்பு முறைமையும் மாற்றமுற்றுள்ளது' என உள்ளூர வர்த்தக மற்றும் தொழிற்றுறை சம்மேளனத்தின் பிரதி அதிபர் என்.நாதரூபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் முதியோர்கள் தமது கடந்த காலத்தை நினைத்து வருந்துவதாகவும் அவ்வாறானதொரு சூழல் யாழ்ப்பாணத்தில் இனியொரு போதும் வரப்போவதில்லை எனவும் கூறுகின்றனர். இந்த நகரின் சமூக வாழ்வியலின் அடிப்படை மாற்றமுற்றுள்ளது எனவும் முதியோர் சுட்டிக்காட்டுகின்றனர். போரின் போது தப்பிப்பிழைத்த யாழ்ப்பாணத்தவர்கள் பலர் தற்போது நாட்டின் வேறிடங்களில் வாழ்கின்றனர். பலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

'போரின் போது யாழ்ப்பாணத்தில் பல வீடுகள் அழிக்கப்பட்டன. இன்னும் பல பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்காகவே இவை இடிக்கப்பட்டுள்ளன. யாழ் நகர மக்கள் பலர் தாம் இன்று தென்னாசியாவில் சிறந்த வீடுகளைக் கொண்டுள்ளதாகக் கருதுகின்றனர்' என யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவின் பேராசிரியர் பி.அகிலன் தெரிவித்தார்.

போரின் பின்னர் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் மக்கள் பலவற்றை எதிர்பார்க்கின்றனர். ஆனால் இது சிலவேளைகளில் அதிருப்தியும் துயரம் மிக்கதாகவும் அமைகின்றது.

மக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் வியாபாரிகளின் எதிர்பார்ப்புக்கள் போன்றன அதிகமாகக் காணப்படுகின்றன. மக்கள் தமக்கான பொருட்களை வாங்குவதற்காக நிதி நிறுவனங்கள் கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர். 'கடனை அடைப்பதற்காக மக்களால் வழங்கப்படும் சில காசோலைகள் செல்லுபடியற்றதாகவும், சில கொடுப்பனவுகள் ஊழல் நிறைந்ததாகவும் காணப்படுவதை நாம் அவதானித்துள்ளோம். பெரும் நெருக்கடி ஒன்று ஏற்படப் போவதற்கான அறிகுறிகளே இவையாகும்' என கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் ஹற்றன் நசனல் வங்கியின் முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன் தெரிவித்தார்.

'2013 இல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறிய வர்த்தகர்கள் உட்பட 30 வர்த்தகர்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் உள்ளன. வர்த்தகர்கள் வங்குரோத்து நிலையில் தமது நிறுவனங்களை நடத்துவதால் அவற்றைக் கைவிட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது' என நாதரூபன் தெரிவித்தார்.

தனது வாடிக்கையாளரில் ஒருவர் தற்கொலை செய்து கொண்ட பின்னர் சுந்தரேஸ்வரன் போரின் பின்னான பொருளாதார மாற்றத்தின் பெறுபேற்றால் தற்கொலைகள் அதிகரித்துள்ளன என்கின்ற தலைப்பில் ஆக்கம் ஒன்றைப் பிரசுரித்திருந்தார்.

(தொடரும்)

# தமிழ் சினிமா வரலாறு

132

## மார்டன் தியேட்டர்ஸ் நிர்வாகப் பொறுப்பை ராமசுந்தரம் ஏற்றார்

...அவர்களில் ஒருவரான வில்லியம் பர்க் என்ற ஹாலிவுட் பட அதிபர் மாடர்ன் தியேட்டர்சுடன் கூட்டாக ஒரு படம் எடுக்க விரும்பினார். அதற்கு சுந்தரம் சம்மதித்தார்.

அதைத் தொடர்ந்து ஹாலிவுட் நட்சத்திரங்கள் சேலம் வந்தனர். தமிழ் நடிகர்களான எம்.என். நம்பியார், ஏ.கருணாநிதி ஆகியோரும் இதில் நடித்தனர். மைசூர் காடுகளில் படப்பிடிப்பு நடந்தது.

இந்தப்படம் 1952 இல் வெளிநாடுகளில் திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடியது. இந்தப்படத்தை திரையிடுவதற்க்காக டி.ஆர்.சுந்தரம் அமெரிக்கா போய் வந்தார்.

டி.ஆர்.சுந்தரம் மறைவுக்குப்பின் ஸ்டுடியோ நிர்வாகத்தை கவனித்து வந்த 3 பேர் கொண்ட குழு சிதிராங்கி, அம்மா எங்கே? என்ற இரண்டு படங்களைத் தயாரித்தது. இரண்டு படங்களும் தோல்வியைத் தழுவின.

தொடர்ந்து இவ்வாறு தோல்வி ஏற்பட்டால் தங்கள் எதிர்காலம் கேள்விக்குறி ஆகிவிடும் என்று தொழிலாளர்கள் கருதினார்கள். எனவே இனி என்ன செய்வது என்று ஆலோசிக்க எல்லாத் தொழிலாளர்களும் ஊழியர்களும் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தினார்கள்.



### ராமசுந்தரம்

டி.ஆர்.சுந்தரம் உயிரோடு இருந்த காலத்தில் அவர் மகன் ராமசுந்தரம் பலமுறை ஸ்டுடியோவுக்கு வந்திருக்கிறார். பல இலாகாக்களைப் பார்வையிட்டிருக்கிறார்.

அவர் வேறு தொழிலில் ஈடுபட்டு பெரிய தொழிலதிபராக வேண்டும் என்பது சுந்தரம் கண்ட கனவு. அட்டைப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க தீர்மானித்து ஸ்டுடியுாவுக்கு அருகிலேயே மூன்று ஏக்கர் நிலத்தையும் வாங்கிப் போட்டிருந்தார். இயந்திரங்களுக்கும் ஆர்டர் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த சமயத்தில் சுந்தரம் காலமானார். தந்தை விட்டுச் சென்ற பொறுப்பை தனயன் தொடர வேண்டும் என்று தொழிலாளர்கள் விரும்பினார்கள். ஸ்டுடியோவின் நிர்வாகப் பொறுப்பை ராமசுந்தரம் ஏற்க வேண்டும் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி அதை நிர்வாகத்திடம் கொடுத்தார்கள்.

இதனால் அட்டைப் பெட்டி தயாரிக்கும் தொழற்சாலை தொடங்கும் திட்டத்தை ராமசுந்தரம் கைவிட்டு மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார்.

இரண்டு படங்கள் வரிசையாகத் தோல்வி அடைந்துவிட்டதால் அடுத்த படத்தை வெற்றிப்படமாக உருவாக்க வேண்டும் என்ற உறுதி கொண்டார். மாடர்ன் தியேட்டர்சின் 100 வது படமாகத் தயாரிக்க உஸ்தாத்தோன்-கி-உஸ்தாத் என்ற இந்திப் படத்தைத் தழுவி ஒரு கதையை உருவாக்கி வைத்திருந்தார் டி.ஆர்.சுந்தரம். தந்தை தேர்வு செய்து வைத்திருந்த கதையைப் படமாக்க ராமசுந்தரம் தீர்மானித்தார்.

(தொடரும்)

# தமிழர்கள் முறையிட்டால்...

(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி)

...எனினும், அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் சரத் பொன்சேகா தொடர்பான முறைப்பாட்டை அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் கவனத்தில் எடுக்கவில்லை என்றே கூறியது.

ஆயினும், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியச் செயலாளர் இன்ங்பேர்க் செக்வர்ஸ் அரசாங்கத்தின் அக்கூற்றை மறுத்து தாம் முறைப்பாட்டை ஏற்றுள்ளதாகத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கூட்டு எதிர்க்கட்சியினர் முறையிடப்போவதாக முன்வைக்கும் குற்றச்சாட்டில் பிரதானமாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி பற்றிய விடயம் உள்ளது.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக உத்தியோகபூர்வமாக அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு வழங்க முடியாது என்பது ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

இவ்வாறான ஒரு நிலையில் அரசியல் ரீதியில் எதிர்க்கட்சியினராக தம்மைப் பிரகடனப் படுத்தி மகிந்த தரப்பினர் இயங்குகின்றனர்.

அவர்கள் பிரதான எதிர்க் கட்சிக்குரிய அங்கீகாரத்தினைப் பெறுவது வெகுஜன அரசியலை திறம்பட நடத்துவதற்கான உத்தியாக உணர்கின்றனர்.









பாராளுமன்ற நடைமுறை ரீதியில் தமக்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைக்கவில்லை என்பதை மறுத்து அவ்வாறு தாம் நிராகரிக்கப்பட்டமை கூட அரசியல் பழிவாங்கல் என சிங்கள மக்களிடத்தில் வியாக்கியானப்படுத்த முயற்சிக்கின்றனர்.

அதன் மூலம் அரசியல் அனுதாபம் அதிகரிக்கும் எனவும் நம்புகின்றனர். அதற்காகப் பாடுபடுகின்றனர்.

இந்த இடத்தில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்ற கோஷத்துடன் களம் இறங்கியுள்ள மகிந்த தரப்பினர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியினையும் இன்னும் ஒரு வகையில் இலக்கு வைத்து செயற்படுகின்றமை ஒரு முரண் நிலை என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றுக்கு அப்பால் தமிழ் மக்களுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், வெள்ளைவான் கடத்தல்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் வாதிகளின் படுகொலைகள் உள்ளிட்ட பாரதூரமான மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேசத்திடம் முறையிடுவதை கடந்த அரசாங்கம் விரும்பவில்லை. அதனை அனுமதிக்கவும் இல்லை.

தற்போது கூட்டு எதிர்க் கட்சியாகத் தம்மைப் பிரகடனப் படுத்தி தமது உரிமைகள் நசுக்கப்படுவதாகக் குற்றச்சாட்டினை முன்வைத்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல்ல முன்னைய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளராக இருந்தவர்.

இவர் வெளியிட்டு வந்த கருத்துக்களில் உள்நாட்டில் மீறப்பட்ட மனித உரிமைகளுக்காக சர்வதேச முறையீடுகளை கடுமையாக விமர்சித்து வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

உதாரணத்திற்கு கடந்த ஜூலை 2014 காலப்பகுதியில் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமிக்கும் ஆணைக்குழு முன் சாட்சிய மளிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட இவர் தெரிவித்திருந்தார்.

கெஹெலிய ரம்புக்வெல்ல பதவியில் இருக்கும்போது அனைத்துலக விசாரணையினை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அந்த விசாரணைக்கு இடமளிப்பதால் நாட்டின் இறைமை பாதிப்புக்கு உள்ளாகும் எனவும் தெரிவித்து வந்தவராவார்.

மேலும ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் முன் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் சாட்சியமளிக்க முடியாது எனத் தெரிவித்திருந்தார். காரணம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் இறைமையைப் பாதுகாப்போம் என்றே உறுதிப்பிரமாணம் செய்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக சர்வதேசத்தின் பொறிமுறையினை தமிழ் மக்கள் விடயத்தில் நிராகரிக்கும் தரப்புக்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு மாத்திரம் சர்வதேச அணுகுமுறை அவசியம் என்பது புதிரானது.

தமது உரிமைகள் மீறப்படுகின்றன எனக் கருதும் போது அதற்கு நிவாரணம் தேடி வெளியுலக அமைப்புக்களை நாடுவதற்கு முயற்சிக்கின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற அமைப்பிடம் பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்ல முடியுமாயின் மக்கள் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்காக தங்கள் நாடுகள் கைச்சாத்திட்டுள்ள சமவாயங்களின் பிரகாரம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையினை நாடுவது தேசத்துரோகமாகவும் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் முயற்சியாகவும் பார்க்கப்பட்டது எந்த வகையில் நியாயமாகும்?

(நிருபா) (முற்றும்)

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் - 2016
# ஜொலிஸ்ரார் அணி காலிறுதிக்கு தெரிவு

கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் 1991 ஆம் ஆண்டிலிருந்து நடத்திவரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 10 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



இப்போட்டியில் ஜொலிஸ்ரார் அணி, ஸ்கந்தாஸ்ரார் அணியை 10 ஓட்டங்களால் வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களை பெற்றது.

கல்கோர்கன்-17, சஜீகன்-30, கஜாரு ஆட்டமிழக்காது- 56, தீபன்-18 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் தரணி-2, சிந்துஜன்-2, துவீசன்-2, கனுஜன்-3, சிந்துஜன்-1 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 29.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 158 ஓட்டங்களை பெற்றது.மிதூஸன்-18, துபீஸன்-25, கதியோன்-28, புருசோத்மன்-24, விஷ்ணுபிரகாஸ்-10 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் குகானன்-3, கல்கோகன்-4, வாமணன்-2, பிரசன்னா-1 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு ஜொலிஸ்ரார் அணி 5.78 புள்ளி களையும் ஸ்கந்தா ஸ்ரார் அணி 2.48 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (கு)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

## யாழ்.மாவட்ட ரீதியாக நடைபெறும் தாச்சிப்போட்டி தொடரின் முடிவுகள்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத். தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விபரங்கள் வருமாறு.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து "பி' விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் உடுவில் ஆலடி சிந்து "பி' விளையாட்டுக் கழகம் 5:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மானிப்பாய் பெஸ்ட் ஹோம் விளையாட்டுக்கழக அணிக்கும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற நான்காவது ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணி 10:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஐந்தாவது ஆட்டத்தில் புதுமடம் வைகறை "ஏ' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் புதுமடம் வைகறை "ஏ' விளையாட்டுக் கழக அணி 10:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (க)

## சுரேன், ரஜன் சிறப்பாட்டம் இறுதியாட்டத்தில் சைனிங்ஸ்

சுரேன், ரஜன் ஆகியோரின் அசத்தலான கோல்களுடன் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம்.



ரேவடி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப் போட்டியில் நேதாஜீ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

சுரேன், ரஜன் ஆகியோரின் அசத்தலான கோல்களுடன் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (கு)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

நல்லூர் ரோட்ரக் கழகத்தினரால் நடத்தப்பட்ட அணிக்கு 7 வீரர்கள் 6 ஓவர்கள் கொண்ட மென்பந்துப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

போட்டியானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நவாலி அட்டகிரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டி கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும். விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் தனு- 077 309 2931, வெனிசன்- 077 494 8103 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க).

## இன்றைய போட்டிகள்

97 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி (செற்றப்) நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும்

8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியும் மோதவுள்ளன.

பருத்தித்துறை உதைந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் உதைப் பந்தாட்டப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சாவற்காடு மகாத்மா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)







கிளிநொச்சி பொன்நகர் கண்ணன் விளையாட்டு கழகத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் கழக தலைவர் செ.பிரதீபன் தலைமையில் கிளி/ சிவபாத கலையக பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கலந்து சிறப்பித்தார். அவருடன் சிறப்பு விருந்தினராக பொன்நகர் கிராம சேவகர் சிவில் பாதுகாப்பு பிரிவு சிசி பிரதீப் இராணுவ அதிகாரி மற்றும் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். சுவட்டு நிகழ்வு, பாரம்பரிய நிகழ்வு மற்றும் நட்பு ரீதியான கரப்பந்தாட்ட போட்டி ஒன்றும் இடம்பெற்றது. அத்துடன் வீரர்களுக்கான வெற்றி கிண்ணம் பரிசில்களும் வழங்கப்பட்டது. அந்நிகழ்வினைப் படங்களில் காணலாம்.

நன்றே செய்வாய்; பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே
-திருவாசகம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மகுடி ஊதும் பாம்பாட்டிகள் அதைத்தான் செய்வார்கள்

சாவகச்சேரியில் தற்கொலை அங்கி, கிளைமோர் குண்டுகள் மற்றும் குண்டுகளை வெடிக்க வைப்பதற்காக பற்றிகள் என்பன மீட்கப்பட்டதான செய்திகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

தற்கொலை அங்கிகள், கிளைமோர் குண்டுகள் என்பன சாவகச்சேரியில் மீட்கப்பட்டதான சம்பவத்தை அடுத்து முன்னாள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் செய்திகள் சமாதான சூழ்நிலையில் பெரும் தாக்கமான தகவல்கள் என்பது ஏற்புடையதே.

இதேவேளை குறித்த அங்கிகள், குண்டுகள் மீட்கப்பட்டதான தகவல்கள் குறித்து நீதியான விசாரணைகள் நடத்தப்படுவது அவசியம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது என்று இலங்கையின் முன்னைய அரசு கூறி வந்த நிலையில் புதிய நல்லாட்சியில் விடுதலைப்புலிகள் மீண்டும் தலை தூக்கக்கூடிய வாய்ப்புக்கள் உண்டென்ற பிரசாரங்களும் தென்பகுதியில் நடந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் தற்கொலைத் தாக்குதல் அங்கிகளும், கிளைமோர் குண்டுகளும் சாவகச்சேரியில் மீட்கப்பட்டன என்ற செய்தியை தென்பகுதியில் உள்ள இனவாத ஊடகங்கள் எப்படி வெளியிடும் என்பதை நாம் சொல்லி எவரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையிருக்காது.

ஆக, குறித்த சம்பவம் தொடர்பில் தென்பகுதி ஊடகங்கள் ஒப்பனை செய்து செய்தி வெளியிட்டு அதை தென்பகுதி மக்களை அப்பாவி நம்பிவிட தமிழ் மக்கள் இன்னமும் போராட்டத்தை கைவிடவில்லை என்பதான காட்டப்பு காட்டப்படும்.

யுத்தத்தின் கோரத் தண்டவத்தில் அகப்பட்டு, பெற்ற பிள்ளைகளை இழந்து, சொத்திழந்து, சுகமிழந்து ஏன்? மனிதனாய் பிறந்தோம் என்று கண்ணீர் விடுகின்ற தமிழ் மக்கள் தங்களின் இருப்பு, காணாமல்போன பிள்ளைகளின் நினைப்பு, சிறைகளில் அடைபட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை என்ற நினைவுகளுடன் காலத்தைக் கழிக்கின்ற வேளையில்,

இடையிடையே ஆயுதங்கள் மீட்பு, குண்டுகள் கண்டுபிடிப்பு என்ற செய்திகள் முன்னாள் போராளிகளின் இதயத்தை கருக்கி விடுகின்றன.

ஒரு பெரும் வேட்கையுடன் போராட வெளிக்கிட்டு, பின்னர் எல்லா இழப்புகளையும் சந்தித்து, புனர்வாழ்வும் கண்ட பின்னர் நிம்மதியாக வாழக்கூட முடியவில்லை என்றால், முன்னாள் போராளிகளின் மனநிலை எப்படியிருக்கும் என்பதை அறிவதில்; உணர்வதில் நம்மிடம் யார்தான் உளர்?

எனவே, வடபுலத்தில் இராணுவம் நிலைகொள்ள வேண்டும் என்று ஆளுந்தரப்பு நினைத்தால் பயங்கரவாத அச்சுறுத்தல் நாட்டில் தொடர்ந்து இருக்கிறது என்பதை நிரூபிப்பது கடினமான விடயமன்று.

எது எப்படியாயினும் பாம்பாட்டிகள் தங்கள் பெட்டிகளில் வைத்திருக்கின்ற பாம்புகளை வெளியில் விடுவார்கள். பின்னர் மகுடியை எடுத்து வாசிப்பார்கள். பெட்டிப்பாம்புகள் மகுடிக்கு ஆடிக்கொள்ளும். அடேங்கப்பா! எங்கள் வீட்டில் வளவில் பாம்புகள் இருந்துள்ளன.

நல்ல காலம் பாம்பாட்டி வந்து மகுடி வாசித்ததால் பாம்புகள் இனங்காணப்பட்டன என்று நம்பி பாம்பாட்டிக்கு பணம் வழங்கப்படும். இந்த நம்பிக்கைகள் பாம்பாட்டிகள் இருக்கும் வரை தொடரவே செய்யும்.

என்ன செய்வது! பாம்பாட்டியும் பாம்பும் சேர்ந்து கொண்டால் மக்கள் நம்பி ஏமாறுவர். இதேபோல் தான் எங்கள் நிலைமையும்.

ஆம்! நாங்கள் சிறுபான்மை இனம். சிறுபான்மை இனத்தின் தலைமையும் ஆளுந்தரப்புடன் இணைந்து அனுபவிக்கும் போது எங்களால் என்ன செய்ய முடியும். நடப்பதைக் கண்டுகொள்வோம் அவ்வளவு தான்.

# வவுனியா நல்லிணக்க கிராமத்தில் வித்தியா குடும்பத்தினருக்கும் வீடு!

## நாளை மறுதினம் கையளிக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வவுனியா கொக்கலிய பிரதேசத்தில் நல்லிணக்க படைவீரர்கள் கிராமம் எனும் பெயரில் அமைக்கப்பட்டுள்ள படைவீரர்களுக்கான வீட்டுத்திட்டத்தில் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் குடும்பத்தினருக்கும் வீடொன்றை அமைத்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

எதிர்கால இலங்கையை சுபிட்சமாக மாற்றுவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதனடிப்படையில் பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையின் கீழ் இலங்கை இராணுவத்தின் 56 ஆவது படைப்பிரிவின் ஒத்துழைப்புடன் வவுனியா கொக்கலிய பிரதேசத்தில் சுமார் 40 ஹெக்டேயர் பரப்பில் நல்லிணக்கப் படைவீரர்கள் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 51 வீடுகளையும் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

குறித்த வீட்டுத்திட்டத்தில் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் குடும்பத்துக்கும் வீடொன்றை அமைத்துள்ளமை விசேட அம்சமாகும்.

குறித்த படைவீரர் கிராமத்தில் தமிழ்ப் பெண் வீராங்கனைகளுக்கும் தமிழ் பெண்களை திருமணம் செய்த இராணுவ வீரர்களுக்கும் வீட்டுத்திட்டம் அமைப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அதிக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார். (சே-12)

# சத்திய தரிசனம்



## தங்கம் போல் துன்பப்படுவோம்

❖ காட்டில் இருக்கும் சிறிய விறகிற்கு தீ வைத்தால், விறகு மட்டும் எரிவதோடு நின்று விடாது. காட்டையே அழித்துவிட்டுத்தான் அணையும். அதுபோலவே, மனிதர்களின் மனதில் உண்டாகும் தீய எண்ணம் என்னும் தீயானது அவர்களை மட்டுமின்றி, அவர்களை சுற்றியுள்ளவர்களையும் அழித்துவிடும். ஆகவே, எண்ணங்கள் சுத்தமாக இருக்க வேண்டும்.

❖ எந்த வேலையையும் முழு ஈடுபாட்டுடன் செய்யுங்கள். அவை உங்களுக்கு விருப்பம் இல்லாத வேலை என்றாலும், உங்களை நம்பி கொடுக்கப்பட்டிருப்பதால் அதனை எத்தகைய சிரத்தை எடுத்தாவது சிறப்பாக முடிக்க வேண்டும். அவ்வாறில்லாமல், பெயருக்கு இயந்திரம் போல செய்யக்கூடாது. இது, எண்ணெய் இல்லாத விளக்கில், பிரகாசிக்காமல் எரியும் திரிக்கு ஒப்பானதாகும். மனதில் "ஈடுபாடு" என்ற எண்ணெய்யை விட்டு பணி செய்தால்தான், முடிவும் சுடர்போல பிரகாசமாக இருக்கும்.

❖ உலோகங்களில் எல்லாம் உயர்ந்த தங்கத்தை தீயில் போட்டு உருக்குகின்றனர். இதனை, தங்கத்தை வெறுப்பதற்காக தீயில் போடப்பட்டதாக சொல்லமுடியாது. அதை தீயில் இட்டால், அழுக்குகள் தானாக நீங்கிவிடும். அதைப்போலவே, மனிதர்கள் தங்களிடமுள்ள மன அழுக்குகளை நீக்கி, பரிசுத்தமானவர்களாக திகழவே கடவுள் துன்பங்களைக் கொடுக்கிறார். இதனைப் புரிந்து கொண்டு துன்பத்தை இன்பமாக ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். இத்தகையவர்கள், கடவுளுக்கு ஒப்பானவர்கள் ஆவர்.

# நிதி மோசடி

## சிசிலிக்கு பிணை

கோல்டன் கீ நிறுவனத்தின் நிதி மோசடி தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிசிலி கொத்தலாவலை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பிணையில் விடுவிக்க, கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி அவரை ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் 10 இலட்சம் ரூபாய் சரீரப் பிணைகள் இரண்டில் விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சந்தேகநபரின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணைகள் ஏப்ரல் 27-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சிசிலி கொத்தலாவல தாக்கல் செய்த மீளாய்வு மனுவை விசாரித்த நீதிமன்றம் அவரை பிணையில் விடுவிக்க அனுமதியளித்தது.

இதனையடுத்து கொழும்பு மேல் நீதிமன்றம் சந்தேகநபருக்கு பிணைவழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சே-12)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் பாரதிபுரம், மலையாளபுரம், அம்பாள்குளம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குகன் நகர் கிராமம், மாமடு சந்தியிலிருந்து பதவியாவரை, CEC கல்லூரைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பிள்ளையார் சுழி போடுவதன் காரணம் தெரியுமா?

எதை எழுத ஆரம்பிச்சாலும் பிள்ளையார் சுழி போட்டுட்டு தான் எழுதறோம். இல்லையா? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.உலகில் முதன் முதல் எழுத ஆரம்பித்தவரே நம்ம பிள்ளையார் தான். என்ன ஆச்சரியமா இருக்கா? ஆமாம், வியாசரின் மகாபாரதத்தை அவர் சொல்லச் சொல்லத் தன் தந்தத்தை உடைத்து எழுத்தாணியாக்கி எழுதி வந்தவர் பிள்ளையார் தான்.

எழுதிக் கொண்டே போக வேண்டும். ஒரு கட்டத்தில் வியாசருக்குப் பயமே வந்துவிட்டது. என்னடா இது! இந்தப் பிள்ளையார் எழுதும் வேகத்துக்கு நம்மால் சொல்ல முடியாது போலிருக்கே என்று.

உடனே என்ன செய்தார் தெரியுமா? நான் சொல்லும் ஸ்லோகங்களின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு எழுத வேண்டும் என்று பிள்ளையாரிடம் சொல்லி விட்டார். வேதமுழு முதல்வனான பிள்ளையாரைச் சோதனை போட்டால் சரியா வருமா? அவரும் அப்படியே சரி என்று அர்த்தம் புரிந்து கொண்டு எழுத ஆரம்பித்தாராம்.

இதற்காகவே ரொம்ப யோசித்து, யோசித்துச் சிக்கலான பதங்களையும், அர்த்தங்களையும் கொண்ட ஸ்லோகங்களை வியாசர் சொல்ல விநாயகர் மௌனமாய் அதன் பொருளை உணர்ந்து எழுதி வந்தார்.

பிள்ளையார் சுழிக்கு இன்னொரு காரணமும் உண்டு. சுழி என்பதே வளைசல். வக்ரம் என்றுதான் அர்த்தம். விநாயகரின் தும்பிக்கை வளைந்து சுருட்டிக் கொண்டு இருக்கிறது அல்லவா? பிள்ளையார் சுழி எப்படிப் போடுகிறோம்? முதலில் ஒரு வட்டம், அதுவும் அரை வட்டம், பின் ஒரு நேர்கோடு. பொதுவாய்ச் சக்கரங்கள் சுற்றுவதற்கு மத்தியில் ஒரு அச்சு வேண்டும்.

அந்த அச்சு வளையாமல் நேராக இருந்தால் தான் சக்கரம் சுற்றும். நாம் தீபாவளிக்கு விஷ்ணு சக்கரம் சுற்ற ஒரு நேரான கம்பியைத் தான் உபயோகிக்கிறோம் இல்லையா? அது போலத்தான். இந்த உலகம், கிரகங்கள் அனைத்தும் வட்டமாய்த்தான் சுற்றி வருகின்றன. சூரிய சந்திரர் உட்பட. ஆனாலும் அவை எல்லாவற்றுக்கும் ஒரு ஆதாரமான சக்தி இருக்கும் இல்லையா?

அது ஒரு நேர்கோடாய்த் தான் இருக்க முடியும். இதை நினைவு கூரவும் நாம் வட்டத்தை அரை

சக்கரங்களை இணைத்து. அதாவது வட்டத்தில் இருந்து நேர்க்கோடாக மின்சாரத்தை எடுக்கிறோமோ அது போலதான் இதுவும்.

"அ" "உ" "ம" மூன்றும் இணைந்தது தான் "ஓம்" என்னும் பிரணவம். அதை ஆங்கிலத்தில் எழுதும்போது "AUM"என்றே எழுத வேண்டும். இந்த அரை வட்டத்தில் ஆரம்பித்து நேர்கோடாக முடிகிற பிள்ளையார் சுழிக்கு இது தான் அர்த்தம். சிவசக்தியின் ஐக்கியத்தையும் குறிக்கிறது.

சம்ஹாரம் செய்யப் படுகிறோம் அல்லவா? இந்த மூன்றில் நடுவில் உள்ள காக்கும் எழுத்தையே பிள்ளையார் சுழியாகப் போட்டு, அனைத்துக்கும் ஆதாரமும் இவரே, முடிவும் இவரே, சரணும் இவரே என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த அமர்வு மட்டக்களப்பில்

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வரும்ஜனாதிபதி ஆணைக்குழு தனது அடுத்த கட்ட அமர்வை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தவுள்ளது என அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேமாதம் இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளதால், புதுவருடம் முடிவடைந்தகையோடு மட்டக்களப்பில் அமர்வுகள் இடம்பெறும் என அவர் கூறினார்.

பரணகம ஆணைக் குழுவின் பதவிக்காலம் கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. எனினும், பணிகளை இறுதிப்படுத்துவதற்காக மூன்று மாத கால பதவி நீடிப்பை ஜனாதிபதி வழங்கினார்.

போர்க்காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக தமது ஆட்சியின்போது ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வல் பரணகம தலைமையில் மூவரடங்கிய குழுவொன்றை மகிந்த ராஜபக்ஷ அமைத்திருந்தார்.

இந்த விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில், உள்ளகப் போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் அதன் விடயப்பரப்பை மகிந்த விஸ்தரித்ததுடன், அனைத்துலக சட்ட திட்டம் தொடர்பில் பரணகம குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக டெஸ்மன் டி சில்வா தலைமையில் அறுவரடங்கிய ஆலோசனைக் குழுவொன்றையும் அமைத்திருந்தார்.

இந்நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின்னரும் பரணகம குழுவுக்கு பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கினார்.

விசாரணைகளை முன்னெடுத்த பரணகம ஆணைக்குழு போர்க்குற்றங்கள் தொடர்பிலான தமது இறுதி விசாரணை அறிக்கையை கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் கையளித்தது.

அத்துடன், காணாமற்போனோர தொடர்பில் இடைக்கால அறிக்கையொன்றும் கையளிக்கப்பட்டது. எனினும், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் இன்னும்முடிவடையவில்லை.

இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே தான், இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக தற்காலிக பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இறுதி அறிக்கை ஜூன் மாதமளவில் சமர்ப்பிக்கப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

இதேவேளை, மே மாதத்துக்கு பின்னர் குறித்த ஆணைக்குழு கலைக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)



மலையக கலை, கலாசார சங்கத்தினால் கண்டி கெப்பட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்ட முன்னாள் வடக்கு, கிழக்கு ஆளுநரும் பிரபல நடிகருமான காமினி பொன்சேகாவின் நினைவு தின நிகழ்வில் யாழ்.எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பாலுக்கு இரத்தின தீபம் விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை லக்கி லேண்ட் பிஸ்கட் கம்பனி உரிமையாளர் விஸ்வகீர்த்தி எஸ்.முத்தையா வழங்கி வைத்தார்.


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988RC<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:52செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4030 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 8சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/4866 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 36செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: DIPLOMA/தனியார் தொழில்<br>தொ.இ: B/4031 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 50சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4869 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L/அரசதொழில்<br>தொ.இ: B/4033 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 2சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4870 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 18சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: BPES, MPES/விரிவுரையாளர்<br>தொ.இ: B/4036 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 73செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA, B.COM/அரசதொழில்<br>தொ.இ: G/4872 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ஆபாச இறுவெட்டுக்களை வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

புறக்கோட்டையில் ஆபாச வீடியோ இறுவெட்டுக்களை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொணட சுற்றிவளைப பின்போதே நேற்று முன்தினம் புறக்கோட்டை, மல்வத்தை வீதியில் வைத்து குறித்த நபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

36 வயதான சந்தேகநபர் வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரை கைது செய்த வேளை இவரிடமிருந்து 1202 டீ.வீ.டீ. இறுவெட்டுக்கள் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ள பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-5)

## விளையாட்டுவிழா பிற்போடப்பட்டுள்ளது

(கரணவாய்)

புற்றளை சித்தி விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (இ-60)

# செய்தித்துளிகள்

## வெளிநாட்டு பிரஜையின் பணப்பையை திருடிய சிறுவர்கள் கைதானார்கள்

வெளிநாட்டு பெண்ணின் பணப்பையை திருடிய 4 பாடசாலை மாணவர்கள் பண்டாரவளை ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட மாணவர்கள் ஹாலிஎல பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் 14 மற்றும் 15 வயதுககுட்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஆயுதங்களை ஒப்படைக்க மன்னிப்புக்காலம் அறிவிப்பு

உரிய அனுமதியின்றி ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை ஒப்படைப்பதற்கான மன்னிப்புக் காலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னிப்புக் காலத்தின் இறுதித்தினம் இந்த வாரத்தில் அறிவிக்கப்படவுள்ளது.

இந்தக்காலப்பகுதியில் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை ஒப்படைக்க முடியும் என பாதுகாப்பு செயலாளர் கருணாசேன அறிவித்துள்ளார்.

இதன் நிமித்தம் பணத் தொகைகளும் ஆயுதங்களை ஒப்படைப்பவர்களுக்கு வழங்கப்படும் என்றும அவர் தெரிவித்தார். (இ-5

## ஹோட்டலுக்கு தீ வைத்த சம்பவம்; கனடாவில் இலங்கையர் கைதானார்

கனடாவின் வுட்ஸ்டோக் எனும் இடத்திலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் இலங்கையர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த தீ வைப்புடன் தொடர்புடையதாக கூறப்படும் இவர் அந்த நாட்டு விமான நிலையத்தில் வைத்தே கைதாகியுள்ளார்.

இலங்கையில் இருந்து இவர் மீண்டும் கனடாவுக்கு திரும்பிய போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் ஜெயக்குமார் சண்முகநாதன் என தெரியவந்துள்ளது. (இ-5)

## டெங்கு பெருகும் சூழலை வைத்திருந்த 565 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்

டெங்கு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த 565 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக தேசிய தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ப்ரசிலா சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் 29ஆம் திகதி ஆரம்பமான டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமானது எதிர்வரும் 4ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## 24 வருடங்களின் பின் சவுதியிலிருந்து சடலமாக வந்த இலங்கை பணிப்பெண்!

சவுதி அரேபியாவிற்கு 24 வருடங்களுக்கு முன்னர் பணிப் பெண்ணாக சென்று எந்தவொரு தகவலும் இன்றி இருந்த பெண்ணொருவரின் சடலம் விமானம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் ஆனைமடு பிரதேசத்தை சேர்ந்த பெண் (வயது 62) என தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் உறவினர்கள் இந்த தகவலினை உறுதிப்படுத்தியுள்ளனர். (இ-5)

## 5 வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் உள்ள ஐந்து வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்றுக் அதிகாலை மட்டக்களப்பு-வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள ஐந்து வர்த்தக நிலையங்களே இவ்வாறு உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகர் உட்பட பல பகுதிகளில் அண்மைக்காலமாக இனந்தெரியாதவர்களினால் வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வீடு புகுந்து சண்டை

## மூவருக்கு ரூபா ஐம்பது ஆயிரம் ஆட்பிணை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி உட்புகுந்து சண்டையிட்டுக்கொண்ட மூன்று பேரையும் தலா ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான கிராம அலுவலர் வதிவிடத்தை உறுதிப்படுத்திய ஆட்பிணையிலும் செல்லுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து சண்டையிட்டுக் கொண்ட மூவரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பூநகரிப் பொலிசார் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.கே.பிரபாகரன் முன்னிலையில் ஆயர்படுத்தியதையடுத்து குறித்த மூவரையும் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய தலா ஐம்பதாயிரம ரூபா பெறுமதியான ஆட்பிணைகளில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (செ-15)

# சட்டவிரோத மணல் அகழ்வு

## மூவருக்கு ஐந்தாயிரம் ரூபா தண்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற மூன்று சாரதிகளுக்கு தலா ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற மூன்று டிப்பர் வாகனங்களையும் அதன் சாரதிகளையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதி மனறில் நீதிவான் ஏ.ஜே.பிரபாகரன் முன்னி லையில் ஆஜர்படுத்தியதையடுத்து தலா ஐயா யிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (செ-15)

♦♦♦♦♦♦♦♦❖❖❖♦♦♦♦♦♦♦♦

## இருபத்தையாயிரம் ரூபா தண்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றியவருக்கு இருபத்து ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பொலிசார் கைது செய்து நேற்றைய தினம் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ,ஜே.பிரபாகரன் முன்னிலையில் ஆயர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு இருபத்து ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (செ-15)

# காப்புறுதிப் பத்திரம் இல்லை

## ரூபா 5 ஆயிரம் தண்டம்

(மல்லாவி)

கிளிநொச்சி பூநகரிப்பகுதியில் காப்புறுதிப் பத்திரமின்றி லொறி வாகனத்தை செலுத்தியவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பகுதியில் காப்புறுதிப்பத்திரமின்றி லொறி வாகனத்தை செலுத்தி சென்ற ஒருவரை கைது செய்து நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஏ.ஜே.பிரபாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (செ-15)

## 150 சிங்கள...

கிரிக்கெட் போட்டி பார்ப்பதற்கென தொலைகாட்சி வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிச்சாலைக்குள் தமிழ் மாணவர்கள் சென்றுள்ளனர். அவர்கள் கிரிக்கெட் போட்டி முடிந்து வெளியில் வந்தபோது 150க்கு மேற்பட்டசிங்கள மாணவர்கள் இணைந்து தமிழ் மாணவர்கள் மீதுதடிகள் பொல்லுகளால் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளனர். அப்போது பல்கலைக் கழக காவலாளிகள் உட்படவேறு சிலர் சம்பவ இடத்துக்கு வந்து தமிழ் மாணவர்கள் மீதான தாக்குதலை தடுத்துள்ளனர்.

இத் தாக்குதலில் 4ஆம் வருடத்தில் கற்கும் ஒருமாணவனும், 3ஆம் வருடத்தில் கற்கும் 2 மாணவர்களும் 2ஆம் வருடத்தில் கல்வி கற்கும் 5 மாணவர்களும் படுகாயமடைந்த நிலையில் பதுளை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தால் பதற்றமடைந்த ஏனைய தமிழ் மாணவர்கள் தமது பிரதேசத்துக்கு வருவதற்காக ஆயத்தமாகிய போது குறித்த சிங்கள கலாசார மாணவர்களால் மிரட்டலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக் கழகத்தில் மோசமடைந்துள்ள நிலையை அறிந்த அனைத்து பல்கலைக கழக மாணவர் ஒன்றியம் உடனடியாக ஒரு குழுவை சம்பவ இடத்துக்கு நேற்றையதினம் மாலைஅனுப்பி வைத்துள்ளது.

தாக்குதலைத் தொடர்ந்து 2ஆம் வருட 3ஆம் வருட மாணவர்களுக்கான விடுதிகள் மூடப்பட்டு அனைத்து மாணவர்களையும் வெளியேறுமாறும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக நிர்வாகம் உத்தரவும் பிறப்பித்துள்ளது. (செ-9)

## மைத்துனர்...

என்பவர் உயிரிழந்தார்.

கடந்த 2007ஆம் ஆண்டு கந்தசாமி ஜெயனின் மனைவி திருநெல்வேலி பனிக்கர் வீதியிலுள்ள வீட்டில் தூக்கில் தொங்கி உயிரிழந்தார். தனது தங்கையின் மரணத்துக்கு மைத்துனனே காரணம் எனக் கருதிய சதீஸ், தனது மைத்துனரை கத்தியால் குத்தக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்பட்டு அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் சதீஸைக் கைது செய்தனர்.

கத்தியால் குத்தி மரணம் விளைவித்த குற்றத்துக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ் மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வுபத்திரம் தாக்கல் செய்யப்பட்டுவழக்கு நடைபெற்றுவந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் சம்பவத்தை நேரில் கண்ட 4 சாட்சியங்கள் இருந்த போதிலும் 2 சாட்சியங்கள் வெளிநாடுசென்ற காரணத்தால் 2பேருடைய சாட்சியங்கள் மன்றில் பதிவுசெய்யப்பட்டன. முதல் சாட்சியான சோம சுந்தரத்தின் மனைவி சாட்சியமளிக்கையில்தான் குளியலறையில் இருந்துவெளியே வரும் போதுஒருசத்தம் கேட்டது. ஐயோ என்ன ஜெகன் குத்திப்போட்டான் என இதயன் கத்தினார். நான் அங்குபார்த்தபோது ஜெகன் கறுத்த ஜக்கட் அணிந்தபடி கத்தி ஒன்றுடன் அப்பகுதியில் இருந்து வெளியேறினார் என சாட்சியமளித்தார்.

அதேபோன்று அயல் வீட்டுக்காரரான சோமசுந்தரத்தின் மகன் சாட்சியமளிக்கையில், சம்பவம் நடைபெற்றநேரம் ஒருசத்தம் கேட்டது அப்போது நான் பார்த்தபோதுகறுப்பு ஜக்கட்டுடன் ஒருவர் செல்வதை கண்டேன் எனசாட்சிய மளித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக எதிரி சாட்சியமளிக்கையில், நான் இந்தகொலையை செய்யவில்லை. சம்பவம் இடம்பெற்றநேரம் நான் கோண்டாவிலில் இருந்தேன் என தெரிவித்தார்.

இச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரி சாட்சியமளிக்கையில், குறித்த சம்பவம் தொடர்பாக சதீசிடம் விசாரணை மேற்கொண்ட போது தனது வீட்டில் கத்தி இருப்பதாக தெரிவித்தபோது அதைக் கைப்பெற்ற சென்றோம். அவருடைய வீட்டில் சோதனை மேற்கொண்ட போது இரத்தக் கறையுடன் காற்சட்டையும் கறுப்புநிற ஜக்கட்டையும் கைப்பற்றினோம் எனசாட்சியமளித்து சான்றுப் பொருட்களையும் மன்றில் ஒப்படைத்தார்.

அதேபோன்று மருத்துவ அதிகாரி சி.சிவரூபன் சாட்சியமளிக்கையில் மரணத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதத்தால் அவருடைய நெஞ்சுப்பகுதியில் காயம் விளைவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அனைத்து தரப்பு சாட்சியங்களையும் ஆராய்ந்து நீதிபதி தீர்ப்பளிக்கையில்,

சம்பவ தினத்தன்று குறித்தஎதிரி திருநெல்வேலி பனிக்கர் வீதியில் அமைந்துள்ள அவருடையமைத்துனராகிய இதயனுடைய வீட்டிற்குசென்றுஅவருடன் முரண்பட்டு அயல் வீடுவரை துரத்திச் சென்று கத்தியால் குத்திகொலை செய்தமை நியாயமான சந்தேகத்துக் கப்பால் எண்பிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த கொலை குற்றத்துக்கு எதிரியை குற்றவாளி என மன்று தீர்ப்பளிக்கிறது

எதிரியிடம் ஏதாவது கூற விரும்பு கிறீரா என கேட்டபோது எனக்கு அம்மா, அக்கா உள்ளனர் குடும்பத்தை நான்தான் பார்க்க வேண்டும். எனக்கு இன்னும் திருமணமாகவில்லை எனக்கு கருணை காட்டுமாறு கோரினார்.

எதிரி தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி கருத்து தெரிவிக்கையில், மனித உரிமைகளை கடைப்பிடிக்கும் பொறுப்பில் இலங்கை உள்ளது. ஒருநபர் உயிர் வாழும் சுதந்திரத்தை யாரும் பறிக்க முடியாது. எனவே அவருக்கு அளிக்கப்பட விருக்கும் மரண தண்டனையை தவிர்த்து குறைந்த தண்டனை வழங்கும்படி மன்றை கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் நீதிபதி தீர்ப்பளிக்கையில், குற்றவாளி உண்மையை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் தண்டனைகள் குறைவாக இருக்கும். எதிரி ஒத்துக்கொள்ள வில்லைஎனவே சட்டத்தின் அடிப்படையில் அவருக்கு மரண தண்டனை விதித்து மன்றுதீர்ப்பளிக்கிறது.

இருப்பினும் நீதிபதியின் தனிப்பட்ட கருத்தாக குறித்த நபரின் வாழ்க்கையை கருத்தில் கொண்டு மரண தண்டனையை தவிர்க்குமாறு மாண்புமிகு ஜனாதிபதிக்கு கருணை விண்ணப்பம் நீதிபதியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## அரசியல் தீர்வை...

அந்தவகையில் யாழ்ப்பாணத்திலும் நாங்கள் வெற்றிகரமாக எமது செயற்பாடுகளை செய்திருந்தோம். இந்நாட்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். பிரதான இரு கட்சிகள் இணைந்து செயற்படும் இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கும் இலக்குகளை நாங்கள் அடைய வேண்டும்.

கடந்த காலங்களில் பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படாமல் காலம் தாமதிக்கப்பட்டன. இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற விடயத்தில் அரசியல்வாதிகள் பந்தாடிவந்தனர். அதனாலேயே வடக்கில் ஆயுத கலாசாரம் உருவாகியதுடன், பிரபாகரன் என்ற இளைஞர் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளை அனை வரும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறாயின், கடந்த காலங்களில் நடைபெற்ற வெற்றிகளையும் அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். எனினும், யுத்த வெற்றி உள்ளிட்ட முக்கிய விடயங்களை ஒரு குடும்பத்துக்கு மாத்திரம் புகழை வைத்துக் கொள்ள முடியாது என்றார் டிலான். (செ-12)

நாட்டில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் கடந்த 2014ஆம் ஆண்டு நாம் தீர்மானம் எடுத்தோம். அதற்கமைய கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு முழுமையான ஆதரவை வழங்கினோம். அதேபோல் கடந்த பொதுத் தேர்தலின் போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கைகோர்த்து தேசிய அரசாங்கத்தை உருவாக்கினோம். அந்த முயற்சிகள் சரியாக முன்னெடுத்து செல்லப்படுகின்றது. அவ்வாறான நிலையில் இப்போது நாம் மேலும் பலமான வகையில் செயற்பட வேண்டும் என்று பிரதமர் தெரிவித்தார். (செ-12)

## மகிந்தவிற்கு...

த்து கண்ணீர் வடிக்கும் நபர் நான் இல்லை. எதிர்காலத்தை எண்ணியே எனது வேலைத்திட்டம் அனைத்தும் அமைந்திருக்கும். நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி நாட்டை சீரழிக்க நான் இடமளிக்க மாட்டேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் மீள் நிர்மாண வேலைத்திட்டத்தை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் கட்சி ஆராய்ந்து வருகின்றது. கட்சியின் செயற்குழு கூட்டத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் நாம் கருத்துகளை வெளிப்படுத்துவோம். புதிய இலங்கைக்கு ஏற்ற வகையில் கட்சியை மாற்றியமைக்கும் வகையில் தான் இந்த வேலைத் திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம். எமது கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளனர் அவர்களின் வழிகாட்டல் உள்ளது. அதேபோல் கட்சியில் இரண்டாம் நிலையில் உள்ள தலைமைகளுக்கு பொறுப்புகளை கையளித்து நாட்டை முன்னெடுத்து செல்லும் தலைமைத்துவத்தை உருவாக்கி கொடுத்துள்ளோம். அதேபோல் மூன்றாம் நிலையில் உள்ள இளம் தலைமுறைக்கு சிறந்த வழிகாட்டல் மற்றும் பொறுப்புகளை பாரமளிப்போம். அதற்கான வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

## மன்னாரில்...

னை நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், இதனால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்.சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ32 பாதையில்உள்ள மறவன் புலவு பிரதேச வீடொன்றிலிருந்து தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருட்கள் கடந்த புதன் கிழமை மீட்கப்பட்டது.

இதேவேளை, மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக் கடவை கமநலசேவைகள் நிலையத்திற்கு சொந்தமான காணியின் பின் பகுதியில் இருந்தும் கடந்த புதன்கிழமை மாலை ஒரு தொகுதி வெடிபொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதனையடுத்து மன்னார் மாவட்டத் தில் பாதுகாப்பு பலப்படுத்தபட்டு வருவதாக தெரியவருகிறது. இதனடிப் படையில் ஏ14 மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் தள்ளாடி இராணுவமுகாமிற்கு முன்பாக சோதனை சாவடி பொலிஸாரால் அமைக்கப்பட்டு வருகிறது.

நேற்று வியாழக்கிழமை அமைக்கப்பட்ட குறித்த சோதனை சாவடியூடாக செல்லும் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் யுத்தகாலத்தில் இருந்த சோதனைகெடுபிடி மீண்டும் ஆரம்பித்து விடுமோ? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில்தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-281)

## இலங்கை மின்...

கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே பிரதியமைச்சர் அஜித். பி. பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

பிரதியமைச்சர் தொடர்ந்தும் இங்கு உரையாற்றுகையில்,

கடந்த நாட்களில் நாடு முழுவதும் ஏற்பட்ட மின்சாரதடை தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் நியமித்த ஆணைக்குழுக்கள் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை வெளியிட்டுள்ளன. அப் பரிந்துரைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும்.

அதேவேளை அவசர மின்தேவையின் போது மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. மின்சார சபை தனியார்மயமாக்கப்படாது. ஆனால் நிர்வாக ரீதியில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

சம்பூர் அனல் மின்நிலையம் அமைக்கப்பட வேண்டியது நாட்டுக்கு அவசியமான தொன்றாகும். இது தொடர்பாக எதிர்ப்புக்கள், விவாதங்கள் மிக நெருக்கடிகளை அவசரப்படாமல் அணுக வேண்டிய விடயங்களாகும். எனவே இது தொடர்பில் அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு இணக்கப்பாட்டுடன் பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டு இத்திட்டத்தை முன்னெடுப்போம்.

நீர்மின் உற்பத்தி, அனல்மின் உற்பத்தி மட்டும் நாட்டுக்கு போதுமானதல்ல. எதிர் காலத்தில் மாற்று ரீதியான உற்பத்திகளுக்கு நாம்போக வேண்டி ஏற்படும். அண்மையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 2 இலட்சம் பேருக்கு இலவசமாக மின்னிணைப்புக்கள் ஏற்படுத்தி இலவசமாகவே மின்சாரம் வழங்கப்பட்டது. அத்தோடு மின்சாரத்தின் செயற்திறன், மின்சாரத்தின் கனம் தொடர்பில் விசேட ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது பழைமையான மின்வாசிப்புமானிகளே உள்ளன இவை அனைத்தும் எதிர் காலத்தில் மாற்றப்படும்.

ஸ்மாட் மீட்டர்கள் இணைப்புக்கள் ஏற்படுத்தப்படும் இந்த மீட்டர்களை இலங்கையில் தயாரிப்பதற்கு முடிவு செய்துள்ளோம். ஜனாதிபதி கலந்து கொண்ட கூட்டத்தில் திட்டமிட்டு மின்வெட்டு நடைபெற்றதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (செ-12)

## நாமலின் வங்கிக்...

மில்லியன் பெறுமதியான பங்குகளை கொளவனவு செய்தமை தொடர்பில் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் பணச் சலவை சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கு முன்னர், ஹெலோ கோப் மற்றும் கவர்ஸ் நிறுவனங்களின் 7 அதிகாரிகள் வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடைவிதித்திருந்தது.

ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க இது குறித்து நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ பல்வேறு ஒப்பந்தங்கள் மூலமாக மோசடியான வகையில் பணத்தை சம்பாதித்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பணத்தையே ஹெலோ கோப் நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்ய பயன்படுத்தியுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (செ-12)

## உரிய முறையில்...

நாட்டுப் பயணங்களுக்காக தாம் ஒருபோதும் தனிப்பட்ட விமானங்களை எடுத்துச் செல்லாது சாதாரண பயணிகள் விமானத்திலேயே மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிரிவினருடன் சென்று வந்துள்ளதையும் ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

இலங்கை விமானச் சேவை பாரிய நஷ்டத்திற்கு முகம்கொடுத்திருப்பது கடந்த காலத்தில் இருந்த தலைவர்கள் அவர்களது நண்பர்களுடன் வெளிநாட்டுப் பயணங்களுக்காக தனியான விமானங்களை எடுத்துக்கொண்டு சென்று பல நாட்கள் அதனை அந்த நாடுகளில் நிறுத்தி வைத்திருந்தமையால் ஏற் பட்டவையாகுமென்றும் மக்கள் பணத்தை விரயமாக்கும் இத்தகைய செயற்பாடுகளுக்கு தமது ஆட்சிக் காலப்பகுதியில் முடிவுகட்டியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று நிதி அமைச்சின் புதிய கட்டிடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

நிதி ஒழுக்கம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது அரசியல்வாதிகளைப்போன்று அரசாங்க அதிகாரிகளினதும் பொறுப்பாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வருடாந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வருடத்தின் ஆரம்பம் முதலே பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நிதி ஒழுக்கமும் சிறந்த முகாமைத்துவமும் பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் வழியுறுத்தினார்.

1400 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த 07 மாடி கட்டிடத் தொகுதி அதிநவீன வசதிகளைக் கொண்டிருப்பதோடு, இது முழுமையாக நம்நாட்டு பொறியியலாளர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமசிறி தர்ம மகா சங்க சபையின் மகா நாயக்க தேரர் இத்தேபானே தம்மாலங்கார தேரர், கிரிந்தே அஸ்சஜி தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரும் ஏனைய சமய தலைவர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, அமைச்சர்களான நிமல் சிறிபால த சில்வா, ரிஷாத் பதுர்தீன், டி.எம்.சுவாமிநாதன், இராஜாங்க் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன், நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-12)

## புலிகள் எப்போது...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனை அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக, அதற்கு ராஜபக்ச குடும்பம் உதவுகிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் போது அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை வைத்தே நாமல் ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினராகிய ராஜபக்சக்களும் அரசியல் செய்து வருவதாக தெரிவித்த அமைச்சர் சுஜீவ சேனசிங்க, விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்கும் என்ற கனவில் அவர்கள் வாழ்வதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்க இடமில்லை என்பதில் ஜனாதிபதியும் பாதுகாப்பு செயலாளரும் உறுதியாக உள்ளனர் ஆனால் ராஜபக்ஷவினர் நாட்டில் இனவாதத்தை பரப்பி புலி அச்சத்தை உருவாக்கி நல்லாட்சியை கவிழ்க்க முயற்சித்து வருகின்றனர்.

இவர்களது நடவடிக்கை இந்நாட்டில் மீண்டும் ஒரு யுத்த வரலாற்றை தோற்றுவிப்பதையே நோக்கமாக கொண்டுள்ளதை அவர்களது பேச்சுக்கள் நிரூபிக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## அலுவலக கடமைக்கு...

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த ஒருமாத காலமாக சிங்கப்பூரிலும், இலங்கையிலும் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர் அமைச்சர் ராஜித கலந்து கொண்டது சத்திரசிகிச்சையின் பின்னான அவரது முதலாவது பொது நிகழ்வாகும்.

இந்நிலையில் நேற்று சுகாதார அமைச்சின அலுவலகத்துக்கு வருகை தந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, பொதுமக்களை சந்திப்பது, அமைச்சின் எதிர்காலத்திட்டமிடல்கள் குறித்த கலந்துரையாடல்கள் என்று வழமை போன்று பரபரப்பாக இயங்கத் தொடங்கியுள்ளார்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன துரிதமாக குணமடைய பிரார்த்தித்து இலங்கையின் நாலா பாகங்களிலும் அனைத்து மத வழிபாட்டுத் தலங்களிலும் விசேட பிரார்த்தனை நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மண்டைதீவில்...

தினம் இரவு 9.30 மணியளவில் மண்டைதீவு அம்மன் கோவில் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மண்டைதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சூசைப்பிள்ளை நீற்றப்பர் (வயது-67) என்பவரே உயிரிழந்தவராவார்.

மகனான நீற்றப்பர் ஜெயச்சந்திரன் (வயது-29) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (ந-30)

## எறிகணை மீட்பு...

பட்டதை அடுத்து அங்கு விரைந்த இராணுவத்தினர் ஷெல்லினை பாதுகாப்பாக மீட்டு செயலிழக்கச் செய்துள்ளனர். (செ-15)

## பொது எதிரணியினர்...

ரணியால் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் சொற்பளவான சிங்கள மக்களே கலந்து கொண்டதாக ஐ.நா தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)


ECONOMICS HALL
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L 2018
கலை, வர்த்தகம்
ஆரம்பம் : 02.04.2016 காலை : 9.00 மணி
அனைத்துப் பாடங்களும் ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
(4048)

Bsc
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான (மார்கழி 2016 பரீட்சைக்கான) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L ல் முழுமை சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- பதிவுகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட யாழ் இணைப்பாளராகி புதிய உயர் கல்லூரியினூடாக நடைபெறுகின்றன.
- இப்பட்ட நெறியானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
- பதிவு முடிவு திகதி 10-04-2016
- பரீட்சைக்கள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.

காமராசர் பல்கலைக்கழகம் யாழ் இணைப்பாளர்
புதிய உயர் கல்லூரி ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P No : 021 222 8148, 0215689477
0773144762 , 0778469721
(C-4179)

வீட்டுப் பணிப்பெண் தேவை
தங்குமிடம் சாப்பாடு இலவசம்
இடம்: வல்வெட்டித்துறை
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு : 0775995659
(4054)

வேலையாள் தேவை
பிரபல உணவகத்துக்கு றொட்டி தயாரிப்பவர் உடன் தேவை
0772270191
(C-4183)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டுவீதி, யாழ்நகர்
A/L 2018
கலை, வர்த்தக தொழில்நுட்ப பிரிவுகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
02-04-2016 சனி 9.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்
T-P - 0774696695
(C-4184)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L - 2018
கலைப்பிரிவு
ECO. M.C.சுதாகரன்
LOG. வாகீசன்
GEO. சபீசன்
Plsci. மயூரன்
TAM. கோவர்த்தன்
H/C. N.T தரன்
HIST. பிரதீபன்
Chri. பீற்றர்
வர்த்தகப்பிரிவு
ECO. M.C. சுதாகரன் (யாழ் பிரபல ஆசிரியர்)
ACC.றொஜிந்தன் (வலிகாமம் பிரபல ஆசிரியர்)
B.ST S.கிருஸ்ணா
ஆரம்பம் 2.04.2016 சனி 9மணி
0776629137
(C-4172)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்.நகர்
கே.கே.எஸ் வீதி, இணுவில்
(இரு இடங்களிலும்)
ஊடகவியல்/ MEDIA
A/L 2018 பிரிவு II
ஆரம்பம் : 02.04.2016 சனிக்கிழமை
யாழ். நகர் - 8.00 a.m
இணுவில் - 4.00 p.m
ஆசிரியர். என்.கஜிதரன் (B.A) (Hon) Spl in media
Note: BARATHY சித்தன்கேணியிலும் ஆசிரியரின் வகுப்புக்கள் நடைபெறுகின்றன
பிரிவு- II சனி -2.00 p.m
(C-4176)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
O/L - DAY CLASS
பிரிவு 2 ஆரம்பம் 04.04.2016
8.00 - 200
- யாழ் நகரில் O/L Day Class இங்கு மட்டுமே
- பிரிவு 2ற்கு 60 மாணவர்கட்கு மட்டுமே அனுமதி
- தூர இட மாணவர்கட்கு விடுதிவசதி செய்து தரப்படும்.
- கடமை கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
- 2015 95% மாணவர்கள் O/L பரீட்சையில் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.
0776629137
(C-4172)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.